# தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

நவம்பர் 2007

விலை ரூ.10/-





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மதுரை-சாத்தமங்கலத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தைத் திறந்துவைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர். (30.10.2007)




மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர்
மு. கருணாநிதி அவர்கள்
மதுரை, விளாச்சேரியில்,
பரிதிமாற்கலைஞர்
நினைவில்லத்தைத்
திறந்துவைத்தார்கள்.
மாண்புமிகு அமைச்சர்
பெருமக்கள் உடன் உள்ளனர்
(31.10.2007)

# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038

ஐப்பசி - கார்த்திகை நவம்பர் 2007

மலர் : 39 இதழ் : 5



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

**முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க.இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிழற்படர்கள்

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர்.பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழைதிருத்துபவர்

**ஜி. சந்தானம்**



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.



தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரற் பாற்று**

உலகத்தை வாழவைப்பது மழையாக அமைந்திருப்பதால். அதுவே அமிழ்தம் எனப்படுகிறது.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


❖ இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே அழிக்க முடியாத இடத்தை. மறைக்க முடியாத ஒரு இடத்தைப் பெற்றவர் தேவர் திருமகனாவார் .................. 2

❖ மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் மணிமண்டபம் மற்றும் திருவுருவச்சிலையைத் திறந்துவைத்து. அவர்தம் மரபுரிமையருக்கு பணி நியமன ஆணை வழங்கினார் .................. 8

❖ பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார் .................. 11

❖ கருமம் ஒன்றே கண்ணாயினார் என்ற பொன்மொழிக்கேற்ப நடந்து கொள்வீர்களேயானால் மற்றவர்களையும் நடக்கச் சொல்வீர்களேயானால். அது நாட்டை வெகுவாக உயர்த்தும். நம் எதிர்காலத்தை உயர்த்தும்! .................. 14

❖ இந்த நாள் சட்டப்பேரவையில் ஒரு பொன்னாள். சமூக நீதி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான நாள் - சட்டமன்ற உரை .................. 18

❖ பகைவராலும் புகழப்பட்ட மாவீரர்கள் சின்ன மருது - பெரிய மருது - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் .................. 21

❖ தமிழக அரசின் புதிய தொழில் கொள்கை - 2007 .................. 27

❖ டெல்லி-மும்பை தொழில் முற்றம் போல சென்னை - பெங்களூரு தொழில் முற்றத்தை ஏற்படுத்துவீர்! -மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் .................. 30

❖ ஒன்றரை ஆண்டுக் காலத்தில் பல அரிய சாதனைகளை பலரும் அறியக்கூடிய சாதனைகளை நாம் நிறைவேற்றியிருக்கிறோம் - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் .................. 31

❖ 3ஆவது கட்டமாக வழங்கிட 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்திட அரசு முடிவு .................. 34

❖ தூத்துக்குடி மாவட்டம் - உடன்குடியில் 1.600 மெகாவாட் திறன்கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம் .................. 35

❖ புதிய தொழிற்சாலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்குவதை உறுதி செய்கிறோம் .................. 45

❖ **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**

- ☐ அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஒளித்தோற்ற கலந்தாய்வு .................. 52
- ☐ நாமக்கல் மாவட்டத்திற்கு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு .................. 54
- ❖ கலைஞர் அவர்களின் அரசு கொடுத்த வாக்குறுதிகளை தவறாமல் நிறைவேற்றி வருகிறது - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உரை ..... 65


**அட்டைப் பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை :* மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புதிய தொழிற்கொள்கையை (2007) வெளியிட. மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர்.க.அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார். (5.11.2007)

*நான்காம் பக்க அட்டை :* பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டார். (30.10.2007)



# இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே அழிக்க முடியாத இடத்தை, மறைக்க முடியாத ஒரு இடத்தைப் பெற்றவர் தேவர் திருமகனாவார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

"பசும்பொன் என்பது தேவர் அவர்கள் பிறந்த ஊர் என்று சொல்லப்படுகிறது அல்ல. பசும்பொன் என்பது தேவர் அவர்களுடைய உள்ளத்தை குறிப்பிடுகிற ஒரு சொல்லாகும். அத்தகைய உள்ளத்திற்கு சொந்தக்காரரான தேவர் திருமகனார் அவர்களுக்கு நாம் நூற்றாண்டு விழா நடத்துகின்றோம். ஒரு கட்சியின் சார்பாக – ஆளுங்கட்சியின் சார்பாக எடுக்கின்ற விழா என்று கொள்ளாமல் – ஆளுங்கட்சி அல்லாதவர்களும் எல்லாக் கட்சியிலே உள்ளவர்களும் இணைந்து – இணைந்து நடத்த முடியாவிட்டாலும் கூட அவரவர்கள் தங்களுடைய அன்பை, மரியாதையை, பாசத்தை வெளிப்படுத்துகின்ற வகையில்



இன்றைய தினம் இந்த நூற்றாண்டு விழாவிலே பங்குபெற்று தங்களுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தேவர் திருமகனாருக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்துநடைபெறுகின்ற அரசு இதுஎன்ற காரணத்தால் இந்த அரசின் சார்பாக அத்தகைய எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நிருவாகிகளையும், நண்பர்களையும் நான் வாழ்த்த, பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த விழாவிலே எனக்கு முன்னால் பேசிய நம்முடைய நண்பர்கள் வரதராஜன் அவர்களும், கோ.க.மணி அவர்களும் குறிப்பிட்டதைப்போல் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கலந்துகொண்டு உரையாற்ற வேண்டிய காங்கிரஸ் கட்சியினுடைய தமிழகத் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள் வர இயலாத எதிர்பாராத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். நேற்று காலையிலே 10.30 அல்லது 11 மணி அளவிலே கூட சென்னையிலே அண்ணா அறிவாலயத்திலே நடைபெற்ற திருமண விழாவிலே நானும் அவரும் கலந்துகொண்டு அந்த விழாவிலே இங்கே பயணமாகின்ற செய்தியை என்னிடத்திலே குறிப்பிட்டார். மாலையிலே எனக்கு கிடைத்த தகவல் அவர் இவ்வாறு தாக்கப்பட்டிருக்கிறார், குத்தப்பட்டிருக்கிறார், ஒரு பயங்கரமான தாக்குதலில் இருந்து தப்பியிருக்கிறார் என்ற செய்தி எனக்கு கிடைத்தது. உடனடியாக ஏற்ற அரசு உதவிகளை அவருடைய உயிரைக் காப்பாற்றுகின்ற அளவிற்கு மருத்துவர்களைக் கொண்டும், அவருடைய உயிரைப் போக்கடிப்பதற்கு முயன்றவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு காவல்துறை உடனடியாக செயல்பட வேண்டும் என்றும் அவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லிவிட்டு காலையிலே நானும் நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்களும், கோ.க.மணி அவர்களும் மருத்துவமனைக்கு நேரில் சென்று அவரை நலம் விசாரித்துவிட்டு இங்கே வருகிறோம். அவர் விரைவில் முழு நலம் பெற வேண்டுமென்று இந்தக் கூட்டத்திலே இருக்கின்ற அத்தனைபேர் சார்பிலும் என்னுடைய விழைவைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த வன்முறை கண்டிக்கத்தக்கது. இரவு நேரத்திலே பயணம் செய்து கொண்டிருந்த ஒருவர் திடீரென்று கார் வழிமறிக்கப்பட்டு தாக்கப்படுகிறார் என்றால் அது உள்ளபடியே எந்த விழாவிற்காக



நாமெல்லாம் இங்கே குழுமியிருக்கிறோமோ, எந்த சமுதாயத்தினுடைய ஒற்றுமை ஓங்க வேண்டும் என்று இன்றைக்கு முழக்கமிடுகிறோமோ, அந்த முழக்கத்திற்கு எதிராக நம்முடைய குறிக்கோளுக்கு மாறாக நடைபெற்றுவிட்ட ஒன்று. அதை வன்மையாக அரசின் சார்பிலும், நான் சார்ந்துள்ள என்னுடைய தலைமையில் உள்ள தி.மு.கழகத்தின் சார்பிலும் நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்களுடைய சார்பிலும் கண்டிக்க கடமைப்பட்டிருக்கின்றேன். விரைவில் அதற்கான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு உரிய தண்டனை பெறுவார்கள் என்ற நம்பிக்கையை நான் இந்த விழாவிலே அளிக்கின்றேன்.

மறைந்தும் மறையாத பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களுடைய நூற்றாண்டு விழா இது. இங்கே பேசிய போது இந்த மண்டபத்தை எழுப்பியதற்கு காரணமே கலைஞர்தான் என்று சொன்னார்கள். மதுரையிலே இருக்கின்ற தேவர் சிலை கலைஞரால்தான் வைக்கப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் அந்த விளம்பரங்களைத் தேடிக்கொள்வதற்காக இங்கே வரவில்லை. சிலை வைத்தால் போதாது. அந்த சிலைக்கு உரிய உருவத்திற்கு சொந்தக்காரர் என்ன உள்ளத்தோடு பாடுபட்டாரோ, எந்த வகையில் நாட்டிற்கு, சமுதாயத்திற்கு உழைத்தாரோ அந்த வகையிலே நாமும் உழைத்தால்தான் அந்தப் பாதையில் நாம் நடந்தால்தான் சிலை வைப்பதற்கும், அவரது பெயரால் நினைவுச் சின்னங்களை எழுப்புவதற்கும் பொருள் உண்டு என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

பசும்பொன் தேவர் திருமகனார் நூற்றாண்டை முன்னிட்டு அவரது பிறந்த நாளான 30.10.2007 க்கு முன்பு தென் மாவட்டங்களில் வாழுகின்ற சில சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட குழு மோதல்களைத் (Group Clashes) தொடந்து பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கான சட்டப்பூர்வமான உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப் படுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார். கொலை, கற்பழிப்புபோன்ற வழக்குகள் தவிர பிற வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இந்த உத்தரவு பொருந்தும்.

அனைத்து சமூகத்தினரிடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தின் அடையாளமாக இதனை எடுத்துக் கொண்டு அனைத்துத் தரப்பினரும் சமத்துவ நோக்குடன் ஒற்றுமையும் அமைதியும் காத்திட முன் வர வேண்டுமெனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரை மாநகரத்திலே ஒரு மாபெரும் சிலை அவருக்காக வைக்கப்பட்டது. அந்தச் சிலையை திறந்து வைப்பதற்கு இந்திய குடியரசுத் தலைவர் வி.வி.கிரி அவர்களே வந்தார்கள். உங்களுக்குத் தெரியும். அப்பொழுது கிரி அவர்கள் தேவர் அவர்களைப் பற்றி பாராட்டிய அந்த உரை இன்றைக்கும் நம்முடைய காதுகளில் ஒலித்து கருத்திலே நிறைந்திருக்கக்கூடிய உரையாகும். இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே அழிக்கமுடியாத இடத்தை, மறைக்கமுடியாத ஒரு இடத்தைப் பெற்றவர் தேவர் திருமகனாவார்கள். குறைந்த வயதுதான், 55 ஆண்டுகள்தான் வாழ்ந்தார் என்றாலும் அந்த 55 ஆண்டு வாழ்க்கையும் 100 ஆண்டுகளில் ஒரு மனிதன் செய்ய வேண்டிய அத்தகைய அருமையான செயல்களை செய்து பேறும் புகழும் பெற்றுத் திகழ்ந்தவர் தேவர் திருமகன் என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய தேவர் இன்று இல்லையென்றாலும் அவர் இருக்கிறார், அவருடைய கொள்கைகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவருடைய எண்ணம் பலிக்க நாமெல்லாம் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்வதுதான். இந்த நல்ல நாளில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமாக சூளுரை என்பதை சொல்ல விரும்புகின்றேன்.

இங்கே பேசிய தலைவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய வரதராஜன் அவர்கள் பேசும்போது மாணவர்களுக்கு அவர்களுடைய விடுதிகளிலே தரப்படுகின்ற தொகை மிகக் குறைவு. அதைக் கொஞ்சம் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டார். தேவர் திருமகனுடைய நூற்றாண்டு விழா தினத்தையொட்டி நீங்கள் அடையாளமாக இதைச் செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இப்பொழுது கொடுக்கக்கூடிய தொகை எவ்வளவு இருந்தது அல்லது எவ்வளவு உயர்த்தப்பட்டது என்ற கணக்கை தெரிந்து கொண்டால் அவர்களுடைய கோரிக்கையையொட்டி நாம் ஆய்ந்து நடவடிக்கை எடுக்க வழி பிறக்கும்.

பள்ளி மாணவர்களுக்கெல்லாம் விடுதிகளில் மாதம் ஒன்றுக்கு, ஒருவருக்கு 300 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது இந்த ஆட்சியில் ஏற்கெனவே அது 400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை நான் நினைவூட்ட விரும்புகின்றேன்.

கல்லூரி மாணவர்களுக்கு முன்பு 400 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது அவர்களுக்கு 500 ரூபாய் வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய் இவைபோன்ற சில்லறைச் செலவுகளுக்காக பள்ளி மாணவர்களுக்காக ஏற்கெனவே 15 ரூபாய் வழங்கப்பட்டது. இப்பொழுது அது உயர்த்தப்பட்டு 25 ரூபாய் வழங்கப்படுகிறது. கல்லூரி மாணவர்களுக்கு சோப்பு, எண்ணெய் போன்றவைகளுக்கு ஏற்கெனவே 25 ரூபாய் வழங்கப்பட்டது. இப்பொழுது 35 ரூபாய் வழங்கப்படுகிறது. ஒரு பெரிய விழாவில் ஒரு பெரிய தலைவருக்காக நடைபெறுகிற இந்த நூற்றாண்டு விழாவில் இந்தியாவிலே உள்ள ஒரு பெரியக் கட்சிகளிலே ஒருவரான நம்முடைய வரதராஜன் அவர்கள் ஒரு கோரிக்கையாக அதை வைத்தபிறகு நான் அதைப்பற்றி எதுவுமே சொல்லாமல் போனால் எதையும் அலட்சியப்படுத்தாமல், எதையும் மரியாதையோடு அணுகுகின்ற அந்த அணுகுமுறைக்கு சொந்தக்காரரான

பசும்பொன் தேவர் அவர்களுடைய விழாவில், அவருடைய குணாதிசயங்களுக்கு மாறாக நான் நடந்து கொண்டேன் என்ற பெயர் எனக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவும், வரதராஜன் அவர்களுடைய கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்வதற்காகவும் வருகிற நிதி நிலை அறிக்கையில் அவர் குறிப்பிட்ட கோரிக்கையை எண்ணிப்பார்த்து இன்னும் இரண்டொரு மாதங்களில் அந்தத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என்பதை தேவர் திருமகனுடைய நூற்றாண்டு விழாவிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மற்றொன்று, இப்பொழுது இந்த விழாவையொட்டி என்னென்ன காரியங்கள் தமிழக அரசால் நடத்தப்பட்டிருக்கிறது என்பதை சொல்ல விரும்புகின்றேன். இங்கே நம்முடைய பரிதி இளம்வழுதி வாங்கி படித்துப் பார்த்து வெளியிலே சொல்லியிருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக யாரோ சொன்னார் என்ற கோபத்திலே கொஞ்சம் அவரும் கோபித்துக் கொண்டார். இது ஒருவருக்கொருவர் கோபத்தைக் காட்டுகின்ற விழா அல்ல. எல்லோரும் ஏகோபித்து, எல்லோரும் ஒரே உணர்வோடு காலையிலே நாம் வேறுபட்டவர்களாக இருந்தாலும் மாலையிலே அத்தனை பேரும் ஒன்று. ஒரே சமுதாய நல்லிணக்கம் கொண்டவர்கள் என்ற அந்த நிலையில் நாம் பணியாற்ற வேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்வதற்காகவாவது இந்த விழா பயன்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

சிலர் சொல்லியிருக்கிறார்கள் "நாங்கள் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கினோம். கருணாநிதி என்ன ஒதுக்கினார்?" என்று கேட்டுள்ளார்கள். எனக்கு இந்த "ஒதுக்குதல்" எல்லாம் தெரியாது. மூன்று கோடி ரூபாய் ஒதுக்கினார்கள் என்ற செய்தியை பத்திரிகைகளிலே பார்த்து விட்டு, நான் உடனடியாக நம்முடைய தலைமைச் செயலகத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தலைமைச்செயலாளர், நிதித்துறைச் செயலாளர் மற்றும் எல்லா செயலாளர்களிடத்திலும் தொடர்பு கொண்டு கேட்டேன். மூன்று கோடி ரூபாய் இதற்கு முன்பு இருந்த ஆட்சியாளர்கள் பசும்பொன் தேவர் விழாவிற்காகவோ, திட்டங்களுக்காகவோ ஒதுக்கினார்களா என்று. மூன்று பைசா கூட யாரும் ஒதுக்கவில்லை என்று சொன்னார்கள். அவசரத்திலே சொல்லியிருக்கக்கூடும் அல்லது ஆர்வத்திலே சொல்லியிருக்கக்கூடும் என்று நான் இதை பொருட்படுத்தவில்லை. ஆனால் நாளைக்கு கணக்கு இடிக்கும் அல்லவா? இப்படி மூன்று கோடி ஒதுக்கினார்கள் என்று நாளைய தினம் ஆடிட் செய்கின்றவர்கள் அந்த மூன்று கோடி என்ன ஆயிற்று என்று கேட்டால், நானல்லவா பதில் சொல்லவேண்டும். ஆகவே இப்பொழுதே எச்சரிக்கையாக சொல்லிவைக்கின்றேன். யாரும் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கவில்லை. நம்முடைய இந்த ஆட்சியிலேதான். இந்த விழாவையொட்டி நிதி ஒதுக்கப்பட்டு – செய்யப்பட்ட காரியங்களை நான் இங்கே பட்டியலிட விரும்புகிறேன்.



நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப்போல், நெல்லை மாவட்டத்தில் மேலநீலிதநல்லூர், இராமநாதபுரம்



மாவட்டத்தில் கமுதி, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி ஆகிய இந்த மூன்று இடங்களில் பசும்பொன் தேவருடைய திருப்பெயரால் மூன்று கல்லூரிகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மதுரை மாநகரில் இருக்கின்றவற்றை சொன்னார்கள். மதுரை ஆண்டாள்புரம் அருகே தொழிற்சங்கத்தோடு தேவர் அவர்களுக்கு எவ்வளவு தொடர்பு இருந்தது. அந்தத் தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு ஆளானபோது அவர்களை விடுவிக்க வேண்டுமென்பதற்காக, அவர் எத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டார் என்பதற்கு அடையாளமாகத்தான் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மதுரையிலே ஆண்டாள்புரத்திற்கு அருகே அவர் கைது செய்யப்பட்டார் என்பதை நினைவாகக் கொண்டு மதுரை ஆண்டாள்புரம் அருகே உள்ள மேம்பாலத்திற்கு "முத்துராமலிங்கத் தேவர் பாலம்" என்று பெயர் சூட்டியவனும் நான்தான்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் தேவர் திருமகன் திருப்பெயரால் மாணவச் செல்வங்களுக்கு உதவிட 25 இலட்ச ரூபாய் முதலீட்டில் ஒரு அறக்கட்டளையும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நூற்றாண்டு விழாவையொட்டி 10 இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் செலவில் பசும்பொன் தேவர் அவர்களுடைய இல்லம் புதுப்பிக்கப்பட்டது.

9 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் நூற்றாண்டு விழா வளைவு கட்டப்பட்டுள்ளது.

9 இலட்ச ரூபாய் செலவில் புகைப்படக் கண்காட்சிக் கூடம் கட்டப்பட்டுள்ளது.

3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் அணையா விளக்கு அவருடைய நினைவிடத்திற்குப் பக்கத்திலே அமைக்கப்பட்டுள்ளது.

4 இலட்ச ரூபாய் செலவில் நூலகக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

5 இலட்ச ரூபாய் செலவில் தலை முடி இறக்கும் கூடம் கட்டப்பட்டுள்ளது.

9 இலட்ச ரூபாய் செலவில் வருகின்ற ஆண், பெண்களுக்கும் தனித்தனியே கழிப்பிட வசதிகளும் – தண்ணீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5 இலட்ச ரூபாய் செலவில் அவர்கள் கொண்டு வருகின்ற பால் குடங்களை வைக்கின்ற மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இன்னொரு 5 இலட்ச ரூபாய் செலவில் முளைப்பாரி மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இத்தனையும் இந்த விழாவிற்கு வருகின்றவர்கள் – நினைவிடத்திற்கு வருகின்றவர்களின் வசதிக்காக –

இந்த அரசின் சார்பாக செய்யப்பட்டிருக்கிறது. இவைகளையன்னியில் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 64 இலட்ச ரூபாய் செலவில் கமுதி முதுகுளத்தூர் சாலையிலிருந்து மருதங்கநல்லூர் கிராமம் வழியாக பசும்பொன்னுக்கு ஏறத்தாழ 5 கிலோ மீட்டருக்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது.

28 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் பசும் பொன் கிராமத்திலிருந்து கமுதிக்குச் செல்லும் ஏறத்தாழ இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திற்கு மாற்றுச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் பசும் பொன் தேவர் திருமகனார் நினைவிடத்தைச் சுற்றியிருந்த கல் சாலை தார்ச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

41 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் நினைவிடத்திற்கு முன்பாக வாழ்ந்து வந்த 73 ஆதிதிராவிட மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளோடு கூடிய புதிய குடியிருப்புக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளை நாம் நேரில் காணலாம்.

புதியதாகக் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிட குடியிருப்புகளில் 5 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் சிமெண்ட் சாலையும், ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் தெருவிளக்குகளும், ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் குடிநீர் வசதியும் ஆக மொத்தம் 2 கோடியே 5 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பசும்பொன் கிராமத்தில் இந்த நூற்றாண்டு விழாவையொட்டி பல்வேறு காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதனை நான் இந்த விழாவிலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகளையன்னியில், இதற்கு முன்பு இங்கு வைக்கப்பட்ட கோரிக்கை மாத்திரமல்ல; ஏடுகளிலே வெளிவந்திருக்கின்ற கோரிக்கை – நான் மதுரைக்கு வரும்பொழுதெல்லாம் என்னிடத்திலே சொல்லப்படுகின்ற கோரிக்கைகளில் முக்கியமான ஒரு கோரிக்கை மதுரை விமான நிலையத்திற்கு தேவருடைய பெயர் வைக்க வேண்டும் என்பதாகும். அதை நான் வைக்க முடியாது. காரணம் விமான நிலையம் மத்திய சர்க்காருக்கு தொடர்புடையது. ஒரு மாநில சர்க்கார் சார்பாக அந்தப் பெயர் வைக்க முடியாது. ஆனால், மத்திய சர்க்காரை கேட்டுக்கொண்டு – கேட்கிற விதத்திலே கேட்டு அதைப் பெற முடியும்.

வி.பி.சிங் ஒரு முறை நம்முடைய சென்னை மாநகரத்தில் ஒரு விழாவிற்கு வந்திருந்தபோது அங்கே தான் கேட்டேன். சென்னை விமான நிலையத்தில் ஒரு புறத்திலே உள்ள ஒரு விமான நிலையத்திற்கு அறிஞர் அண்ணா பெயரும். இன்னொரு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரும் வைக்க வேண்டும் என்று நான் கூட்டத்திலே வேண்டுகோள் விடுத்தேன். விழா மேடையிலிருந்து வி.பி.சிங் கீழே இறங்கி அங்கே தன்னுடைய செயலாளரிடத்திலே இருந்த தொலைபேசியை வாங்கி டெல்லிக்கு பேசினார். ஐந்து நிமிடத்தில் நான் இருந்த மேடைக்கு வந்தார். “கருணாநிதி சொன்னதைப்போல காமராஜர் பெயர் ஒரு விமான நிலையத்திற்கும், அறிஞர் அண்ணா பெயர் இன்னொரு விமான நிலையத்திற்கும் வைக்கப்படும்'' என்று வி.பி.சிங் அவர்கள் அன்றைய தினம் வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பு இன்றைக்கு காமராஜர் விமான நிலையமாக, அண்ணா விமான நிலையமாக சென்னையில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைப்போல இதை மேடையிலே சொல்வதற்கு வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், உங்களுடைய கருத்துக்களை – உங்களுடைய எண்ணங்களை கடிதம் மூலமாக – விரைவிலே நான் டெல்லி சென்றால் நேரிலே சந்திக்கின்ற நேரத்திலும், அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி முத்துராமலிங்கத் தேவருடைய பெயரால் மதுரை விமான நிலையம் திகழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என்று இன்றைய இந்த விழா அடையாளமாக எடுத்துக் கூறி காலையிலேயிருந்து உங்களையெல்லாம் மிகுந்த உற்சாகத்தோடும் – மிகுந்த விறுவிறுப்போடும் நீங்கள் எங்களை வரவேற்று வாழ்த்தி தேவர் பெருமகனார் இடத்திலே வைத்திருக்கின்ற அன்பையும் வெளிப்படுத்திய உங்களுடைய மனப்பான்மைக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து இந்த அளவில் தேவர் புகழ் வாழ்க என்றுரைத்து விடைபெறுகிறேன்''.

30.10.2007 அன்று,

பசும்பொன்னில் நடைபெற்ற

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நூற்றாண்டு விழாவில்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்

ஆற்றிய உரை

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் மணிமண்டபம் மற்றும் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்து, அவர்தம் மரபுரிமையருக்கு பணி நியமன ஆணை வழங்கினார்





தமிழக அரசின் சார்பில் மதுரை, சாத்தமங்கலத்தில் கட்டப்பட்டுள்ள மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் திறப்பு விழாவும், அவரது திருவுருவச்சிலை திறப்பு விழாவும் 30.10.2007 அன்று மாலை நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தைத் திறந்து வைத்தார்.

முன்னதாக விழாவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்களும் மற்றும் மாவட்ட ஆட்சியர், காவல்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் வரவேற்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மணிமண்டபத்தைத் திறந்து வைத்து உட்பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த – தேவநேயப்



பாவாணர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை நினைவுபடுத்திடும் புகைப்படங்களைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து தேவநேயப் பாவாணரின் திருவுருவச்சிலையினைத் திறந்து வைத்து, பாவாணரின் பேத்தி திருமதி. பரிபூரிணம் அவர்களுக்கு மணிமண்டபக் காப்பாளர் பணி நியமன ஆணையை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாவாணர் – பரிதிமாற் கலைஞர் ஆகியோரது சிலைகளை வடித்த சிற்பி திரு.கிஷோர் நாகப்பாவிற்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

**மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு**

★ 1902 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7 ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயிலில் பாவாணர் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் தேவநேசன் என்பதாகும்.

★ இவரது பெற்றோர் திரு.ஞானமுத்தனார் – திருமதி.பரிபூரணம் அம்மையார்.

★ இவர் தமது ஐந்தாவது அகவையிலேயே தந்தையாரையும் பின்னர் தாயாரையும் இழந்ததால் தனது தமக்கையின் அரவணைப்பில் வளர்ந்தார்.

★ சோழபுரம் விடையூழியப் பள்ளியில் (Mission School) தொடக்கக் கல்வியும், ஆம்பூர் மிசௌரி நல்லஞ்சல் உலுத்திரன் விடையூழிய நடுநிலைப் பள்ளியில் (Misoury Evangelical Luthern Mission Middle School) 8ஆம் வகுப்பு வரையிலும், பாளையங்கோட்டை திருச்சபை விடையூழியக் கழக உயர் நிலைப்பள்ளியில் (Church Mission Society High School) பதினோராம் வகுப்பு வரையிலும் பயின்று தேறினார்.

★ 1919 இல் சீயோன் மலை நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி, முறையான ஆசிரியர் பயிற்சியும் பெற்றார்.

★ 1922 இல் ஆம்பூர் மிசௌரி நல்லஞ்சல் உலுத்திரன் விடையூழிய நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

★ 1924 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வு எழுதி வெற்றி பெற்றார்.

★ 1925 இல் சென்னை கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

★ 1926 இல் திருநெல்வேலித் தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம் நடத்திய தனித்தமிழ்ப் புலவர் தேர்வு எழுதி வென்றார். சென்னை பெரம்பூரில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்,

★ 1928 இல் மன்னார்குடியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார்– மனைவி எசுத்தர் அம்மையார் மறைந்தார்.



★ 1930 இல் நேசமணி அம்மையாரை மணந்தார்.

★ 1934 இல் திருச்சியில் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

★ 1943 இல் சென்னை, மண்ணடியில் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

★ 1944 இல் சேலம் நகராண்மைக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி பின்னர் பேராசிரியரானார்.

★ 1949இல் தனித்தமிழியக்கத் தந்தை மறைமலை யடிகள் அவர்கள் பாவாணர் சொல்லாராய்ச்சியில் ஒப்பற்ற தனித்திறமை படைத்தவர் எனச் சான்றிதழ் வழங்கினார்.

★ 1952 இல் முதுகலைப் பட்டம் (M.A.) பெற்றார்.

★ 1955 இல் தந்தை பெரியார் தலைமையில் நடந்த சேலம் தமிழ்ப் பேரவை விழாவில் "திராவிட மொழி நூல் ஞாயிறு" எனும் பட்டம் பாவாணர்க்கு வழங்கப்பெற்றது.

★ 1956 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியாராய்ச்சித் துறைத் தலைவராக (Reader) அமர்த்தப்பட்டார்.

★ 1960 இல் பாவாணரின் ஆட்சித்துறைக் கலைச் சொல்லாக்கம் குறித்துப் பாராட்டித் தமிழக அரசின் செப்புப்பட்டயம் வழங்கப்பெற்றது.

★ 1963 இல் சிறப்பாசிரியராகப் பாவாணர் பெயர் தாங்கிய 'தென்மொழி' இதழ் வெளிவந்தது. பாவாணரின் துணைவியார் நேசமணி அம்மையார் மறைந்தார்.

★ 1974 இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித்திட்ட இயக்ககத்தின் இயக்குநராகப் பாவாணர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நியமித்தார்.

★ 1979 இல் பாவாணருக்குச் "செந்தமிழ்ச் செல்வர்" எனும் விருதைத் தமிழக அரசு வழங்கியது.

★ 1981 இல் மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" எனும் தலைப்பில் பாவாணர் உரையாற்றினார்.

★ 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 16 ஆம் நாள் பாவாணர் இயற்கை எய்தினார்.

**பாவாணர் படைத்த நூல்களுள் சில...**

★ ஒப்பியன் மொழிநூல்

★ தமிழ் வரலாறு

★ இயற்றமிழ் இலக்கணம்

★ வடமொழி வரலாறு

★ தமிழர் சரித்திரச் சுருக்கம்

★ திருக்குறள் தமிழ் மரபுரை

★ திரவிடத் தாய்

★ தமிழர் வரலாறு

★ சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்

★ தமிழர் மதம்

★ தமிழர் திருமணம்

★ தமிழிலக்கிய வரலாறு

1996 இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாவாணரின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் தம் மரபுரிமையருக்கு ரூ.20 இலட்சம் வழங்கிச் சிறப்பித்தார். (7.9.1996)

★ 2002 இல் பாவாணரின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு கொண்டாடிச் சிறப்பித்தது.

★ 2006 இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாவாணர் நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டார். (18.2.2006)

★ தமிழக அரசின் சார்பில் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள பாவாணர் மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.10.2007 அன்று திறந்து வைத்தார். ★

# பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்



தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று முதன் முதலாகக் குரல் கொடுத்து வரலாற்றில் இடம் பெற்றவர் பரிதிமாற் கலைஞர். தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக சூரிய நாராயண சாஸ்திரி என்ற தனது பெயரை பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக் கொண்டவர். இவர் மதுரையை அடுத்த விளாச்சேரியில் பிறந்து, வாழ்ந்து மறைந்தார்.

அவரது நினைவாகவும் அவரது தமிழ்ப் பற்றை போற்றும் முகமாகவும் அவர் வாழ்ந்த பழமையான வீட்டைப் புதுப்பித்து நினைவு இல்லமாக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார். அதன்படி அந்த வீட்டை தமிழக அரசு வாங்கி, ரூ.8 இலட்சம் செலவில் புதுப்பித்தது. நினைவு இல்லத்தின் நுழைவு வாயிலில் பரிதிமாற் கலைஞரின் மார்பளவு வெண்கலச் சிலை அமைக்கப்பட்டது.








பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பரிதிமாற் கலைஞரின் நினைவு இல்லத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.10.2007 அன்று திறந்து வைத்தார். பின்னர் வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள பரிதிமாற் கலைஞரின் மார்பளவு வெண்கலச் சிலையையும் அவர் திறந்து வைத்தார். நினைவு இல்லத்தில் பரிதிமாற்கலைஞரின் வரலாற்றுக் குறிப்புகள், அரிய புகைப்படங்கள் ஆகியவற்றை பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர்கள் புத்தகத்தில் "தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோர குரல் கொடுத்த முதல் தமிழன் பரிதிமாற் கலைஞர் புகழ் வாழ்க" என எழுதி கையெழுத்திட்டார்.

விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு பரிதிமாற் கலைஞரின் வாரிசுதாரர்கள் பொன்னாடை அணிவித்தனர். மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி, திரு. துரை முருகன், திரு.பரிதி இளம்வழுதி, திரு.தங்கம் தென்னரசு, திரு.மைதீன்கான், திருமதி. தமிழரசி, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. து. இராசேந்திரன் இ.ஆ.ப., செய்தித்துறை இயக்குநர் முனைவர். ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.எஸ்.ஜவஹர், இ.ஆ.ப., உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நம் அன்னை மொழியாம் அருந்தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவிக்கவேண்டும் என்று முதற்குரல் கொடுத்தவர் தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர். சூரியநாராயண சாஸ்திரி தமிழ் மீது கொண்ட தணியாத ஈடுபாட்டின் காரணமாகப் பரிதிமாற் கலைஞர் எனத் தனித்தமிழில் புனைபெயர் வைத்துக்கொண்டார்.

திராவிட மொழியான தமிழின் மீது பற்றுக் கொண்டு அதன் பெருமையை உலகிற்கு உணர்த்துவதை உயரிய குறிக்கோளாகக் கொண்ட பரிதிமாற் கலைஞரை 'திராவிட சாஸ்திரி' எனத் தலைசிறந்த தமிழறிஞரும் பெரும்புலவருமான சி.வை.தாமோதரம் பிள்ளை குறிப்பிடுகிறார்.

அகப்பொருளும், அதன் துறைகளும், புறப்பொருளும், அதன் துறைகளும் இவ்விருவகைப் பொருள்களின் இயைபுகளும் வடமொழியில் காணக்கிடைத்தற்கரிய தனித்தமிழ் விவிலியங்களாகும் என்பது தமிழ் இலக்கியங்களைப் பற்றிய பரிதிமாற் கலைஞரின் உயரிய மதிப்பீடு.

**பரிதிமாற் கலைஞர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு**

★ **1870 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 6ஆம் நாள் மதுரை மாவட்டம், விளாச்சேரி எனும் ஊரில் பரிதிமாற் கலைஞர் பிறந்தார்.**

★ தந்தையார் பெயர் திரு.கோவிந்த சிவனார்; தாயார் பெயர் திருமதி.இலட்சுமி அம்மாள்.

★ சபாபதி முதலியார் என்ற தமிழறிஞரிடம் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தமிழ் கற்றார்.

★ இளமை முதலே இலக்கண இலக்கியங்களைத் தணியாத ஈடுபாட்டுடன் கற்று வந்தார்.

★ ஆங்கிலம் மற்றும் தத்துவ நூல்களையும் கற்றுத் தேர்ந்தார்.



- ★ 1892 ஆம் ஆண்டு இளங்கலை (பி.ஏ.) தேர்வில், தமிழிலும் வேதாந்தத் தத்துவக் கல்வியிலும் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றார்.
- ★ கல்லூரியில் படிக்கும்போதே விவேக சிந்தாமணி எனும் இதழில் கட்டுரைகளை எழுதினார்.
- ★ இவர் காலத்தில் தமிழில் நாடக இலக்கண நூல்கள் இல்லாதிருந்த குறையைப் போக்கும் வகையில் 'நாடகவியல்' எனும் இலக்கண நூலை எழுதி வெளியிட்டார். மேலும்,

தமிழ்மொழியின் வரலாறு.

தமிழ்ப்புலவர் சரித்திரம்.

தமிழ் வியாசங்கள்.

மதிவாணன்.

ரூபாவதி.

கலாவதி.

மான விஜயம்.

தனிப்பாசுரத் தொகை.

பாவலர் விருந்து.

– என நூல்கள் பலவற்றைப் படைத்துத் தமிழுக்கு வளம் சேர்த்தார்.

- ★ சென்னைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலிருந்து தமிழ் நீக்கப்பட்டபோது அதை மீண்டும் சேர்க்கப் போராடினார்.
- ★ பல்லாற்றானும் தமிழுக்குப் பெருமை சேர்த்த பரிதிமாற் கலைஞர், தமது 33ஆம் வயதில் 1903ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2ஆம் நாள் இயற்கை எய்தினார்.

**பரிதிமாற் கலைஞரின் நினைவாக....**

- ★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இடைவிடாத பெரும் முயற்சியால் பரிதிமாற் கலைஞர் விரும்பியவாறு 17.9.2004 அன்று தமிழைச் "செம்மொழி" என்று மத்திய அரசு ஏற்று அறிவித்தது.
- ★ பரிதிமாற் கலைஞர் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத் தொகையாக ரூ.15 இலட்சத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2.12.2006 அன்று வழங்கினார்கள்.
- ★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க மத்திய அரசு பரிதிமாற் கலைஞர் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலையை 17.8.2007 அன்று வெளியிட்டுச் சிறப்பித்தது.
- ★ மதுரை விளாச்சேரியில் உள்ள பரிதிமாற் கலைஞரின் இல்லம் நினைவில்லமாக ஆக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அவரது திருக்கரங்களால் 31.10.2007 அன்று திறந்து வைக்கப் பெற்றது. ★

**கருமம் ஒன்றே கண்ணாயினார் என்ற பொன்மொழிக்கேற்ப நடந்து கொள்வீர்களேயானால் மற்றவர்களையும் நடக்கச் சொல்வீர்களேயானால், அது நாட்டை வெகுவாக உயர்த்தும், நம் எதிர்காலத்தை உயர்த்தும்!**




*சென்னையில், 22-10-2007 அன்று, பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் புதிய பணி நியமன ஆணைகளை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்* **கலைஞர் மு. கருணாநிதி** *அவர்கள் ஆற்றிய உரை*

சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு மிக முக்கியமான ஒரு மசோதாவை நான் பேரவையிலே அறிமுகம் செய்து விட்டு அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பின் இடையில் தற்போது உங்களின் முன்னால் அமர்ந்திருக்கின்றேன். முக்கியமான மசோதா என்று குறிப்பிட்டேன். சட்டமாக இருக்கின்ற அந்த மசோதா சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு இட ஒதுக்கீடு – கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இட ஒதுக்கீடு என்ற அந்த மசோதா நீண்டகாலக் கனவாக இருந்து இன்றைக்கு நிறைவேறுகிறது. அதை நிறைவேற்றச் செல்கின்ற என்னை இங்கே தாமதிக்க விடமாட்டீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

தம்பி துரைமுருகன் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக தான் இருப்பதை பெருமிதத்தோடு குறிப்பிட்டு, இந்தப் பொதுப்பணித் துறையிலே தான் நம்முடைய முதல் அமைச்சரும் முதன் முதலாக அமைச்சராக இருந்தார் என்றார். நான் அமைச்சராக வருவதற்கு முன்பே பொதுப்பணியிலே ஈடுபட்ட காரணத்தினால்தான்,

அறிஞர் அண்ணா அவர்கள் என்னை நீ பொதுப்பணி அமைச்சராக இரு என்று ஆணை யிட்டார்கள். நாங்கள் நான்கைந்து பேர் அண்ணா அவர்கள் முன்னிலையில் அமர்ந்திருந்தபோது, அவர்கள் விரலால் சுட்டிக் காட்டி, இன்னின்னார் இன்னின்ன அமைச்சர்கள் என்று குறிப்பிட்ட போது, நீ பொதுப்பணி என்று சொன்னார்கள். அதில் இரண்டு பொருள் உண்டு என்று எனக்கு அப்போதே தெரியும். எனவே, எனக்குப் பொதுப்பணி என்பது புதுப்பணி அல்ல, பழைய பணி தான், அந்தப் பொதுப்பணித் துறையில் இன்றைக்கு புதுப்பணி ஆற்றுவதற்காக பலருக்கு நியமன ஆணை வழங்குகின்ற விழாவிலே கலந்து கொள்வது மெத்தப் பூரிப்பை எனக்கு வழங்குகின்றது.

**தேர்தலில் உறுதிமொழி**

தமிழ்நாட்டில் பணி நியமன ஆணை வழங்குகின்ற விழாவா ? இது வேறு மாநிலங்களிலே ஆச்சரியத்தோடு கேட்கப்படுகின்ற ஒரு கேள்வியாகக் கூட இருக்கலாம். நாம் இந்த ஆட்சியை இடையிலே இழந்து மீண்டும் தொடருகின்ற ஒரு நிலை வந்த பிறகு, அந்தக் கேள்விக்கு இந்தியாவிலே எங்கும் இடமில்லை என்றே கருதுகிறேன். பணிகளில் யாரும் அமரக் கூடாதென்பதற்காக சட்டங்கள் நிறைவேற்றுகின்ற மாநிலங்களும் உண்டு. நம்முடைய மாநிலத்திற்கே அந்த அனுபவம் கடந்த காலத்திலே உண்டு. இப்போது பணி நியமனத்திற்கான ஆணை வழங்குகின்றோம் என்றால், இதை இப்போது ஒரு மண்டபத்திலே அமர்ந்து விழா எடுத்து கொண்டாடினால் மாத்திரம் போதாது, இதை புராணீகர்களின் கூற்றுப்படி ஒரு உற்சவமாகவே நம்முடைய பணிக்கு வருகின்றவர்கள் கொண்டாட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு புதுமை, ஒரு புது யுகம் இன்றைக்கு தமிழகத்திலே உருவாகி இருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

நான் நீண்ட நேரம் இங்கே உரையாற்ற வேண்டுமென்று முதலில் கருதினேன். தேதி கொடுக்கும்போது இந்த முழு நாள் பொதுப்பணித் துறை விழாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது, என்னுடைய நாள் குறிப்பில். ஆனால் திடீரென்று சட்டப்பேரவை இன்று தொடர்ந்து நடைபெறும், நடைபெறவேண்டுமென்று எதிர்க்கட்சிகள் விரும்பிய காரணத்தால், எதிர்க்கட்சிகளுடைய குரலுக்கு, கருத்துக்கு மதிப்பளித்துப் பழக்கப்பட்ட நாங்கள், ஒரு நாள் சட்டமன்றம் நீடித்தாலும் பரவாயில்லை என்று நீடித்து இன்றைக்கு முக்கியமான மசோதாக்களை நிறைவேற்றுகின்ற வாய்ப்பை நாங்களும் பெற்று, தமிழ் மக்களும் பெற்றிருக்கிறார்கள். அதனால் தான் காலையிலே கூட நான் தம்பி துரைமுருகனைக் கேட்டுக் கொண்டேன், இதை மாலையிலே மாற்றி வைத்தால் எனக்கு நீண்ட நேரம் இவர்களிடையே பேச வேண்டுமென்ற விருப்பமிருக்கிறது, அதுவும் நிறை வேறுமே என்று சொன்னேன். அவர் சரி என்று தலையசைக்கவில்லை, ஆனால் இங்கே வந்து கடற்கரை காமராஜர் சாலை திரும்பிய பிறகு தான், அந்த யோசனையை சிந்தித்துப் பார்க்கலாமா என்று கேட்டார். பாதி வழியிலே சிந்திக்க வேண்டாம், பிறகு சிந்தித்துக் கொள்வோம் என்று அது இன்னொரு நாளைக்கு ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

**இடுக்கண் தராத அரசு**

நியமன ஆணைகள் வழங்கப்படுவது நம்முடைய தமிழக அரசில் ஒரு புதுமை தான். வேலை கொடு, வேலைவாய்ப்பு வழங்கு என்ற ஒரு முழக்கம் ஒரு புறத்திலே கேட்டுக் கொண் டிருக்கிறது. நாங்கள் இந்தத் தேர்தலிலே கடந்த ஆண்டுக்கு முதல் ஆண்டு ஈடுபட்டபோதே, தேர்தல் அறிக்கையிலே ஒரு உறுதிமொழி அளித்திருந்தோம். நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் வேலைவாய்ப்பு தாராளமாக வழங்கப்படும் என்று உறுதிமொழி அளித்திருந்தோம். அந்த உறுதி மொழிக்கேற்ப இது வரையிலே இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு நேரடியாக அதிலே ஒரு பகுதி நபர்களுக்கு வழங்க முடியாவிட்டாலுங்கூட, வேலைவாய்ப்பை உடனடியாக கையிலே தர முடியாத, இயலாத நிலையில் அவர் களுக்கெல்லாம் மாதந்தோறும் ஒரு உதவித் தொகையாக ஒரு மாற்று ஏற்பாடாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் அமைச்சர்கள், நான் உட்பட அத்தனை பேரும் தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று அந்த உதவித் தொகையை வழங்கி வருகிறோம். ஆனால் உதவித்தொகை மாத்திரம்



போதுமா என்றால் போதாது. அவர்களுக்கு வேலை நிரந்தரமாக வேண்டும். அந்தப் பணி உறுதி செய்யப்பட்டதாக அமைய வேண்டுமென்ற வகையிலே தான் நேற்றைய தினம் நடைபெற்ற இள நிலை ஆசிரியர்கள் சங்கத்தின் மாநாட்டிலே கூட ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியாக தொகுப்பூதியம் பெற்று வந்தவர்களுக்கெல்லாம் கால முறை ஊதியம் என்று மாற்றப்பட்டு அது ஊதியமே இல்லை என்று சொல்வதை விட, தொகுப்பூதியம் என்று சொல்வது அவர்களை இழிவுபடுத்துகின்ற ஒன்று என்ற நிலைமையில் நேற்றைக்கு ஒரு அருமையான காட்சியை வள்ளுவர் கோட்டத்தில் நான் கண்டேன். அங்கே குழுமியிருந்த ஆசிரியப் பெருமக்கள் இளநிலை ஆசிரியர்கள் என்ற நிலைமையிலே இருந்தவர்கள் எல்லாம் நேற்று வள்ளுவர் கோட்ட விழாவிற்குப் பிறகு அவர்கள் எல்லாம் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றச் சங்கம் என்கிற பெயரால் ஒரு சங்கத்தின் உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். அவர்களுடைய அக மகிழ்வை நேற்று தெரிவித்துக் கொண்டார்கள். வள்ளுவர் கோட்டமே நேற்று பொங்கி வழிந்தது. அப்படிப்பட்ட பூரிப்பை அவர்கள் முகத்திலே என்னால் காண முடிந்தது.

அதே பூரிப்பை உங்கள் முகத்திலே நேரடியாக தெளிவாகக் காண முடியாவிட்டாலும், உங்கள் உள்ளத்திலே இருக்கின்ற பூரிப்பை என்னால் உணர முடிகிறது. "இடுக்கண் வருங்கால் நகுக" என்று அய்யன் வள்ளுவப் பெருமான் சொன்னார். இடுக்கணே இல்லாமல் இருக்கும்போது, புன்னகை புரிந்தால் என்ன என்று இடுக்கண் இல்லாத அரசு, இடுக்கண் தராத அரசு – அந்த அரசின் நிழலில் வாழ்கிறோம் என்ற நிலைமையிலே தான் நேற்றும், இன்றும் நீங்கள் கலந்து கொள்கின்ற காட்சியை நான் காணுகிறேன். பூரிப்படைகிறேன்.

இந்த விழாவில் இன்றையதினம் மாத்திரம் 569 உதவிப் பொறியாளர்களின் புதிய நியமனங்கள் – 1,056 தினக் கூலிப் பணியாளர்களின் நிரந்தர நியமனங்கள் – 52 கருணை அடிப்படையிலான நியமனங்கள் – கடந்த ஆட்சியிலே கருணையே இல்லை என்றார் தம்பி துரைமுருகன் – கருணையே பெயராக வந்துவிட்ட பிறகு எப்படி இந்த ஆட்சியிலே கருணை இல்லாமல் இருக்க முடியும்?

**மீண்டும் கருணை இல்லம்**

கிருபானந்தவாரியார் தி.மு.க. ஆட்சியிலே மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலயத்தில்

சிறுவர்களுக்காக ஒரு அமைப்பை, அந்த ஆலயத்தினுடைய பாதுகாப்பில் – அந்த ஆலயத்தின் உதவியோடு அவர்கள் படிக்க, உண்ண, உறங்க, ஓய்வு கொள்ள, விளையாட ஒரு இடம் வேண்டுமென்று இல்லங்களை அமைத்த போது, அதற்கு என்ன பெயர் வைக்கலாமென்று யோசித்த போது, நான் அன்பு இல்லம் என்று வைக்கலாம், இளைஞர் இல்லம் என்று வைக்கலாம் என்று சொன்னேன். ஆனால் அதைத் திறந்து வைக்க வந்த வாரியார் அவர்கள், இல்லையில்லை, அதற்கு கருணை இல்லம் என்று பெயர் வைக்கிறேன் என்று அவர் அந்தப் பெயரைச் சூட்டினார். அவர் நல்ல எண்ணத்தோடு தான் சூட்டினார். ஆனால், கருணை என்ற பெயரே இருக்கக் கூடாது என்றுபிறகு ஆட்சிக்கு வந்தவர்கள், அந்தப் பெயரை அறவே எடுத்து விட்டார்கள். இப்போது கருணை அந்த ஆலயத்திலும் இல்லை, அந்த ஆலயத்தினுடைய சொல்லாகவும் இல்லை, இல்லமாகவும் இல்லை. மீண்டும் அந்தக் கருணை இல்லங்கள் திறக்கப்படும், தொடங்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நல்ல விழாவிலே நீங்கள் அடைகின்ற மகிழ்ச்சியோடு இதையும் சேர்த்து அடையலாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

52 பேருக்கு கருணை அடிப்படையிலான நியமனங்கள் இன்று வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இன்றைக்கு மாத்திரம் இந்த விழாவின் மூலம் பொதுப்பணித் துறையின் வாயிலாக 1,677 இளைஞர்களுக்கு தமிழக அரசில் நிரந்தரப் பணி ஆணைகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு புள்ளி விவரத்தை உங்களிடம் படிக்க விரும்புகிறேன்.

13–5–2006 அன்று இந்தப் புதிய அரசு அமைந்தது, ஐந்தாவது முறையாக நான் முதல்வர் பொறுப்பையேற்ற அரசு. 2006ஆம் ஆண்டு பொதுப்பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் 449 உதவிப் பொறியாளர்கள் பணி இடங்களும், கட்டமைப்புப் பிரிவின்கீழ் 120 உதவிப் பொறியாளர்கள் பணி இடங்களும், ஆக மொத்தம் 569 உதவிப் பொறியாளர்களின் பணி இடங்கள் காலியாக இருந்தன. அவற்றை நிரப்பிட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டு, அதன் மூலம் தேர்வு செய்யப்பட்ட 569 உதவிப் பொறியாளர்களுக்கு இன்று பணி நியமன ஆணைகள் வழங்கப்படுகின்றன.

**நம்முடைய பெருமையை உயர்த்தும்**

பொதுப்பணித் துறையின் வரலாற்றில் 72ஆம் ஆண்டு முதல் இது வரை மொத்தம் 2,873 உதவிப் பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 1,953 உதவிப் பொறியாளர்கள் இந்த அரசு காலத்தில் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற வரலாற்றுப் பெருமையை இன்றைய விழாவில் எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த ஆட்சிக் காலத்தில் 1,953 உதவிப் பொறியாளர்கள். ஆனால் பத்தாண்டு கால கடந்த கால ஆட்சியில் பொதுப்பணித் துறையில் நியமிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் எண்ணிக்கை 15.

இப்படி இந்த எண்ணிக்கையினுடைய அளவு – எங்களுடைய எண்ணத்தின் அளவைச் சுட்டிக்காட்டுகிறது என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்தத் துறை எவ்வளவு தேவையான துறை, எந்த அளவிற்கு முக்கியமானது, எந்த அளவிற்கு மக்களோடு பின்னிப் பிணைந்த துறை என்பதையெல்லாம் நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்களே அறிவீர்கள். அப்படிப்பட்ட இந்தத் துறையின் வளர்ச்சியில், இந்தத் துறை பெறுகின்ற வலிவும், பொலிவும் நாட்டினுடைய வளத்தை, வலிவை அடையாளம் காட்டக் கூடியவைகள் ஆகும். அதனால்தான் தம்பி துரைமுருகன் உங்களுக்கு அறிவுரை என்று ஒன்றைச் சொன்னார். அதை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்று அவரும் கேட்டுக் கொண்டார். அவர் முன் மொழிந்ததை நானும் வழிமொழிகின்றேன். கருமம் ஒன்றே கண்ணாயினார் என்கின்ற அந்தப் பழமொழிக்கு, பொன்மொழிக்கேற்ப நடந்து கொள்வீர்களேயானால், மற்றவர்களையும் நடக்கச் செய்வீர்களேயானால், மற்றவர்கள் நடக்கிறார்களா என்று கண்காணிப்பீர்களேயானால், இந்த மூன்றும் சேர்ந்து நாட்டை வெகுவாக உயர்த்தும், நம்மை உயர்த்தும், நம்முடைய பெருமையை உயர்த்தும், நம்முடைய ஆட்சியை உயர்த்தும், நம்முடைய எதிர்காலத்தை உயர்த்தும் என்று சொல்லி இந்தப் பணி நியமனம் பெறுகின்ற அனைவரையும் வாழ்த்தி, வரவேற்று மகிழ்ந்து பாராட்டி அமைகிறேன்''.



# இந்த நாள் சட்டப்பேரவையில் ஒரு பொன்னாள், சமூக நீதி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான நாள்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

சட்டப்பேரவையில் 22.10.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கிட வகைசெய்யும் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்ட முன் வடிவு எதிர்ப்பு எதுவுமின்றி ஒருமனதாக நிறைவேறியது.

இந்த சட்டமுன்வடிவின் மீது சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ் (காங்கிரஸ்), திரு. கோ.க.மணி (பா.ம.க.), செல்வி. பாலபாரதி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), திரு. ராமசாமி (இந்திய கம்யூனிஸ்ட்), திரு.செல்வம் (விடுதலைச் சிறுத்தைகள்), திரு. அப்துல் பாசித் (இந்திய யூனியன் முஸ்லிம் லீக்) ஆகியோர் பேசினார்கள்.

இந்தச் சட்ட முன் வடிவு மீது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:–

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென கோருகிறேன். இதைத் தொடர்ந்து நெடுநாள் நம்முடைய எதிர்பார்ப்பாக இருந்த ஒரு பெரிய பரிசை இன்றைக்குப்பெற்ற மகிழ்ச்சியில் இங்கே உரையாற்றிய கட்சித் தலைவர்களுடைய உணர்வுகளோடு என்னுடைய உணர்வையும் இணைத்து பாராட்டுரை, வாழ்த்துரை வழங்கிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியை எதிர்பார்த்து இந்த நிலை எடுக்கப்படவில்லை என்பதையெல்லாம் நீங்களெல்லாம் நன்றாக அறிவீர்கள்.

ஒரு உரிமையை நிலைநாட்டுவதற்காக எடுத்த முயற்சியில் ஜனநாயகத்தினுடைய ஒப்புதலை இன்றைக்கு நாம் பெற்றிருக்கின்றோம். எதிர்ப்பில்லாமல் எந்த நல்ல காரியமும் நடைபெறுவதில்லை என்பது வரலாறு.

ஒரு ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலகட்டத்தில் இந்த சமூகநீதிக்கான வித்து ஊன்றப்பட்டது என்பதும் அதனுடைய விளைவாக சமுதாயத்திலே ஏற்பட்ட மறுமலர்ச்சி புறக்கணிக்கப்பட்ட மக்கள், மூலையிலே தள்ளப்பட்ட மக்கள், படிப்பறிவு அவர்களுக்குத் தேவையில்லை என்று விரட்டப்பட்ட மக்கள், இவர்கள் சார்பாக எழுந்த குரல், அந்தக் குரல் வலுவாகி அதன் காரணமாக நடேசனார் போன்றவர்கள், நாயர் போன்றவர்கள், தியாகராயர் போன்றவர்கள் புரிந்த போர் முழக்கத்தின் காரணமாக எழுந்த அந்த உணர்ச்சியினுடைய விளைவுதான் இன்றைக்கு இந்த அவையிலே பூத்துக் குலுங்கி நம்மையெல்லாம் பூரிப்புக் கொள்ள செய்திருக்கின்ற ஒன்றாகும்.

ஆனால் இதற்கு இடைக்காலத்திலே எத்தனை எத்தனை சோதனைகள், எத்தனை எத்தனை வேதனைகளை நாம் சந்திக்க நேரிட்டது என்பதை விரிவாக இங்கே விளக்கத் தேவையில்லை. இன்னமும்கூட அந்தக் கட்டத்திலே இருந்து நாம் முழுமையாக தாண்டிவிடவில்லை. இன்னமும் உச்ச நீதி மன்றம் வரையில் நம்முடைய உரிமைகள் என்ன ஆகும் என்பது கேள்விக்குறியாக இருப்பதை நாம் மறந்துவிடவில்லை.

இங்கே இதனை வரவேற்றுப் பேசிய மாண்புமிகு கட்சியின் தலைவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல் முழுமை பெற்றுவிடவில்லை, நம்முடைய கோரிக்கை முழுமையாக நிறைவேறிவிடவில்லை. இன்னமும் சில தேவைகள், கோரிக்கைகள் அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற ஆதங்கங்கள், இன்னமும் நிறைவேற்ற முன்வரவில்லையே என்ற சலிப்புகள் இவைகளெல்லாம் நாட்டில், சமுதாயத்தில் இருக்கின்றன.

இதற்கிடையில் நம்மால் முடிந்ததைச் செய்வோம் என்பதற்காகத்தான் இதைத் துணிந்து இந்த அரசு, எந்த வகையில் இதைச் செய்ய வேண்டும் என்பதை யோசித்து அந்த முடிவை இன்றைக்கு சட்ட முன்வடிவாக இங்கே கொண்டு வந்து உங்களுடைய அன்பான ஆதரவை பெற்றிருக்கிறது. உள்ளபடியே இந்த நாள் நம்முடைய சட்டப்பேரவையினுடைய வரலாற்றில் ஒரு பொன்னாள். சமூக நீதி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான நாள்.

இந்தச் சமுதாயம் எழுந்து நடமாட முடியாமல், அடியெடுத்து வைக்க முடியாமல் ஆயிரம் தடைகள், குறுக்கீடுகள், முன்னால் இருந்து தள்ளுகின்றவர்கள், பின்னால் இருந்து இழுப்பவர்கள், பக்கத்திலே இருந்து உதைப்பவர்கள் என்று இப்படிப் பல நரக வேதனைகளுக்கிடையே ஆட்பட்டு, அடிமைப்பட்டு, உனக்கு உன்னுடைய தலையிலே எழுதியது இதுதான் என்று சபிக்கப்பட்ட ஒரு நிலையிலே உள்ள – பொட்டுப்பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாக, நாம் இங்கு வாழ வேண்டும் என்ற ஒரு நிலையிலே அமைந்த சமுதாயமாகத்தான் இருந்தது.

இதை இன்றைக்கு உணர்ச்சியுள்ள சமுதாயமாக ஆக்கிய பெருமைக்குரிய தலைவர்களையெல்லாம் – அவர்கள் இன்றைக்கு கல்லறைகளாக ஆகியிருக் கிறார்கள் என்று இருந்தாலும்கூட, இங்கிருந்தவாறு அந்தக் கல்லறைகளை நோக்கி நாம் தொழுவோம், வணங்குவோம், நன்றி காட்டுவோம். நீங்கள் பாடுபடாவிட்டால் எங்களுக்கு விழிப்பு வந்திருக்குமா? எங்களுக்கு வேலை கிடைத்திருக்குமா? எங்களுக்கு வாழ்விலே விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்குமா? –என்றெல்லாம் இந்தக் கேள்விகளை நாம் அந்தக் கல்லறைகளை நோக்கி இன்றைக்கு கண்கலங்க கேட்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

எந்த ஒரு அரசியல் கட்சியும் இந்தக் காரியத்துக்காக நெஞ்சை நிமிர்த்தி இதை நான்தான் செய்தேன் என்று

> *இந்த வெற்றி பெறுவதற்கு நம்மால் முடிந்தது என்றால் நாம் அத்தனை கட்டங்களை மீறி – நீதிமன்றங்கள், வீதிமன்றங்கள் அத்தனையிலும் எடுத்துச் சொன்ன அந்த உண்மைகளை மாண்புகளும் ஏற்றுக்கொண்டார்கள், மக்களும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி ஏற்றுக்கொண்டவர்கள்தான் இன்று இந்த வெற்றியை நாம் பெற்றிருக்கின்றோம்.*

சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இதை யார் செய்தார்கள் என்பதை விளக்கவேண்டிய நிலையும் இன்றைக்கு இல்லை. மனம் என்ற ஒன்று இருக்கு மேயானால், உணர்வு என்ற ஒன்று இருக்குமேயானால் நாம் இந்த நாட்டிலே எப்படி பாதிக்கப்பட்டோம், எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டோம் என்ற பழைய நினைவுகள் அவர்களுடைய நெஞ்சிலே நிழலாடுமேயானால் அவர்கள் அறிவார்கள். இதற்கெல்லாம், இந்த விடியலுக்கெல்லாம் யார் காரணம் என்பதை அவர்கள் அறிவார்கள்.

அந்த உணர்வுகளைத் தட்டி எழுப்பிய உத்தமத் தலைவர்களுக்கு அவர்கள் இருக்கும்–இருந்த திக்கை நோக்கி, அவர்களுடைய கல்லறைகள் இருக்கும் திக்கை நோக்கி நாம் நம்முடைய நன்றி கலந்த வணக்கத்தை இன்றைக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்றையத் தலைவர்களிலே நான் இங்கே வரிசைப்படுத்த வேண்டுமேயானால் ஒன்று இரண்டு தலைவர்களுடைய பெயர்கள் விடுபட்டு விடக்கூடும், அதனால் நான் எல்லோரும் ஒருமித்தக் குரலில் ஆதரவை நல்கி தீர்மானத்தை ஒரு முக்கியமான சட்டத்தை, சட்ட முன்வடிவை நிறைவேற்றுகின்ற நேரத்தில் யாருடைய உள்ளத்திலும் சிறு கிலேசமும் வரக்கூடாது என்கின்ற அந்த உணர்வோடு இன்று இருக்கிற இதே நிலை என்றென்றும் நம்முடைய உள்ளத்திலே இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அவர்களைப் பற்றி விபரமாக சொல்ல விரும்பவில்லை.

அவைகளையெல்லாம் நாம் தாண்டி இன்றைக்கு வந்திருக்கின்றோம். இன்றைக்கு இந்தப் பெருமையைப் பெற்றிருக்கின்றோம் – இந்தப் பயனை அடைந்திருக்கின்றோம். ஆனால் இந்தப் பயனை அடைவதற்கு நாம் நீந்தி வந்த காட்டாறுகள் போன்ற பாதைகள் எவ்வளவு, எவ்வளவு, எவ்வளவு என்பதை எண்ணிப் பார்த்தால்தான் தெரியும். எல்லோரும் வந்திருக்கிறோம். ஆனால் சில பேர் வரவில்லை என்று ஆதங்கப்பட்டார்கள். விளைந்த நெல்லை, அறுத்த நெல்லை, களத்துமேட்டிலே குவித்ததை காண வேண்டும் என்கின்ற ஆசை உழுதவனுக்கு, உழைத்தவனுக்கு, அந்த வரப்பிலே இருந்து கண்காணித்தவனுக்கு, களை எடுத்தவனுக்குத்தான் இருக்க முடியுமே தவிர எல்லோருக்கும் இருக்க முடியாது.

அவர்களின் பிரதிநிதிகளாகத்தான் இங்கே நாம் வீற்றிருக்கின்றோம். அதனால்தான் நமக்கு இதனுடைய கஷ்டம் தெரிகிறது. பாடுபட்டவனுக்குத்தான் கிடைத்தப் பலனுடைய அருமைத் தெரியும். அந்தப் பலனைப் பெற நாம் சிந்திய வியர்வை – ஏன் சில நேரங்களில் கொட்டிய ரத்தம் இவைகளெல்லாம் சாதாரணமானவைகள் அல்ல. அத்தகைய நிலையைப் பொருத்துத்தான் இந்த வெகுமதியை இன்றைக்கு நாம் பெற்றிருக்கின்றோம்.

ஒரு சட்ட முன்வடிவு – இதற்கு இவ்வளவு நேரம் – இத்தனை தலைவர்கள் – இவ்வளவு நெகிழ்ச்சியோடு உணர்ச்சிகரமாக எல்லாம் பேச வேண்டுமா என்றெல்லாம் நாளைக்கு பேசக் கூடியவர்கள் எல்லாம் நாட்டில் இருப்பார்கள். அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட முடியாது. கவலைப்படாத காரணத்தால்தான் இன்றைக்கு நாம் வெற்றிகளை அடுக்கடுக்காக பெற்றுவிட முடிகிறது. இந்த வெற்றி பெறுவதற்கு நம்மால் முடிந்தது என்றால் நாம் அத்தனை கட்டங்களை மீறி – நீதிமன்றங்கள், வீதிமன்றங்கள் அத்தனையிலும் எடுத்துச் சொன்ன அந்த உண்மைகளை மாண்புகளும் ஏற்றுக்கொண்டார்கள், மக்களும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி ஏற்றுக்கொண்டவர்கள்தான் இன்று இந்த வெற்றியை நாம் பெற்றிருக்கின்றோம்.

இன்னும் பல வெற்றிகளுக்கு இந்த வெற்றி அடிப்படையாக அமைய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்போது இங்கே சொன்னார், எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டீர்களே, நாங்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது என்று சொன்னார். நான் அப்படி சொல்வதற்கு காரணம், எனக்குப் பிறகும் அவர்கள் எல்லாம் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நான் சொல்கின்றேன். நாங்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது என்று அங்கலாய்த்தார்கள். நான் சொல்லுகின்றேன், எல்லாவற்றையும் நாங்கள் செய்து முடித்துவிடவில்லை, நாம் செய்து முடித்துவிடவில்லை. நாம் இன்னும் செய்ய வேண்டியது ஏராளம் இருக்கின்றது.

நாம் சிலையை செய்துவிட்டோம். உருவத்தை அமைத்து விட்டோம். அதை வைக்க வேண்டிய இடத்திலே ஒரு பீடத்தை அமைத்துவிட்டோம். ஆனால் எந்தச் சிலையைச் செய்தாலும் அந்தச் சிற்பி கடைசியாக அந்தச் சிலையிலே அவன் அழகூட்டுவது அதனுடைய கண்ணைத் திறப்பதுதான். இன்னும் தமிழகத்தினுடைய கண் சரியாகத் திறக்கப்படவில்லை. அந்தக் கண்ணைத் திறக்கின்ற காரியத்தை செய்து முடிக்கிற வரையில், அந்தக் கண் திறக்கப்படுகிற வரையில் சிலை முழுமையாக ஆகி விட்டது என்று கூற முடியாது. அந்தச் சிலையை முழுமையாக ஆக்குகின்ற முயற்சியிலே நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த அருமையான முடிவை நாம் எடுப்பதற்கு உதவிய ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களுக்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, வேலுச்சாமி, பெர்னார்டு மற்றும் பூங்கோதை செல்லத்துரை, பேராசிரியர் வி.சுந்தரம் இவர்களுக்கெல்லாம் நான் இந்த அவையின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வப்பொழுது இதிலே சந்தேகம் வந்து இதற்கு ஏதாவது குறுக்கீடு வருமோ, சட்ட சம்மதம் கிடைக்குமா? என்றெல்லாம் நாங்கள் அச்சமுற்ற நேரத்தில் எங்களுக்கு முழு உதவியையும் தைரியத்தையும் ஊட்டியவர் நண்பர் நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் என்பதை மறக்க முடியாது. எல்லாக் கட்சியினுடைய தலைவர்களும் – சமூகநீதிக் காவலர்களாக இருக்கின்ற எல்லாத் தலைவர்களும் அளித்த ஆதரவும் இந்த உணர்வை ஊட்டுகின்ற பத்திரிகையாளர்கள் எழுதிய தலையங்கங்களும், கட்டுரைகளும் எங்களுக்கு மேலும் மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தி அந்த நம்பிக்கை இன்றைக்கு வெற்றிக்கனியாக கிடைத்திருக்கிறது. நம்பிக்கை ஊட்டியவர்களுக்கும் ஆதரவு தந்தவர்களுக்கும் அரிய யோசனைகளை இடையிடையே வழங்கியவர்களுக்கும் நான் இந்த அவையின் சார்பாக என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டு இதனை நிறைவேற்றிக்கொடுத்துள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களுக்கும் அளித்த ஆதரவுக்கும் மீண்டும் மீண்டும் நன்றியினை வழங்கி சமூக நீதிக்காக தொடர்ந்து பாடுபட இன்றைக்கு நாம் சபதம் எடுத்துக்கொள்வோம் என்று கூறி இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.”




# பகைவராலும் புகழப்பட்ட மாவீரர்கள் சின்ன மருது - பெரிய மருது

**மதுரையில் மருதுபாண்டியர் சிலைகளைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புகழாரம்**

மதுரையில் 31.10.2007 அன்று மருதுபாண்டியர் சகோதரர்களின் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:–

“மதுரையில் நடைபெறுகின்ற இந்த மகத்தான திருவிழாவில் மருதுபாண்டியர் களுடைய சிலைகளைத் திறந்து வைக்கின்ற அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக இந்த வாய்ப்பினை வழங்கிய சிலை அமைப்புக்குழுவினருக்கு என்னுடைய நன்றியை, வணக்கத்தை, வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த விழாவுக்கு வருவதற்கு முன்பு அருகிலே உள்ள விளாச்சேரி என்ற சின்னஞ்சிறிய கிராமத்திற்குச் சென்று வந்தேன். சென்றதற்கான காரணத்தை நீங்கள் ஏடுகளில் கண்டிருப்பீர்கள். நம்முடைய தாய்மொழி தமிழுக்கு செம்மொழி என்ற தகுதி தேவை என்பதற்காகக் குரல் கொடுத்து சரியாகச் சொல்ல வேண்டுமேயானால், முதல் குரல் கொடுத்து – நூறாண்டு காலத்திற்கு முன்பே குரல் கொடுத்து, அதற்காக வாதாடி, போராடி எடுத்துச் சொல்ல வேண்டிய சான்றுகளையெல்லாம் எடுத்துச் சொல்லி அந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக – நம்முடைய



ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே அதனை மத்தியிலே பிரதமரிடத்திலே அமைச்சர்களிடத்திலே, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவியார் திருமதி. சோனியா காந்தி அவர்களிடத்திலே வலியுறுத்திச் சொன்னதன் காரணமாக – செம்மொழி என்ற தகுதி வந்தது. அதற்கு மூலக் காரணமாக – வித்தாக – வழிகாட்டியாக இருந்த பெருமை யாருக்கு உரியது என்பதைப் பார்க்கும்போது – திருப்பரங்குன்றத்திற்கு மிக அண்மையில் உள்ள விளாச்சேரி கிராமத்தைச் சேர்ந்த சூரியநாராயண சாஸ்திரி அவர்கள்தான் அதற்கான கொடியேற்றத்தை நடத்தியவர்கள்.

**பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம்**

தன்னுடைய பெயரையே தனித்தமிழ்ப் பெயராக மாற்றிக் கொள்ள வேண்டுமென்று – 'சூரிய' என்பதை, 'பரிதி' என்றும், 'நாராயண' என்பதை 'மால்' என்றும், 'சாஸ்திரி' என்பதை, 'கலைஞர்' என்றும் மாற்றிக் கொண்டு – "பரிதிமாற் கலைஞர்" என்று தமிழ்ச் சமுதாயத்துக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு – அந்த தனித்தமிழ்க் கொடியை ஏற்றி வைத்தவருடைய இல்லத்தைப் புதுப்பித்து நினைவுச் சின்னமாக அமைத்து – ஏற்கெனவே சில மாதங்களுக்கு முன்பு அவர் எழுதிய நூல்களை எல்லாம் நாட்டுடைமையாக ஆக்கி அந்தக் குடும்பத்தினரை எல்லாம் அழைத்து அவர்களுக்கு மரியாதை செய்து, பரிசு வழங்கி, அந்தக் குடும்ப நிதியை அவர்கள் பெற்றுக் கொண்டு குதூகலமாகத் திரும்பிய காட்சியையும் – இன்றைய தினம் அவருடைய பெயரால் அமைந்துள்ள அந்த நிகழ்ச்சியையும் – அந்த நிகழ்ச்சியில் அவருக்காக அமைக்கப்பட்ட சிலையையும் அந்த ஊரே திரண்டு வந்து கண்டு வணங்கி, மகிழ்ந்து கழக அரசை வாழ்த்திச் சென்ற அந்த மாட்சி என்னுடைய மனதிலே நிலை பெற்றிருக்கிற நேரத்தில் மற்றொரு சித்திரமாக இந்தக் கூட்டம், இந்த விழா அமைந்திருப்பதை நான் காணுகின்றேன்.

**தமிழ் மக்கள் கடல்**

மருதுபாண்டியர்களுக்கு சிலை அமைக்க வேண்டுமென்ற ஒரு ஆதங்கம் – ஒரு விருப்பம் இந்த வட்டாரத்திலே உள்ள குறிப்பிட்ட சமுதாயத்திலே உள்ள பெரியவர்களுடைய ஆசை – இவைகளெல்லாம் படிப்படியாக எனக்கு நினைவூட்டப்பட்டு அதிலும் குறிப்பாக என்னுடைய தம்பி பொன்.முத்துராமலிங்கம் அவர்கள் என்னைக் காணுகிற நேரத்திலெல்லாம் இதைப் பற்றி எடுத்துச் சொல்லி, இதற்காக தேதி பெற்று – இன்றைக்கு இந்த விழா மதுரையில் சித்திரைத் திருவிழா போல, இந்தச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நான் பக்கத்திலே உள்ள பெரியவரைக் கேட்டேன், "எதிரே இருப்பதுதான் கூட்டமா? இந்தப் பகுதியிலே இருப்பவர்களெல்லாம் இவ்விழாவிற்கு வந்த கூட்டத்தாரா?" என்று கேட்டபோது, "ஆமாம். அங்கே

இருப்பவர்களும் இந்தக் கூட்டத்திற்கு வந்தவர்கள்தான் என்று அவர் வியப்போடு சொன்னார். இது ஒரு குளக்ககரையிலே நடைபெறுகிற கூட்டம் என்பதை முதலிலேயே குறிப்பிட்டார்கள். மருதுபாண்டியர்களுக்கு மிக மிக பழக்கமான ஒரு இடத்தில் நடைபெறுகிற கூட்டம் என்று சொன்னார்கள். இது குளம் என்பது உண்மையானால், குளத்திற்குப் பக்கத்திலே ஒரு கடலும் இன்றைக்கு உருவாகி இருக்கிறது. அதுதான் 'மனிதக் கடல்', 'தமிழ் மக்களுடைய கடல்' என்று சொன்னால் அது மிக மிகப் பொருத்தமான ஒன்றாகும். இந்தக் கடலில் பல முத்துக்கள் சிதறின.

**மருது சகோதரர்கள் பற்றி ஆங்கிலேயத் தளபதியின் கருத்து**

உரையாற்றியவர்கள் அத்தனை பேரும் மருது பாண்டியர்களின் மாண்பினை, மாவீரத்தை அவர்கள் அரசோச்சிய திறமையை, ஆற்றலை எடுத்துரைத்தார்கள். மருது பாண்டியர்களை எதிர்த்து நின்ற வெள்ளைக்காரன் கூட அவர் விரோதமாக இருந்தாலுங்கூட, எதிர்முனையிலே இருந்து போரிட்டாலுங்கூட, ஜேம்ஸ் வெல்ஷ் என்ற ஒரு வெள்ளைக்காரத் தளபதி மருது பாண்டியர்களைப் பற்றி என்ன எழுதினார் என்பது மிகச் சுவையான ஒன்றாகும். சின்னமருது, பெரியமருது என்ற இந்த இருவரில் அந்த ஆங்கிலேயத் தளபதி ஜேம்ஸ் வெல்ஷ் என்பவர் குறிப்பிடுகிறார்.

முதலில் மருதுபாண்டியர்களுக்கு அந்த ஆங்கிலேயத் தளபதி நண்பராக இருந்தவர், பிறகு அவர்களுக்கு நாடு பிடிக்கும் ஆசை வந்து விட்டது என்ற காரணத்தால், அவர்களை எதிர்க்கின்ற அந்தக் கொள்கை முடிவை மருது பாண்டியர்கள் எடுத்து போர்க்களத்தில் நின்றபோது, அப்போதும் அவர்கள் நம்மை எதிர்த்துப் போரிடுகிறார்களே என்பதற்காக, பொல்லாங்கு பேசவில்லை, உண்மையை மறைக்கவில்லை, அந்த ஆங்கிலேயத் தளபதி சொல்லுகிறார். ''ராணுவ நினைவுகள்'' என்ற ஒரு நூல் எழுதுகிறார் அந்த ஜேம்ஸ் வெல்ஷ் என்ற ஆங்கிலேயத் தளபதி. அதிலே சொல்லுகிறார் :

"Of the two Murdoos, the elder brother was called "wella" or "Velli Murdoo" but he had nothing to do with the management of the country. He was a great sportsman and gave up his whole time to hunting and shooting. Being a man of uncommon stature and strength, his chief delight was to encounter the monsters of the woods, and it was even said that he could bend a common Arcot rupee with his fingers"

(''மருது இருவரில்'' ''வெள்ளை'' அல்லது ''வெள்ளி மருது'' என அழைக்கப்பட்ட மூத்தவர் நாட்டு நிருவாகத்தில் ஈடுபடவில்லை; அவர் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்; முழு நேரத்தையும் வேட்டையாடுவதிலும், துப்பாக்கிச் சுடுவதிலும் செலவிட்டார். சராசரி மனிதர்போல் இல்லாமல் வலிமையான மரங்களுக்கு நடுவில் விலங்குகளை வேட்டையாடுவதில் பெரிதும் மகிழ்ந்தார்; ஆற்காட்டின், ஒரு ரூபாய் பணத்தைத் தமது விரல்களாலேயே எளிதில் வளைக்கும் ஆற்றல் கொண்டவராகவும் விளங்கினார்'')

அதாவது பெரிய மருது வேட்டையாடுவதில் தான் விருப்பம் உள்ளவர். தன்னுடைய தேச நிருவாகத்தில் அவ்வளவாக கவனம் செலுத்தாவிட்டாலுங்கூட, அவருடைய பலமும் அவருடைய தோற்றமும், அவருடைய சாயலும், அவருடைய நடவடிக்கையும் போற்றத்தக்கவை என்று கூறிவிட்டு அவருடைய வலிமையைப் பற்றிச் சொல்லும்போது, அந்தக் காலத்தில் ஆற்காட்டு ரூபாய் நாணயம் மிகவும் அழுத்தமானது. அதை ஒடிக்கவோ, வளைக்கவோ முடியாது. அந்த ஆற்காட்டு நாணயத்தைச் சொல்லி, அந்த வெள்ளைக்காரத் தளபதி, பெரிய மருது எவ்வளவு வலிவு வாய்ந்தவர் என்பதற்கு எடுத்துக்காட்டு ஆற்காட்டு ரூபாய் நாணயத்தை ஒரு விரலால் வளைத்துக் காட்டுவார் என்று அவருடைய வீரத்தை அன்றைக்கு அவர் விளக்குகிறார்.

அதைப் போலவே சின்ன மருதுவைப் பற்றியும், அவர் எழுதும்போது,

"The Cheena Murdoo was the ostensible sovereign of an extensive and fertile country and his general residence was at SHEREWALE. (சிறுவயல்) Though of a dark complexion, as was a portly handsome affable man of the kindest manners and most easy access";

வெளிப்படையான தோற்றமுள்ள ஒரு பரந்த வளமிக்க நாட்டிற்குச் சின்ன மருது அதிபதியாக இருந்தார். அவரது பொதுவான இருப்பிடம் சிறுவயலாகும். அவர் கருத்த மேனியாய் காண்பதற்கழகாய், பழகுவதற்குப் பண்பாளராய், இரக்க குணங்கள் கொண்ட இனியவராய், எவரும் எளிதில் சந்திக்கக் கூடியவராய் விளங்கினார் என்று தன்னுடைய பகைவரைப் பற்றி பாராட்டுச் சொன்ன ஒரு பரங்கித் துரை அன்றைக்கு எவ்வளவு மதிப்பும் மரியாதையும் மருது சகோதரர்கள் மீது வைத்திருந்தார்கள் என்பதற்கு இதை விட வேறு எடுத்துக்காட்டுத் தேவையில்லை. இப்படி பகைவராலும் பாராட்டப்பட்ட, போற்றப்பட்ட, புகழப்பட்ட மாவீரர்களுக்குத்தான் மதுரையம்பதியில் இன்றைக்கு நாம் இந்த அழகான சிலைகளை வைத்திருக்கிறோம்.

இந்தச் சிலைகளை வைத்திருக்கின்ற நேரத்தில் சில கோரிக்கைகளை நம்முடைய நண்பர்கள் குறிப்பாக விழாத்



தலைமையேற்றிருக்கின்ற தம்பி பொன். முத்துராமலிங்கம் முன்மொழிந்து, அதை வழிமொழிந்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். இந்தச் சமுதாயத்திற்கு இன்றைக்கு மூன்றாகவோ நான்காவோ பிரித்துச் சொல்லப்படுகின்ற இந்தச் சமுதாயங்களை ஒரே சமுதாயமாக ஒரே இனமாக ஆக்க வேண்டும், அப்படி அழைத்து அதற்குத் தேவையான அனைத்தையும் செய்ய வேண்டும் என்பது இந்தக் கோரிக்கைகளின் தாத்பரியம்.

நான் நிறைய பேச வேண்டும், அதற்கு நேரம் இல்லை என்றாலுங் கூட ஒரு முக்கியமான கோரிக்கையை என் முன்னால் வைத்து விட்ட காரணத்தினால், அதைப்பற்றி நான் இங்கே விரிவாகச் சொல்ல வேண்டியிருக்கின்றது.

முத்துராமலிங்கம் அவர்கள் தேதி கேட்க வந்த போதே இந்தக் கோரிக்கையைப் பற்றிச் சொல்லியிருக்கலாம், தேதி உறுதியாக்கப்பட்ட பிறகாவது சொல்லியிருக்கலாம், நேற்றும் இன்றும் என்னைச் சந்தித்தார், சந்தித்த போதாவது சொல்லியிருக்கலாம். ''மாலை 5 மணிக்கெல்லாம் வந்து விடுங்கள் அண்ணா'' என்று நேரம் சொல்வதற்காக வந்தார், அப்போதாவது சொல்லியிருக்கலாம். அப்போதெல்லாம் சொல்லாமல், மேடையில் வைத்துக் கொண்டு சொல்வதற்கு காரணம், உங்களையும் என்னையும் இதிலே சிக்க வைக்க வேண்டும் என்ற அபாரமான ராஜ தந்திரத்தை அவர் பயன்படுத்திச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் நான் அவருக்குச் சொல்லுவேன், நினைவூட்டுவேன். இரண்டு நாட்களாக இந்தச் செய்தி பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் பத்திரிகையாளர்களிடத்திலே சொன்னதாக நான் செய்தி பார்த்தேன். பேசியதாகவும் செய்தி படித்தேன். தான் இந்த மூன்று சமுதாயங்களையும் ஒன்று சேர்த்து கள்ளர், மறவர், அகம்படியர் என்ற மூன்று சமுதாயங்களையும் ஒன்று சேர்த்து கள்ளர், மறவர், அகம்படியர் என்ற மூன்று சமுதாயங்களையும் ஒன்று சேர்த்து ''தேவர் இனம்'' என்று ஆணை பிறப்பித்ததாகவும், ஆனால் இந்தக் கருணாநிதி அதைக் கிடப்பிலே போட்டு விட்டான் என்றும் சொல்லியிருக்கிறார்.

இதைப்பற்றி காலையிலே கூட பத்திரிகையாளர்கள் என்னிடம் கேட்டார்கள். நான் அதற்குப் பதிலளித்திருக்கிறேன். அந்தப் பத்திரிகையாளர் கூட்டத்திற்கு பொன்.முத்துராமலிங்கம் வரவில்லை. ஏனென்றால் விழா வேலையிலே இருந்த காரணத்தினால். என்ன கேள்வி கேட்டார்கள் என்றால்,

''முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று பேசும்போது முக்குலத்தோர் மூன்று பிரிவாக இருந்ததை இணைத்து நான் ஆட்சியில் இருந்து போது உத்தரவு பிறப்பித்திருந்தேன். ஆனால் அதை தற்போது கிடப்பில் போட்டு விட்டதாகச் சொல்லியிருக்கிறாரே?''

என்பது கேள்வி.

இதற்கு நான் சொன்ன பதில், அதையும் படிக்கிறேன்,

"நல்ல வேளை, ரத்து செய்து விட்டதாகச் சொல்லவில்லை அல்லவா? கிடப்பில் போட்டு விட்டதாகத்தான் சொல்லியிருக்கிறார். அதில் இருந்து என்ன புரிகிறது? அந்த மூன்று சமூகத்தினரும் – தேவர் இனம் என்று சொல்லிக் கொள்வதற்கு அதிலே ஒரு சிலர் சில மாறுபாடான கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள் என்பதால் அதைப் பற்றி மேலும் சிந்திக்க, மேலும் ஆலோசனை செய்து முடிவெடுக்கத்தான் பொறுத்திருக்கிறோமே தவிர, அந்த முடிவை எடுப்பதற்கு எந்தவிதமான தயக்கமும் எனக்குக் கிடையாது" என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

எனவே ஒவ்வொரு சமுதாயத்தினரும், நாம் கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். ஏதாவது ஒரு இதிலே சேருகின்ற சமுதாயம், இப்படியாகி விடக் கூடாது, இரண்டு குழந்தைகள் தெருவில் நின்று கொண்டு "என் வீட்டிலிருந்து கொஞ்சம் உமி கொண்டு வருகிறேன், உன் வீட்டிலிருந்து கொஞ்சம் அவல் கொண்டு வா, இரண்டையும் ஒன்றாகப் போட்டு ஊதி ஊதிச் சாப்பிடலாம்" என்று சொன்னால் இதிலே உமி கொண்டு வருகின்ற குழந்தைக்குத்தான் இலாபம், அவல் கொண்டு வருபவருக்கு இலாபம் இல்லை. வருகின்ற இலாபம் சமமாக இருக்க வேண்டும், ஒருவருக்கு அதிகம், ஒருவருக்கு குறைவு என்ற நிலையில் அந்தக் கூட்டோ, மூன்று இனமும், மூன்று சமுதாயமும் ஒன்று சேருகின்ற நிலையோ கூடாது. சேர்ந்தால் எல்லோருக்கும் சமம்தான், அந்தச் சமத்துவ நிலை வந்தால்தான், அப்படிச் சேருவதிலே ஆதாயம் இருக்க முடியும். அந்த ஆதாயம் வராதென்று சில பேர் வாதிடுகிறார்கள். சில பேர் வரும் என்று சொல்கிறார்கள். நான் எதை நம்புவது என்று முடிவெடுப்பதற்கு முன்பு, மறுபடியும் அவர்களையெல்லாம் அழைத்து வைத்துப் பேசி இப்படிச் செய்தால், எல்லா சமுதாயமும் சமத்துவமாக நன்மைகளைப் பெற முடியுமா என்றால், பெற முடியும் என்றால் நான் இந்தச் சிலை திறப்பு விழாவிலே உங்களுக்கு உறுதி அளிக்கிறேன், நிச்சயமாக இந்த இனத்தை ஒரே இனமாக நான் அறிவிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

## அரசாணை பிறப்பித்தால் மட்டும் போதாது! நடைமுறைப்படுத்த வேண்டும்!

ஆனால் ஜெயலலிதாவைப் போல அரசாணை பிறப்பித்தால் மாத்திரம் போதாது. ஆங்கிலத்தில் சொல்வார்கள், ஒரு ஆணை பிறப்பித்தால் அதை "Implement" செய்யவேண்டும், அதை நடைமுறைப்படுத்த வேண்டும். இவர்கள் ஆணை பிறப்பித்தது எந்தத் தேதியில்? அவர்கள் ஆட்சியிலே இருந்த போது ஆணை பிறப்பித்திருக்கலாம். ஆணை பிறப்பித்த பிறகு ஏதாவது அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுத்தார்களா? நடைமுறைப்படுத்த ஏதாவது ஒரு கோடாவது கிழித்தார்களா? கிடையாது. நாங்கள் அந்த ஆணை சரியான ஆணைதான், எல்லோரும் ஒத்துக் கொள்கிறோம் என்று கள்ளர், மறவர், அகம்படியர் இந்த மூன்று சமுதாயத்தாரும் ஒத்துக் கொள்வார்களேயானால், நான் மறுநாளே தேவர் இனம் ஒரே இனம் என்று அறிவிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை மருதுபாண்டியர் சிலை திறப்பு விழாவிலே உங்களுக்கு உறுதிபடக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட, எல்லோரும் ஒத்துக் கொள்ளக் கூடிய நான் சொன்ன இந்த மூன்று சமுதாயங்களும் ஒத்துக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும், அப்படி உருவானால் அது எனக்கும் சுலபம், ஆணை பிறப்பிக்க. ஆணை பிறப்பிக்கப்பட்டால் இந்தச் சமுதாயங்களுக்கும் இலாபம், பெருத்த ஆதாயம் நிச்சயமாகக் கிடைக்கும்.

## மருதுபாண்டியர்களின் புகழ்

மருதுபாண்டியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சமூகத்திற்கு எப்படியெல்லாம் பணியாற்றினார்கள். எப்படியெல்லாம் தொண்டாற்றினார்கள், எந்த அளவிற்கு ஈவு இரக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பது அவர்களுடைய வரலாற்றைப் படிக்கின்ற அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். மருதுபாண்டியர்கள் இந்த மண்ணிலே உலவியர்கள், இந்த மண்ணின் மணம் மருது பாண்டியர்கள் சிந்திய ரத்தத்தால் ஒரே நாளில் திருப்பத்தூர் தூக்கு மேடையில் ஐநூறு பேர் சிந்திய ரத்தம் – ஐநூறு பேருடைய உயிரை வெள்ளைக்காரன் ஒரே நாளில் பறித்தானே, அப்படி தியாக பூமி இந்த மதுரை மாவட்டம் ஆனாலும், சிவகங்கை மாவட்டமானாலும் மருது பாண்டியர்களுடைய கடைசி மூச்சால் நிரம்பிய மாவட்டம்.

அப்படிப்பட்ட மாவட்டத்தில் வீரம் விளைவித்த அந்தத் தீரர்களுடைய பெயரால் ஒரு விழாவை நடத்தி அவர்களுடைய மிக அருமையான சிலைகளை, வீரம் கொப்பளிக்கின்ற சிலைகளை நிலைநாட்டிய தம்பி முத்துராமலிங்கம் அவர்களுக்கும், குழுவினருக்கும் இந்த விழாவிலே வந்து உரையாற்றிய நம்முடைய தமிழ்ச் சான்றோர்களுக்கும், ஆன்றோர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து இந்தச் சமுதாயத்திற்கு இன்று நேற்றல்ல, பல ஆண்டுக் காலமாகப் பணி புரிந்து வருகின்ற நான் தொடர்ந்து அந்தப் பணியை ஆற்றுவேன் என்ற சூளுரையை இந்த மேடையிலே தெரிவித்து வாழ்க மருது பாண்டியர்களின் புகழ் என்று கூறி விடைபெறுகிறேன்".

* * *



சென்னைக்கு வருகைபுரிந்த மேதகு குடியரசு தலைவர் திருமதி. **பிரதீபா பாட்டீல்** அவர்களை
மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா,**
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** மற்றும் மத்திய, மாநில அமைச்சர்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். (02.11.2007)



பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 119 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு,
சென்னை - கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின்
திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்ட புகைப்படத்திற்கு
மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள்,
மலர் தூவி மரியாதை செலுத்தினார். அருகில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உள்ளனர். (14.11.2007)



# தமிழக அரசின்

# புதிய தொழில் கொள்கை - 2007

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்**

"உற்பத்தித் துறையில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும்; தமிழகத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைச் சர்வதேசச் சந்தையில் தரத்திலும் விலையிலும் போட்டியிடக்கூடிய அளவுக்கு மேம்படுத்தவும்; அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும்; மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் தொழில் துறையில் வளர்ச்சியடையவும்; மாநிலத்திலுள்ள தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளைக் கலந்தாலோசித்து ஒரு புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்படும்'' – எனத் தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது.

அந்த அறிவிப்பின்படி, தமிழகத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறிவதற்குரிய வழிமுறைகளை நிர்ணயிப்பதற்காக தொழில் துறைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றும், அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட சிறப்புத் தொழில் முனைப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, அக்குழுக்களின் துணைகொண்டு தமிழகத்தில் உள்ள பல்வேறு தொழிற்கூட்டமைப்புகள் மற்றும் வர்த்தகசபை ஆகியவற்றுடன் விரிவான முறையில் கலந்தாய்வு செய்து அவற்றின் அடிப்படையில் புதிய வரைவுத் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டது.



இந்த வரைவுத் தொழில் கொள்கையை அமைச்சர்கள் அளவிலான குழு விரிவாக விவாதித்து வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், வடிவமைக்கப்பட்டுள்ள "புதிய தொழில் கொள்கை – 2007"–ஐ மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 5.11.2007 அன்று வெளியிட்டார். அதனை மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்

**புதிய தொழில் கொள்கை 2007 –இன் குறிக்கோள்கள் பின்வருமாறு :–**

- 2011 ஆம் ஆண்டிற்குள் 20 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்; மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் தயாரிப்புத் துறையின் தற்போதைய பங்களிப்பு 21 சதவீதம் என்பதை 27 சதவீதமாக உயர்த்துதல்;
- முதலீட்டாளர்களைக் கவரும் முதன்மை முதலீட்டு மையமாகத் தமிழகத்தை உருவாக்குதல்; உலகளாவிய பொருள் வழங்கீட்டுத் தொடர்களுடன், உள்நாட்டுத் தொழிற்பகுதிகளை ஒருங்கிணைக்க உதவுதல்;
- திறன்மிக்க தொழிலகக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்; மனித வளத்தையும் அறிவாற்றல் முதலீட்டையும் உலகத் தரத்திற்கு மேம்படுத்துதல்.

ஆகிய குறிக்கோள்களை அடைவதற்கேற்ற உத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழி முறைகளை விளக்கமாக இப்புதிய தொழிற்கொள்கை எடுத்துரைக்கிறது.

இக்கொள்கைக்கேற்ற செயல்முறை உத்திகளின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- சென்னைக்கு அப்பாலும் தொழில் பூங்காக்கள் அமைவதற்கு ஊக்கமும், உதவிகளும் அளித்தல்; அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்காகத் தொழிலில் பின்தங்கிய வட்டாரங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்தல்;
- தொழில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் தனியார்துறை முதலீடுகளைக் கொண்டுவர பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் கூட்டுமுயற்சிகளை ஏற்படுத்துதல்; உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஊக்குதவிகள் அளித்தல்; சிப்காட் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அல்லது தனியார் மேம்பாட்டாளர்கள் அமைக்கும் தொழில் பூங்காக்களைச் சமமாக நடத்துதல்;
- முதல் கட்டமாக, சென்னை–மணலி–எண்ணூர் மற்றும் செங்கல்பட்டு–திருப்பெரும்புதூர்–இராணிப்பேட்டை பகுதிகளை தொழிலகச் சிறப்புப் பகுதிகளாக உருவாக்குதல்; அடுத்த கட்டமாக, மதுரை தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் – சேலம் பகுதிகளை மேம்படுத்தப்படுதல்;
- வளர்ந்த நாடுகளில் உள்ள அறிவியல் பூங்காக்களைப் போன்று நுண்ணிய உயர்தொழில் நுட்பப் பூங்காக்கள் சிப்காட் நிறுவனத்தினால் உருவாக்கப்படுதல்;
- உயிரி அறிவியல் புதுமைத்திட்ட நிதி ஒன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படுதல்;
- பயிற்சி பெற்ற பணியாளர்களின் தேவை தொழில்களுக்கு அதிகரித்து வருவதை நிறைவு செய்யும் பொருட்டும், மக்களுக்கான

வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டும் மனித ஆற்றல் மற்றும் தொழில் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல்;

- தொழிற்பயிற்சி தர மேம்பாட்டுத்திட்டம் ஒன்று தொடங்கப்படும். தொழிற்சாலைகள் – கல்வி நிறுவனங்கள் இடையேயான தொடர்புகளை மேம்படுத்துதல்;

- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிருவகிக்கும் ஒரு மூல நிதியின் மூலம் தமிழ்நாடு தொழில்நுட்ப மற்றும் எரிசக்தி பயன்பாட்டுத் திறன்களை உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்;

- மாநிலத்தில் ஏற்கெனவே அமையப் பெற்றுள்ள தொழிற் பிரிவுகளின் விரிவாக்கத் திட்டங்களுக்கு ஊக்கச்சலுகைகள் வழங்குவதற்காக அவற்றைப் புதிய தொழிற் பிரிவுகளுக்கு இணையாகக் கருதுதல்; தமிழ்நாட்டில் ஏற்கெனவே அமையப்பெற்று 10 ஆண்டு காலத்திற்கும் மேலாகச் செயற்பட்டு வரும் தொழிற் பிரிவுகள் அமைக்கின்ற விரிவாக்கத் திட்டங்களுக்குக் கூடுதல் சலுகைகள் அளித்தல்;

- நேரடி வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுவதற்கும், முதலீட்டின் அளவிற்கும் உட்பட்டு, முதலீட்டுக்குப் பிந்தைய மானியமாக அளிக்கப்படுகின்ற மூலதன மானியமும், மின்சார வரி விலக்கும் அளித்தல்;

- முதலீடு செய்யும் நிறுவனங்கள் சமுதாய மற்றும் சமூக வளர்ச்சி நடவடிக்கைகளில் பங்கு கொள்வதை ஊக்கப்படுத்துதல்; அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றி உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் முதலீட்டு நிறுவனங்களுக்குக் கூடுதல் ஊக்குதவிகள் அளித்தல்;

- வித்தியாசமான திறமைகள் கொண்டவர்களைப் பணிகளில் அமர்த்தும் தொழிற்சாலைகளுக்கு ஊக்கமளித்தல்;

- விவசாயிகளின் வருவாயைப் பெருக்க உதவும் வகையில் ஒரு புதிய உயிரி அறிவியல் கொள்கை, ஜவுளித் தொழிற்சாலைகளுக்கான ஒருங்கிணைந்த கொள்கை, மது தயாரிப்புக் கொள்கை ஆகியவை அறிவித்தல்;

- ஓரளவு செயல்திறம் உடையவர்களுக்கும், செயல்திறம் இல்லாதவர்களுக்கும் பெரிய அளவிலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான மதிப்புக் கூட்டு நடவடிக்கைகளுக்காக வேளாண் பொருளாதார மண்டலங்கள் மற்றும் வேளாண் உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்தும் அமைப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல்;

- உற்பத்தித் தொழில்களுக்குத் தொழில் கொள்கையின் கீழ் வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் வேளாண் தொழில்கள், வேளாண் இயந்திரங்கள், நுண்ணிய பாசனத்திற்கான வேளாண் சாதனங்கள் தயாரிப்புத் தொழில்களுக்கும் விரிவு படுத்துதல்;

- தொழிற்சாலை அமைப்புகளுடன் கூட்டு முயற்சி வாயிலாக பன்னாட்டுக் கண்காட்சி மற்றும் மாநாட்டு மையங்களை அமைத்தல்;

- அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகைகளைப் புதிய மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்கும் வழங்குதல்;

- சுய சான்றளிப்பு மற்றும் தொகுப்பு ஆண்டு விவர அறிக்கைகள் வாயிலாக விதிமுறைகளைத் தளர்த்தி எளிமைப்படுத்துதல்;

- மதிப்புக் கூட்டு வரி செலுத்துதல் மற்றும் விவர அறிக்கைகளை மின்னணு முறையில் தாக்கல் செய்யும் முறையை அறிமுகப் படுத்துதல்;

- மின்னணு வன்பொருள், ஜவுளி, தோல், மோட்டார் வாகனம் போன்ற தொழில்களில் ஏற்றுமதி மேம்பாட்டிற்குச் சிறப்புக் கவனம் செலுத்துதல்;

- ஆபத்து நிறைந்த Red வகைத் தொழிற் சாலைகள், ஓரளவு ஆபத்து உள்ள Orange வகைத் தொழிற்சாலைகள், ஆபத்து இல்லாத Green வகைத் தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்குத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் விரைவாகவும் குறித்த காலத்திலும், சுற்றுச் சூழல் தொடர்புடைய அனுமதிகள் வழங்குதல்.



# டெல்லி-மும்பை தொழில் முற்றம் போல சென்னை-பெங்களூரு தொழில் முற்றத்தை ஏற்படுத்துவீர்!

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம்**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழ்நாடு தற்போது உற்பத்தித் துறையிலும், தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் சேவைத் துறைகளிலும் மிகப் பெருமளவு முதலீடுகளை ஈர்த்து வருகிறது. நோக்கியா, டெல், சாம்சங், மோடோரோலா, ஃபிளெக்ஸ்ட்ரானிக்ஸ், ஹுண்டாய், ஃபோர்ட், மஹிந்த்ரா, ரெனால்ட், நிஸ்ஸான், செயின்ட் கோபய்ன்ஸ் போன்ற உலகளாவிய நிறுவனங்கள் மிகப்பெரிய அளவில் உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைக்க சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளன. பல சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் மாநிலத்தில் உருவாகி வருகின்றன. இந்த முதலீடுகளில் பல சென்னைக்கும் திருப்பெரும்புதூருக்கும் இடையிலுள்ள முற்றத்தில் ஏற்பட்டு வருகின்றன.

எனவே எங்களது அரசு சென்னை – திருப்பெரும்புதூர் – இராணிப்பேட்டை பகுதியை ஒரு சிறப்புத் திறன் தொழில் முற்றமாக வளர்த்தெடுக்க முடிவு செய்துள்ளது. இந்த முற்றம் வழியாக தொழிற்பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், ஒருங்கிணைந்த நகரியங்கள் போன்றவற்றை அமைப்பது எங்களது தொலைநோக்குப் பார்வையாகும். எங்களுடைய குறிக்கோள் உலகளாவிய போட்டித்திறன் கொண்ட கட்டமைப்பு வசதிகளை வழங்குவதும், இணைந்த, கணிசமாக தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதும் ஆகும்.

இந்த வளர்ச்சியின் போக்கு மெதுவாக இராணிப்பேட்டைக்கு அப்பால் பெங்களூரை நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலைக்கு நகரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இவ்வாறு, மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள டெல்லி – மும்பை தொழில் முற்றம்போல சென்னை – பெங்களூரு முற்றத்தை சிறப்புத்திறன் தொழில் முற்றமாக வளர்த்தெடுக்க மிகப்பெரும் வாய்ப்பு உள்ளது.

நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளும் சம அளவில் வளர்ச்சி என்ற கோட்பாட்டிற்கு, டெல்லி – மும்பை முற்றம் வளர்த்தெடுக்கப்படும்போதே சென்னை – பெங்களூரு முற்றத்தையும் வளர்த்தெடுக்க அவசர நடவடிக்கைகள் தேவை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

தொழில்களின் இருப்பு, திறமைவாய்ந்த மனிதசக்தி மற்றும் இதர அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் என்ற பல முக்கியமாக வலிமைகள் சென்னை மற்றும் பெங்களூருக்கு இடையிலான முற்றத்தில் ஏற்கெனவே இருக்கின்றன.

இத்தகைய முற்றம் சென்னை மற்றும் பெங்களூரு நகரங்களின் வலிமைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சென்னையிலும், பெங்களூரிலும் உள்ள பன்னாட்டு விமான நிலையங்கள் மற்றும் சென்னையிலுள்ள இரு பெரும் துறைமுகங்கள் ஆகியவை இந்த முற்றத்தின் வளர்ச்சிக்கு மேலும் பங்களிப்பைச் செலுத்தும்.

மேற்கூறிய காரணங்களால், டெல்லி – மும்பை தொழில் முற்றம் போல சென்னை – பெங்களூரு சிறப்புத் திறன் தொழில் முற்றத்தை வளர்த்தெடுக்கும் அறிவிப்பினைச் செய்யுமாறு நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக உங்களிடமிருந்து விரைவில் சாதகமான பதிலை நான் கோரலாமா? ★



# ஒன்றரை ஆண்டுக் காலத்தில் பல அரிய சாதனைகளை பலரும் அறியக்கூடிய சாதனைகளை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

சென்னை வள்ளுவர்கோட்டத்தில்
21.10.2007 அன்று தமிழ்நாடு இளநிலை
ஆசிரியர் பேரவை நடத்திய
நன்றி அறிவிப்பு மாநில மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரை.

முதன் முதலாக வள்ளுவர் கோட்டத்தில் நன்றி அறிவிப்பு என்ற ஒரு சொற்றொடரை – சுவை மிக்கச் சொற்றொடரை நான் தொடக்கத்தில் குறிப்பிட்டதைப் போல என் இதயம் மகிழ்கின்ற அளவுக்குப் பயன்படுத்தி ஒரு மாநாடு கூட்ட முன் வந்த உங்களுடைய பரந்த உள்ளத்தை, நன்றி கலந்த உள்ளத்தை, நான் பாராட்ட, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநாட்டிற்கான தேதியை தம்பி பொன்முடியிடத்திலே அளித்திருந்தேன் என்றாலும், இன்று (21.10.2007) பிற்பகல் இந்த மாநாட்டிற்கு வர முடியுமா என்று கேள்வி எழுகிற அளவிற்கு உடல் நலிவுற்று, இருந்தாலுங்கூட, சில வார ஏடுகளுக்கு வேலை தந்து விடக் கூடாது என்பதற்காக என் தலைவர் எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றுரைத்த அந்த மொழியை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டு உங்களைக் கண்டால் உடல்நிலை அல்ல, எல்லா நிலையும் சரியாகிவிடும் என்ற நம்பிக்கையோடு உங்கள் முன்னால் வந்து அமர்ந்திருக்கிறேன்.

இந்த வள்ளுவர்கோட்டம் நிரம்பி வழிகின்ற காட்சியை காணுகிறேன். 1330 குறள்களையும் அதற்குரிய பொருள்களின் உரையோடு ஒரே நேரத்தில் காண்பதைப் போன்ற காட்சி உங்களையெல்லாம் காணுகின்ற நேரத்தில் என் மனக்கண்களுக்குத் தெரிகிறது.




வள்ளுவர்கோட்டம் ஒரு வரலாற்றை உள்ளடக்கியது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த வள்ளுவர்கோட்டத்தை நம்முடைய ஆட்சி தொடங்கிய சிறிய காலத்திற்கெல்லாம் இந்த இடத்தில் வெயிலில், மழையில், புயலில் இப்படி பல்வேறு பருவ நிலை கோளாறுகளையெல்லாம் சமாளித்து தாங்கிக்கொண்டு இதே பணியாற்றிய பாட்டாளிகளிடத்தில், சிற்பிகளிடத்தில் அவர்களுடைய திறமையையெல்லாம் வெளிப்படுத்துகின்ற வகையிலே வேண்டுகோள் விடுத்து, இன்று தமிழகத்திற்கு வருகின்ற வெளியூர்க்காரர்கள், வெளிநாட்டுக்காரர்கள் பார்க்கின்ற சுற்றுலா இடங்களிலே ஒன்றாக இந்தக் கோட்டம் அமைந்திருப்பதை நாம் பெருமையோடு எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம். அத்தகைய வள்ளுவர் கோட்டத்தில் குழுமியிருக்கின்ற நீங்கள் நிறைந்த மகிழ்ச்சியோடு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அமர்ந்திருக்கின்ற காட்சியை என்னால் காணமுடிகிறது.

**நன்றி தெரிவிக்கின்ற வாய்ப்பு**

உங்களுடைய அமைப்பின் பெயர் மாத்திரம் அல்ல இன்றைக்கு மாற்றப்பட்டிருப்பது – இளநிலை ஆசிரியர் பேரவை என்பது தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் என்று இன்று மாறியிருப்பது போலவே உங்களுக்கு தொகுப்பூதியம் என்ற பெயரிலே இருந்த சம்பளம், காலமுறை ஊதியம் என்றும் மாறியிருக்கின்ற உங்களுடைய அளவிலா வற்புறுத்தலின் காரணமாக, உங்களுடைய கோரிக்கையில் இருந்த அழுத்தத்தின் காரணமாக எல்லாவற்றையும்விட சிறப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், நியாயத்தின் காரணமாக காலமுறை ஊதியம் என்று மாற்றப்பட்டுள்ள சூழ்நிலையில் அதற்கான மகிழ்ச்சியையும், அந்த மகிழ்ச்சியினூடே கலந்து பொங்கி வருகின்ற நன்றியையும் நீங்கள் இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

"அப்பாடா நன்றி தெரிவித்தீர்களே" – அதற்கொரு நன்றி என்று நான் நன்றி தெரிவிக்கிற ஒரு வாய்ப்பை அளித்தமைக்காக ஒரு நன்றி.

நீங்கள் இங்கே உரையாற்றிய நிருவாகிகள், மாநாடு நடத்துவோர், தலைமை வகிப்போர், முன்னிலை ஏற்றிருப்போர், வரவேற்புரையாற்றியவர் என்று அத்தனை பேரும், தமிழக அரசின் கல்வித்துறையை சிலாகித்துப் பேசினீர்கள், பாராட்டினீர்கள். உயர்கல்வித்துறை அமைச்சரையும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரையும் வெகுவாகப் புகழ்ந்து பேசினீர்கள். நான் சாதாரணமாக இருவரை இந்த இரு துறைகளுக்கும் நியமிக்கவில்லை. முதலமைச்சருடைய பொறுப்பு–துறைகளுக்கான அமைச்சர்களை நியமிப்பது என்றாலுங்கூட, இதிலே ஒரு துறைக்கு தங்கத்தையும் ஒரு துறைக்கு பொன்னையும் நியமித்திருப்பதற்குக் காரணம், ஒரு பெரிய துறை, கல்வித்துறை, அந்தத் துறையில் உங்களோடு இருந்து அனுபவங்களைப் பெற்று, உங்களுடைய தேவைகள் எவைகளாக இருக்கும் என்பதை அறிந்துள்ளவர் களைத்தான் இந்த அரசின் கல்வித்துறைகளின் அமைச்சர்களாக நாம் பெற்றிருக்கிறோம்.

**பட்ஜெட்டைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்**

இல்லாவிட்டால் முதலமைச்சரிடத்திலே தேதி வாங்கிக் கொடுப்பதும், அவர்கள் உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வலியுறுத்துவதும் அவர்கள் அந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு விழா எடுப்பவர்களும் அவர்களே, உங்களை ஊக்கப்படுத்துகின்ற நிலை இருக்கிறது என்றால் இப்படிப்பட்ட ஒரு உணர்வு–ஒருமித்த உணர்வு நம்முடைய அரசில் எல்லாத் துறைகளிலும் இருக்கின்ற அமைச்சர்களுக்கும் எனக்கும் இடையிலே இருக்கின்றது. அப்படியிருக்கின்ற காரணத்தினால்தான் இந்த ஒன்றரை ஆண்டுக்காலத்தில் பல அரிய சாதனைகளை பலரும் – அறியக்கூடிய சாதனைகளை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இன்னும் நிறைவேற்றுகின்ற வாய்ப்பையும் நீங்கள் அளிப்பீர்கள், நிறைவேற்றுவோம்.

இங்கே பெற்றுள்ள இந்த நன்மைகளையெல்லாம், பெற்றுள்ள இந்தச் சாதகங்களையெல்லாம் இன்றைக்கு பெற்றதாக இல்லாமல், கடந்த காலத்திலிருந்து கணக்கிட்டு

வழங்கவேண்டும் என்று நீங்கள் இங்கே சொல்லாமலேயே, நீங்கள் சொல்லியதாக பொன்முடி இங்கே சொன்னார். அது உண்மையோ, உண்மைக்கு மாறானதோ எனக்குத் தெரியாது. எதுவாக இருந்தாலும் அதை அறிவிப்பதற்கு உகந்த நேரம் அல்ல இது. பஞ்சாங்கத்தைப் பார்த்து அந்த நேரத்தை கணிக்கமாட்டேன். பட்ஜெட்டைப் பார்த்து, அந்த நேரத்தை கணிப்பேன். நீங்களும் பட்ஜெட்டைப் பார்த்து தெரிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த கால அரசு எப்படி இருந்தது? இப்போது எப்படியிருக்கிறது இந்த அரசு? என்று வேறுபாடுகளை, முரண்பாடுகளை நம்முடைய அமைச்சர்கள் இருவரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். சொல்ல வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டு மக்கள் அதை அனுபவரீதியாக இன்றைக்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். வரவேற்புரையாற்றிய திருமதி.அகிலா அவர்கள் பேசும்போது வீட்டு உலையிலே கொதிக்கின்ற அரிசியின் விலை என்ன? என்று சொன்ன போது நீண்ட நேரம் கைதட்டினீர்கள். அரிசி கொதிக்கிறது, அதே நேரத்தில் எரிச்சல் உள்ளவர்களின் இதயமும் கொதிக்கிறது. அப்படி கொதிக்கிற காரணத்தால்தான் அவர்கள் எல்லாம் அரிசியை மலிவான விலைக்கு வாங்கினாலுங்கூட, அரிசி விலையைக் குறை என்று ஒரு போராட்டம் நடத்துவதற்கு தயாராக இருக்கிறார்கள்.

**அந்த உணர்வு வென்றே தீரும்**

இந்த அரசுக்கு ஏதாவது ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டும், சிக்கலை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டம் வகுத்துக் கொண்டு காரியங்கள் நடைபெறுகின்றன. என்ன திட்டம் வகுத்தாலும், எத்தகைய தந்திரோபயமான சூழ்ச்சிகள், மாய்மாலங்கள் நடத்தப்பட்டாலும், தெளிவு பெற்றவர்கள் ஒரு மாநிலத்தில், ஒரு நாட்டில் பெருகி வருவார்களேயானால், அந்தத் தெளிவு நிச்சயமாக நல்ல தீர்ப்பை நியாயப்பூர்வமாக யாருக்கு வழங்க வேண்டுமோ அவர்களுக்கு வழங்கும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் எங்களுக்கு நிரம்ப இருக்கின்றது. அதனால் நான் தொடர்ந்து பணியாற்றுவேன் என்று உங்களுக்குச் சொன்னால், நான் என்னுடைய பதவியை விடாமல் பற்றிக் கொண்டேயிருப்பேன் என்று அர்த்தமல்ல. நான் என்பது என்னை ஆளாக்கிய அண்ணா அவர்கள் உருவாக்கிய இயக்கம். அந்த இயக்கம் என்பது தமிழ்நாட்டு மக்களுடைய இரத்த நாளங்களில், நரம்பு மண்டலங்களில், குருதிச் சுழற்சியில் ஓடிக் கொண்டிருக்கின்ற துடிப்பு – அந்த உயிர்த் துடிப்பு அணையாமல் இருக்கின்ற வரையில், அடங்காமல் இருக்கின்ற வரையில் அந்த உணர்வை யாரும் கிள்ளி எறிந்து விட முடியாது, அந்த உணர்வு வென்றே தீரும், தொடர்ந்து வென்றே தீரும்.

நீங்கள் உங்களுக்காக ஒரு ஆட்சி வேண்டுமென்று விரும்பினீர்கள், கருதினீர்கள், எதிர்பார்த்தீர்கள், திட்டமிட்டீர்கள். அந்த ஆட்சியை இன்றைக்கு அமைத்து அழகு பார்க்கிறீர்கள். நானோ இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்களோ, அமைச்சர்களாக தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற ஆசையினால் அல்ல, இந்த நாட்டுத் தமிழர்கள் சாதாரண, சாமான்ய மக்களுடைய பிரதிநிதிகள், இந்த நாட்டிற்காக உழைக்கின்ற உள்ளம் படைத்தவர்கள், பாட்டாளிகளின் துயரத்தை அறிந்தவர்கள், உழவர்களுடைய உழைப்பின் மேன்மையைப் புரிந்தவர்கள் – அவர்களை வாழ வைக்க அவர்களுடைய குடும்பங்கள் குதூகலமாக இருக்க பொதுவாக தமிழகம் வளம்பெற, பெற்றிருக்கின்ற வளத்தை விட இன்னும் பலமடங்கு அதிக வளம் பெற திட்டங்கள் தீட்ட, அந்தத் திட்டங்கள் நிறைவேறுகிற நேரத்திலே தீயோர் இடையிலே புகுந்து அதைக் கெடுக்காமல் பார்த்துக் கொள்ள, தடுத்திட இவ்வளவு காரியங்களையும் நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற அல்லது ஆட்சியிலே அமர்ந்திருக்கின்ற எங்களால், சில பேரால் மாத்திரம் நிறைவேற்றி விட முடியுமென்று எண்ணாதீர்கள். நீங்கள் எல்லாம் எங்களுக்கு கை கொடுத்தால்தான் நீங்கள் எல்லாம் எங்களுக்கு பக்க பலமாக இருந்தால்தான், இன்னும் சொல்லப் போனால் நான் சொல்கிறேன் – நான் நீங்கள் என்று ஆசிரிய சமுதாயத்தை மாத்திரமல்ல, இந்த மண்டபத்திலே அமர்ந்திருக்கிற உங்களை மாத்திரமல்ல, எங்களோடு இருக்கின்ற – யார் யார் தங்களைத் தமிழர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் – யார் யார் இந்தத் தமிழ் நிலத்திற்குச் சொந்தக்காரர்களோ அவர்கள் எல்லாம் – யார் யார் தமிழ் நாற்றாக இருந்து, பயிராக வளர்ந்து இன்றைக்கு பக்குவப் பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் தங்களுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி–பகுத்தறிவு என்றாலே பகுத்து அறிவதுதான் – அறிவு என்பது வேறு – பகுத்தறிவு என்பது வேறு – அறிவு என்பது ஒரு உணர்வு – பகுத்தறிவு என்பது அந்த உணர்வைப் பகுத்துப் பார்த்து எது சரி, எது சரியல்ல என்ற முடிவுக்கு வருவதுதான், அதை உணர்த்துவதுதான் பகுத்தறிவு – அந்தப் பகுத்தறிவை நமக்குப் பால பாடமாகச் சொல்லிக் கொடுத்தவர்தான் நம்முடைய தந்தை பெரியார்.

அந்தப் பால பாடத்தை மறவாமல், நாம் எல்லாம் யார் என்ற கேள்விக்கு பதிலை நம்முடைய மனதிலே பதிய வைத்துக் கொண்டு ஜனநாயகத்தைக் காப்பாற்ற, ஜனநாயகத்திலே தான் நல்லரசுகளை உருவாக்க முடியும் என்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய அந்த பொன்மொழியை நிலைநாட்ட, இந்த அரசை நீங்கள் காப்பாற்ற வேண்டும், பாதுகாக்க வேண்டும் – மன்னிக்க வேண்டும், நான் உங்களிடத்தில் எங்களுக்காகப் பாதுகாப்பு கேட்கவில்லை, நமக்கும் பாதுகாப்பு நாம்தான் தரவேண்டும் என்பதை வலியுறுத்தி எடுத்துச் சொல்லி, உங்களுடைய கோரிக்கைகள், உங்களுடைய ஆசைகள் இன்னும் நிறைவேற வேண்டுமென்று கருதுகின்ற எண்ணங்கள் இவைகள் எல்லாம் உரிய நேரத்தில் நிச்சயமாக நிறைவேறும். இது ஆரூடமும் அல்ல, உங்களுக்கு நான் தெரிவிக்கின்ற அறிவுரையும் அல்ல, நீங்கள் இடுகின்ற கட்டளைகளை நிறைவேற்றுகின்ற இடத்தில் நாங்கள் இருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுகின்ற உண்மை என்று கூறி விடைபெறுகிறேன். ★

# 3 ஆவது கட்டமாக வழங்கிட

# 34 இலட்சத்து 25 ஆயிரம்

# வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்

# கொள்முதல் செய்திட அரசு முடிவு



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் முன்னிலையில், 15.10.2007 அன்று 30 இலட்சம் 14 அங்குல வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிப் பெட்டிகள் திறக்கப்பெற்றன. முதல் நிலை ஆய்வுக்குப் பின் ஒப்பந்தப்புள்ளி அளித்த 22 நிறுவனங்களும் அடுத்தகட்டமான தொழில்நுட்ப மதிப்பீடு நிலைக்குத் தகுதி பெற்றதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் குழு முடிவு செய்தது.

தொழில்நுட்ப மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி முழுவதும் நிறைவு செய்த 17 நிறுவனங்கள் அடுத்தகட்டமான விலைப்புள்ளிகளைத் திறக்கும் கட்டத்திற்கு (Price Bid) தகுதிபெற்றன. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்யாத ஐந்து நிறுவனங்கள் நிராகரிக்கப்பட்டன.

18.10.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் சட்டமன்றப் பிரதிநிதிகள் குழு தலைமைச் செயலகத்தில் மீண்டும் கூடியது. அக்கூட்டத்தில் தகுதிபெற்ற 17 ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகள் மாண்புமிகு முதலமைச்சர், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகளின் குழு உறுப்பினர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்பட்டன. குறைந்தபட்ச விலைப்புள்ளியான ரூ.2,197 ஐ அளித்த திருவாளர்கள் வீடியோகான் நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி தொலைக்காட்சிப் பெட்டிக்கான இறுதி விலையை நிர்ணயம் செய்தபின் மற்ற ஒப்பந்தக்காரர்களிடம் இறுதி விலைப்புள்ளிக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க ஒப்புதல் பெற்று எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு கொள்முதல் செய்யலாம் என்பது குறித்து அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யலாம் என்றும், இக்கூட்டம் 19.10.2007 அன்று நடத்தப்படலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 19.10.2007 அன்று இக்குழுவின் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் (தி.மு.க.), சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு.டி.சுதர்சனம் (காங்கிரஸ்), திரு.கோ.க.மணி (பா.ம.க), திரு.வை.சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), திரு.சி. கோவிந்தசாமி, (இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்), திரு.கு.செல்வம் (விடுதலைச் சிறுத்தைகள்) மற்றும் திரு.மு.ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வாண்டு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்காகப் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கடந்த ஆண்டை விட குறைவாக இருப்பதால், அரசுக்கு ரூ.162.90 கோடி சேமிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சேமிப்பையும் பயன்படுத்தி மொத்தம் 34,25,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. ★

# தூத்துக்குடி மாவட்டம் - உடன்குடியில் 1,600 மெகாவாட் திறன்கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் - மாண்புமிகு மத்திய அமைச்சர் சந்தோஷ் மோகன்தேவ் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது**

அதிகரித்து வரும் மின் தேவையை ஈடுகட்டுவதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியம், பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து ஒவ்வொன்றும் 800 மெகாவாட் திறனுடைய இரண்டு அலகுகள் கொண்ட 1,600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் புதிய மின் உற்பத்தி நிலையத்தைத் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி கிராமத்தில் நிறுவிடத் திட்டமிட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு மத்திய கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத்துறை அமைச்சர் திரு.சந்தோஷ் மோகன்தேவ் அவர்கள்,



மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் பாரத மிகுமின் நிறுவனத்திற்கும் இடையில் இப்புதிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 26.10.2007 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., பாரத மிகுமின் நிறுவனத்தின் தலைவர் திரு. அசோக் கே.பூரி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்தியாவில் 210 மெகாவாட் திறனுள்ள மின் உற்பத்தி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் தூத்துக்குடியில்தான் முதன் முதலாகத் தமிழ்நாடு மின்சார வாரியம் மேம்பட்ட உற்பத்தித் திறனுடைய உயர் தொழில் நுட்பத்தை மின் உற்பத்தியில் கையாளத் தொடங்கியது. அதேபோன்று, தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம் உயர் நுண்திறன் தொழில்நுட்பம் (Super Critical Technology) கொண்ட 800 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டத்தை முதன் முதலாக நிறுவ உள்ளது. இத்திட்டத்தில் உயர் நுண்திறன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்; இதனால் நிலத்தேவையும் குறையும்; காற்று மாசுபடுதலும் குறைந்து, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்; தூய்மை மேம்பாட்டு இயக்க அமைப்பின் (Clean Development Mechanism) கீழ் இத்திட்டத்திற்குக் கரிப் பொருள் சேமிப்பு (Carbon Credit) வசதியும் கிடைக்கும். அனைத்து வகையிலும் சிறப்பு வாய்ந்த இத்திட்டம் 2011ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.

இத்திட்டம் உடன்குடி கிராமத்தில் 938 ஏக்கர் பரப்புள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் அமையும். கடற்கரையை ஒட்டியே இத்திட்டம் அமையவுள்ளதால், இதன் அருகிலேயே நிலக்கரியைக் கையாளுவதற்குத் தேவையான துறைமுகம் (Jetty) ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான குளிர்நீர் கடலிலிருந்தும், பதனிடாத நீர் கடல் நீரை நன்னீராக்கும் நிலையத்தின் மூலமும் பெறப்படும்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஆர்.சத்பதி,இ.ஆ.ப., தொழில் துறைச் செயலாளர் திரு.ஏ.சக்திகாந்ததாஸ், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., மத்திய அரசின் கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் செயலாளர் திரு.ஆர்.சி.பாண்டா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் **மு.கருணாநிதி** அவர்களிடம்
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்ட
இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிக்கான பங்குத்தொகை
ரூபாய் 1.71 கோடியினை மாண்புமிகு சுற்றுலா மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர்
திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள், வழங்கினார். (12.11.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு,க,ஸ்டாலின்** அவர்கள்,
சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு
இருதய அறுவை சிகிச்சைக்கான நிதியையும், மாணவ - மாணவிகளுக்கு
மூக்குக் கண்ணாடிகளையும் 14.11.07 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.
வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் உடனுள்ளார்.




# நதிகள் இணைப்பு எப்படி இந்தியாவின் ஒற்றுமைக்கு பலமானதோ, ஒற்றுமைக்குத் தேவையானதோ, அதைப்போல இந்த இருப்புப் பாதைகளின் இணைப்பும், இந்திய ஒற்றுமைக்குத் தேவையானது, அத்தியாவசியமானது

சேலம் மாநகரில்
1.11.2007 அன்று நடைபெற்ற
சேலம் ரயில்வே கோட்டத் தொடக்க விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்,
ரயில்வே கோட்டத்தைத் தொடங்கிவைத்து
ஆற்றிய விழாப் பேருரை

"சேலத்தில் நடைபெறுகின்ற இந்த விழா–மன்னிக்க வேண்டும் , விழா அல்ல மாநாடு, இந்த மாநாட்டில் நம்முடைய புகை வண்டித்தொடர் அகில இந்திய அமைச்சர் என்னுடைய அருமை நண்பர் லல்லுபிரசாத் அவர்களும் இணை அமைச்சர் அன்புக்குரிய நண்பர் வேலு அவர்களும் கலந்து கொண்டு இந்த விழா சிறப்பை, நம் விழிகளை அள்ளுகின்ற அளவிற்கு எம்மொழியில் இதனை சிறப்பிப்பது என்று திகைக்கின்ற அளவிற்கு அவ்வளவு விமரிசையாக வியக்கத்தக்க வண்ணம் இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சேலத்தில் இதுபோன்றதொரு பெரிய திட்டம் வரவேண்டும் என்பதற்காக இன்று நேற்றல்ல அறுபதாண்டு காலமாக நாம் முறையீடு வைத்திருக்கிறோம். இதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் இந்தியாவின் பிரதமராக சில காலம் திரு.தேவகவுடா அவர்கள் இருந்த பொழுது சேலத்திற்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருந்தார். அந்த நேரத்தில் அவரிடத்தில் இந்தத்

தொகுப்பு :
த. மனோகரன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

திட்டத்தைப் பற்றி நினைவூட்டச் சொல்லி தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் மற்றும் இந்த வட்டாரத்திலே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் என்னை அரித்தெடுத்தார்கள். நான், "இப்பொழுது தேவையில்லை, பிறகு சொல்கிறேன்" என்று குறிப்பிட்டும் அவர்கள் கேட்டபாடில்லை. ஏனென்றால் நான் சொன்னால் எப்படி காவேரிப் பிரச்சினைக்கு "ஆம், ஆம்" என்று தேவகவுடா அவர்கள் தலையசைத்து விட்டு, பிறகு அதை இல்லை என்ற முடிவை அறிவித்தாரோ அதைப்போலத்தான் இதுவும் ஆகும் என்பதால் பிறகு கேட்டுக்கொள்ளலாம் என்று சொன்னேன். அவர்கள் விட்டபாடில்லை. நான் கேட்டேன். அவர் மேடையிலேயே, "கருணாநிதி இப்படி ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். அந்த சேலம் திட்டம் நிறைவேற்றப்படும்" என்று உறுதி அளித்தார். சில உறுதிகள் காற்றிலே பறந்து போகும். அதைப்போல அந்த உறுதியும் காற்றிலே பறந்து போயிற்று. அது பறந்து போன காரணத்தினால்தான் அதற்குப் பிறகு நாம் எடுத்த அதிதீவிர முயற்சிகள், நம்மவர்களே பொறுப்பிலே அமரக்கூடிய நிலை; அந்த நிலையினால் ஏற்பட்ட வெற்றியாக இன்றைக்கு சேலத்தை தனி ரயில்வே கோட்டமாக உருவாக்குகின்ற ஒரு உன்னதமான நிலை வாய்த்திருக்கின்றது. இந்த நிலை வாய்த்திட நம்மோடு துணை நின்ற தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் நம்முடைய அணியிலே இருந்து பாடுபட்ட அத்தனை பேருக்கும், நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்த அத்தனை பேருக்கும், சட்டமன்றத்திலே குரல் கொடுத்த அத்தனை பேருக்கும், இன்றளவும் அதற்காக மேலும் மேலும் பல வளர்ச்சித் திட்டங்களை இதோடு இணைக்க வேண்டும் என்று விரும்புகின்ற மருத்துவர் அய்யா போன்றவர்களுக்கும் நான் உங்கள் அத்தனை பேருடைய சார்பாக, சேலம் மாவட்ட மக்கள் சார்பாக, தமிழக மக்களின் சார்பாக, நன்றியினை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.




### அண்ணா அவர்களின் கருத்து

நம்முடைய ஆட்சி தமிழகத்திலே அமைந்த பிறகு என்று மாத்திரம் சொல்ல மாட்டேன். நாற்பது இடங்களில் நாடாளுமன்றத்தில் நம்முடைய அணியைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்று அங்கே அமைச்சர் பொறுப்புகள் பல வற்றை ஏற்கின்ற நிலை ஏற்பட்டபிறகு–இந்த சேலம் திட்டம் உட்பட நமக்கு மத்திய அரசு மூலமாக கிடைத்திருக்கின்ற நன்மைகளையெல்லாம் ஒரு கணம் எண்ணிப்பார்க்க வேண்டும்.




மத்திய அரசும் மாநில அரசும் ஒன்றோடொன்று முரண்படாமல் இணைந்து செல்லுமேயானால் பல நன்மைகளைப் பெற முடியும். 1967ஆம் ஆண்டு தி.மு.கழகம் தமிழகத்தில் ஆட்சி அமைத்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள், "தம்பிக்கு" எழுதிய மடலில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "நாம் நியாயமான காரணங்களுக்காக மத்தியிலே உள்ளவர்களிடத்தில் குரல் கொடுக்கலாம் ; ஏன் பாராட்டக்கூடச் செய்யலாம். ஆனால் மோதிக்கொள்கின்ற நிலைக் கூடாது. மாநில அரசும்–மத்திய அரசும் மோதிக்கொள்ளாமல் இருந்தால் மக்களுக்கு பல காரியங்களைச் செய்ய முடியும்" என்று அண்ணா அவர்கள் அந்த ஏட்டிலே தீட்டியிருந்தார்கள். அதுபோல நாம் இன்று நடத்துவது புகைவண்டித் தொடர் விழா. அதனால் உதாரணம் அப்படியே சொல்கிறேன். இரண்டு தண்டவாளங்கள் இணைந்து ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் இருக்கின்ற காரணத்தினால் தான் ரயில் ஒழுங்காகப் போக முடிகிறது. அதைப்போல மாநில அரசும், மத்திய அரசும் இரண்டு தண்டவாளங்களாக இருக்குமேயானால் இப்படிப்பட்ட அரிய வெற்றிகளையெல்லாம் நாம் பெற முடியும். இந்திய நாட்டு மக்களுடைய பயணம் சுலபமாக அமையும், அவர்கள் விரும்பியதைப் போல அமையும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் இருக்க முடியும் என்று நான் கருதவில்லை.

### பல வெற்றிகளைப் பெறமுடியும்

அதைப்போலவே தமிழ்நாட்டிலே நாம் காட்டுகின்ற ஒற்றுமை; ஒரு புகைவண்டித் தொடரிலே இருக்கின்ற வண்டிகளைப்போல, பெட்டிகளைப்போல நாம் இன்றைக்கு இருக்கின்றோம். இந்தப் பெட்டிகளிலே ஒரு பெட்டி தவறினாலும் ஒரு பெட்டி தண்டவாளத்திலே இருந்து இறங்கினாலும் அந்த ஒரு பெட்டியோடு மாத்திரமல்ல, மற்ற பெட்டிகளையும் அது இழுத்துக் கொண்டு தண்டவாளத்தை விட்டு இறங்க நேரிடும். அதற்கு இடங்கொடுக்காமல் நாம் இந்த ரயில் பெட்டிகளை இழுத்துச் செல்லுவோம். இந்த ரயில் பெட்டிகளை இணைத்த இந்த ரயிலை நாம் நடத்திக் கொண்டிருப்போம். இந்த புகைவண்டித்தொடர் தன்னுடைய பயணத்தை நடத்தட்டும். இது என்றைக்கு கவிழும், என்றைக்கு இது கீழே விழும், எந்தப் பாலத்திலே விழும், எந்த வெள்ளத்திலே சிக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற பலபேர் நாட்டிலே இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் இடம் தராமல் அவர்களுடைய முகத்திலே கரியைப் பூசி நம்முடைய பயணம் தொடருமேயானால், இதைப் போன்ற இன்னும் பல வெற்றிகளை இந்தத் தமிழகம் பெற முடியும். நம்மால் பெற்றுத் தரமுடியும் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் அளிக்கிறேன்.

### இருப்புப் பாதைகளின் இணைப்பு

நம்முடைய மருத்துவர் அய்யா அவர்கள் சொன்னார்கள்; அங்கும் இங்கும் இணைப்புகள் வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு நம்முடைய லல்லு அவர்கள் பதிலளித்தார்கள். லல்லுவும் நம்முடைய வேலு அவர்களும் தமிழகத்திலே ஆற்றிவருகின்ற இந்த புகை வண்டித்தொடர் பணி இருக்கின்றதே, அதை நான் இன்றைக்கு ஏதோ இந்த விழாவிற்காகச் சொல்லவில்லை, அவரைத் தனியாக பார்க்கின்ற நேரத்திலும் சொல்லியிருக்கின்றேன். டாக்டரிடத்திலும் சொல்லியிருக்கின்றேன். தம்பி




அன்புமணியிடத்திலும் சொல்லியிருக்கின்றேன், அப்படி புகழக்கூடிய அளவிற்கு நம்முடைய வேலு அவர்கள் இந்த ரயில்வே துறை பணியை அவ்வளவு செம்மையாக சீராக கவனித்து வருகின்றார். அப்படிப்பட்ட பணி மேலும் சிறக்கும். நாம் இங்கே வைத்த கோரிக்கைகளெல்லாம், இன்றில்லாவிட்டால் நாளை – நாளை தவறினால் மறுநாள் நிறைவேறும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் லல்லு அவர்கள் இங்கே சொன்னார்கள் – என்னென்ன பெரிய பெரிய நகரத்தையெல்லாம், மாநகரத்தையெல்லாம் இணைக்கிறேன் பார் என்று இங்கே சொன்னார்கள். அந்த இணைப்பைத்தான் நம்முடைய டாக்டர் அவர்கள் இங்கே முதலிலே தொட்டுக்காட்டினார்கள். நான் எண்ணுகின்றேன். நதிகளுடைய இணைப்பு இந்தியாவிலே விரைவிலே ஏற்படுகிறதோ இல்லையோ லல்லு அவர்களுடைய திறமையினால், இந்த இருப்புப் பாதைகளின் இணைப்பு விரைவிலே நிறைவேறி "இந்தியா ஒன்று"– என்ற இந்தியாவின் ஒற்றுமையை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையை நிச்சயமாக உருவாக்குவோம் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

### தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி

நதிகள் இணைப்பு எப்படி இந்தியாவின் ஒற்றுமைக்கு பலமானதோ, ஒற்றுமைக்குத் தேவையானதோ அதைப்போல இந்த இருப்புப்பாதைகளின் இணைப்பும் இந்திய ஒற்றுமைக்குத் தேவையானது, அத்தியாவசியமானது, இன்றியமையாதது. எனவே நதிகளை இணைக்க கொஞ்சம் நாளாகலாம். அதற்கு முதலிலே இருப்புப் பாதைகளை இணையுங்கள், அதற்கு இன்னும் ஒரு திடமான உறுதி வேண்டும். அந்த உறுதியை – லல்லு பிரசாத் அவர்களைப் பொறுத்தவரையில் வேறெங்கும் சென்று தேடி வாங்க வேண்டியதில்லை. அவரே உறுதியின் உருவம் என்ற காரணத்தால் அதை நிச்சயமாக நடத்திக் காட்டுவார் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் நன்றிக்கு உரியவர்கள். தமிழ் நாட்டு மக்கள் எப்படி நன்றிக்கு உரியவர்கள் என்றால், இங்கே நம்முடைய டாக்டர்அய்யா அவர்கள் சொன்னதைப் போல் நன்றி செலுத்த வேண்டியது எனக்கல்ல, அல்லது மேடையிலே அமர்ந்திருக்கின்ற தோழமைக்கட்சிகளுடைய தலைவர்களுக்கல்ல, ரயில்வே அமைச்சருக்கல்ல, துணை அமைச்சருக்கல்ல – இணையமைச்சருக்கல்ல, எங்களையெல்லாம் அந்த இடத்திலே உட்கார வைத்து வேலை வாங்குகின்றீர்களே அந்த தமிழ்நாட்டு மக்களாகிய உங்களுக்குத்தான் நாங்கள் நன்றி செலுத்த வேண்டும். அந்த நன்றியை அடிக்கடி செலுத்தி – தமிழகம் வளம் பெற, தமிழகம் வாழ்வு பெற, தமிழகம் நலம் பெற வழிகாட்டுங்கள் என்று இந்த நல்ல நேரத்தில் உங்கள் அத்தனை பேரையும் வேண்டிக்கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன்''.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்,
புதிதாகக் கட்டப்படவுள்ள சட்டமன்றப் பேரவைக்கான
மாதிரி கட்டட வடிவமைப்புகளை தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார்.(29.10.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் தமிழக அரசிற்கும், பாரத மிகுமின் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்வின்போது மாண்புமிகு மத்திய கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. சந்தோஷ் மோகன் தேவ், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி மற்றும் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர். (26.10.2007)



மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சார்பாக,
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
ஆளுநர் மாளிகைக்கு நேரில் சென்று, பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்.
உடன் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி அவர்கள் உள்ளார். (21.10.2007)



சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தமிழ்நாடு இளநிலை ஆசிரியர் பேரவை சார்பில் நடைபெற்ற
தொகுப்பூதிய முறையை அடியோடு ரத்து செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு
நன்றி தெரிவிக்கும் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பங்கேற்று விழாப் பேருரையாற்றினார்கள். (21.10.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச்செயலகத்தில், போக்குவரத்துறை ஆணையர் திரு.சி.பி.சிங், இ.ஆ.ப., அவர்கள் உள்ளிட்ட போக்குவரத்துறை இணை மற்றும் துணை ஆணையர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். உடன் மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் உள்ளார்.(17.10.2007)




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை மாதவரம் காவல் நிலையத்தைத் திறந்துவைத்தார்.(24.10.2007)



சென்னையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் நான்காம் கட்ட தொடக்க விழாவில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கி, வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெறும் இளைஞர்களுக்கு குறுகிய கால வேலைக்கான திறன் எய்தும் பயிற்சி திட்டத்தினை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். ( 26 .10.2007)




சென்னையில் தாட்கோ சார்பில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி அவர்கள் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி அவர்கள் இந்திய குடிமைப்பணி முதன்மைத் தேர்வு எழுதும் இளைஞர்களுக்கு நிதி உதவிகள் மற்றும் விமானப் பணிப்பெண் பயிற்சிப் பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். (19.10.2007)

# புதிய தொழிற்சாலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்குவதை உறுதி செய்கிறோம்




"**சா**ம்சங் இந்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி நிலையத்தை இங்கு தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்தின் வளர்ச்சியினுடைய பல்வேறு கட்டங்களை உங்களது கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு (2006) நவம்பர் மாதம்10ஆம் தேதியன்று சாம்சங் நிறுவனம் தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த இடத்தில் கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டு (2007) பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதியன்று துவங்கியது. இன்றைக்கு இந்தத் தொழிற்சாலை தொடங்கப்படுகிறது. இவையனைத்தும் ஓராண்டு காலத்திற்குள் நடந்து விட்டது.

**தொழிற்சாலைகள் விரைவில் உற்பத்தியை தொடங்குவதை உறுதி செய்கிறது கழக அரசு!**

நாங்கள் பிரச்சினைகளைத் தொடர்ந்து கவனித்து புதிய தொழிற்சாலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்குவதை உறுதி செய்கிறோம் என்பதைக் காட்டுவதற்காகத்தான் இதை நான் குறிப்பாக குறிப்பிடுகிறேன். அரசின் ஒற்றைச் சாளர முறையின் மூலமாக பல்வேறு அமைப்புகள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. இது தொழில் நிறுவனங்களுக்கு விரைவான ஒப்புதல்கள் கிடைக்க உதவுகிறது. நீங்கள் இதைக் குறித்துக் கொண்டு இந்தச் செய்தியை இந்தியாவில் முதலீடு செய்ய ஆலோசித்து வரும் கொரியாவில் உள்ள இதர தொழில் நிறுவனங்கள் அனைத்திற்கும் பரப்ப வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்கு இங்கு ஏற்பட்டுள்ள முதல் நேரடி அனுபவம், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அவர்கள் தங்களது மனத்தை தயார்படுத்திக் கொள்ளத் தேவையான உத்தரவாதத்தையும், நம்பிக்கையையும் அளிக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

**இயற்கையான கூட்டாளி நாடுகள் இந்தியாவும் கொரியாவும்!**

முற்கால தமிழ் அரசாட்சிகளுக்கும் தூரக்கிழக்கு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளன. கொரியாவின் புத்த மதப் பாரம்பரியத்தின் வேர்களை இந்தியாவில் காணலாம். இப்படி இந்தியாவும், கொரியாவும் இயற்கையான கூட்டாளி நாடுகளாக கலாச்சார ஒற்றுமையை பெருமளவு பகிர்ந்து கொள்கின்றன. 'தந்தை', 'தாய்' ஆகியவற்றிற்கு கொரிய மொழியிலும், தமிழ் மொழியிலும் ஒரே மாதிரியான வார்த்தைகள் உள்ளன என்று அறிகிறேன்.

கொரியா விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு பிரகாசமான உதாரணமாகத் திகழ்கிறது. கடந்த 40

ஆண்டுகளாக 75 சதவீதத்துக்கு மேல் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைக் கண்டுள்ளதால் கொரியா 'ஹான் நிதி மீதான அற்புதம்' என்று சரியாகவே அழைக்கப் படுகிறது.

போஸ்கோ, யுண்டாய், சாம்சங், எல்.ஜி. போன்ற பிரமாண்டமான தொழில் நிறுவனங்களை அது படைத்துள்ளது. சொல்லப்போனால், இன்று இந்தியாவில் இந்த நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் பெயர்கள் வீடுகளில் புழக்கத்திற்கு வந்துவிட்டன.

சாம்சங் நிறுவனம் 57 நாடுகளில் தொழிற்சாலை களுடனும், உலக அளவில் 57 மில்லியன் (5700 கோடி) டாலர் விற்பனையுடனும் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனமாக வளர்ந்துள்ளது என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். திரும்பெரும்புதூர், 'சிப்காட்'டிலுள்ள தொழிற்சாலையில் இந்த நிறுவனம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எல்.சி.டி தொலைக்காட்சிப் பெட்டிகளையும் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது என்று அறிகிறேன். இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், மூன்று இலட்சம் எல்.சி.டி தொலைக்காட்சிப் பெட்டிகளையும் உற்பத்தி செய்யும் திறன் பெற்றதாக இருக்கும். இந்த ஆண்டு இறுதிவாக்கில் முற்றிலும் தானியங்கி துவைக்கும் இயந்திரங்கள் உற்பத்தியைத் தொடங்கவும் திட்டமிட்டு வருகிறது. அதன் பிறகு விரைவில் இந்தத் தொழிற்சாலையில் குளிர்பதனப் பெட்டி (ரெப்ரிஜிரேட்டர்), குளிர்சாதனம் (ஏர்கண்டிஷனர்) போன்ற இதர வீட்டு உபயோகப் பொருட்களின் உற்பத்தியைத் துவங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் சாம்சங் நிறுவனம்!**

இதுவரையில் சென்னைத் தொழிற்சாலை சாம்சங் நிறுவனம் சுமார் 120 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. 2011 ஆம் ஆண்டு வரையில் 400 கோடி ரூபாய் வரை முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

இந்த தொழிற்சாலையின் உற்பத்தியில் ஒரு பகுதி இதர நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டாலும் இந்தியச் சந்தைக்கு உற்பத்தி செய்வதுதான் அதன் பிரதான நோக்கமாக இருக்கும் என்று அறிகிறேன். திருப்பெரும்புதூரில் உள்ள சிப்காட் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சாம்சங் நிறுவனத்திற்கு நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியிலிருந்து ஏற்றுமதியை பெருமளவு அதிகரிக்கும் என்பதால் இந்த சிறப்பு பொருளாதார மண்டலத்திலும் தொழிற்சாலை அமைப்பதை வேகப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில், நாங்கள் சமீபத்தில் புதிய தொழிற்கொள்கை 2007–ஐ வெளியிட்டுள்ளோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் கொள்கையினால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 350 கோடி ரூபாய்க்கு மேலும், இதர அனைத்து மாவட்டங்களில் 250 கோடி ரூபாய்க்கு மேலும் முதலீடு செய்யும் தொழில் நிறுவனங்கள் கட்டமைக்கப்பட்ட உதவித் திட்டத்திற்கு தகுதி பெறும். மின்னணுவியல் வன்பொருள் தொழிற்சாலைகளில் முதலீடு செய்யப்படுவதை மேம்படுத்தும் வகையில், இந்த உச்ச வரம்பு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தகுதி வாய்ந்த நிலையான சொத்துக்களில் முதலீடு 250 கோடியாகவும், இதர மாவட்டங்களில் 150 கோடியாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மனிதவளம் மற்றும் திறமை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் கழக அரசின் தொழிற் கொள்கை**

இத்தகைய உயர் தொழில் நுட்பத் தொழில்களுக்கு திறமையான தொழிலாளர்கள் கிடைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், இந்தக் கொள்கை மனிதவளம் மற்றும் திறமை வளர்ச்சிக்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கிறது தொழில் பயிற்சி நிறுவனங்களில் (ஐ.டி.ஐ) கட்டமைப்பை மேம்படுத்தவும் இந்த கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் தொழிற்சாலைகளில் உடனடி வேலை வாய்ப்பு பெறும் வகையில் பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை சரிப்படுத்தி சரியான பாடங்களை வழங்கவும் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு முன் முயற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

*இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலகம் முழுவதும் உள்ள மக்களின் வாழ்க்கைகளில் உணரப்படும் என்றும், இந்தத் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள மக்கள் நல்ல முன்னேற்றத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் காண்பார்கள் என்றும் நம்புகிறேன்.*




தொடர்புகளைப் பொறுத்த மட்டில், திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதிகளுக்கு ரயில் இணைப்பை வழங்கும் படி மத்திய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சாலைகள் மேம்பாடு குறித்தும் பேசி வருகிறோம்.

தொழில் நிறுவனங்களுக்கு அவற்றின் உற்பத்தி தொழிற்சாலைகளைச் சுற்றியுள்ள சமுதாயத்திற்கும், சமூகத்திற்கும் ஆற்ற வேண்டிய பொறுப்புகள் உள்ளன என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன். தற்சமயம் இந்த நிறுவனம் 285 ஊழியர்களை நியமனம் செய்துள்ளது. திட்டம் 2011–ஆம் ஆண்டு முழுமையாக முடிவடையும் போது, 2500 பேர் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று நம்புகிறேன். இவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் தமிழ்நாட்டை குறிப்பாக காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். இத்தகைய முதலீட்டு நிறுவனங்கள் உள்ளூர் வாசிகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுத்தாலும், இடஒதுக்கீடு பற்றிய அரசின் கொள்கையைக் கடைபிடித்தாலும் மேலும் கூடுதலாக ஊக்க சலுகைகள் வழங்கப்படும் என்று எங்களது கொள்கையில் நாங்கள் அருகிலுள்ள சமுதாயம் பயன்பெறும் வகையில் சுகாதாரம், கல்வி வசதிகளை மேம்படுத்துவதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

**கொரிய நிறுவனங்களின் திறமைக்குச் சான்றாகத் திகழுகிறது –சாம்சங்!**

தமிழ்நாட்டில் இங்கு முதலீடு செய்ய முடிவு எடுத்ததற்காக மீண்டும் சாம்சங் நிறுவனத்தைப் பாராட்டுகிறேன். இந்தத் தொழிற்சாலையை இவ்வளவு விரைவில் அமைத்ததற்காகவும் பாராட்டுகிறேன். இத்தகைய வெற்றிகரமான கொரிய நிறுவனங்களின் திறமைக்கு இது சாட்சியாகத் திகழ்கிறது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலகம் முழுவதும் உள்ள மக்களின் வாழ்க்கைகளில் உணரப்படும் என்றும், இந்தத் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள மக்கள் நல்ல முன்னேற்றத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் காண்பார்கள் என்றும் நம்புகிறேன்''.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
திருப்பெரும்புதூர் – சிப்காட் வளாகத்தில்
சாம்சங் தொழிற்சாலையை 13.11.2007 அன்று
தொடங்கி வைத்து ஆற்றிய உரை

* * *

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 23.10.2007 அன்று தலைமைச் செயலகத்தில் வருவாய்த் துறை மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, தலைமைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் ஆகியவற்றின் மேலாண்மை இயக்குநர்கள் ஆகியோருடன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளின் தற்போதைய நிலைமையைப் பற்றியும், அவற்றில் பாதுகாப்பாகத் தங்கியிருப்பதற்கேற்ற வழிமுறைகளைப் பற்றியும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கண்காணிப்பில் வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்று வாரிய அலுவலர்கள், கட்டடப்பணியில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து இரண்டு வாரியங்களின் கட்டுப்பாட்டிலும் உள்ள வீடுகள் அனைத்தையும் நுணுக்கமாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் ஒருமாத காலத்திற்குள் ஆய்வு செய்து அவற்றில் குடியிருப்பதற்குத் தகுதியற்ற – பாதுகாப்பில்லாத வீடுகளைக் கண்டறிந்து அவற்றை இடித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுவதென்று முடிவு செய்யப்பட்டது.

### புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை

பாதுகாப்பற்ற வீடுகளில் குடியிருப்பவர்களை வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்லுமாறு அறிவுறுத்துவதென்றும், அவர்கள் அங்கிருந்து குடிபெயர்ந்து செல்லவும், செல்லும் இடங்களில் வாடகை செலுத்தவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசு சார்பில் எட்டாயிரம் ரூபாய் கருணைத் தொகையாக வழங்குவதென்றும், குடிபெயர்ந்து செல்லும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியே புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பாதுகாப்பற்ற உறுதியற்ற கட்டடங்களை இடித்துவிட்டு அந்தந்த இடங்களிலேயே புதிய அடுக்கு மாடிக் குடியிருப்புகளைத் தரமான முறையில் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி ஓராண்டு காலத்திற்குள் கட்டிமுடிப்பதென்றும் குடிபெயர்ந்தவர்களை மீண்டும் அந்தந்த இடங்களிலேயே தவணை முறையில் புதிய வீடுகளை ஒதுக்கீடு செய்து குடியமர்த்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.



**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தரமற்ற வீடுகளுக்குப் பதிலாக, புதிய வீடுகளைக் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆணை!**



# திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளுக்கு வழங்கப்படும் அரசு மானியத் தொகை 75 இலட்சம் ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாயாக உயர்வு!

தமிழ்நாடு இந்துசமய அறநிலையத் துறையின் உயர்நிலைக்குழுக் கூட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 17.10.2007 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசுவாமி அடிகளார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ஏ.எஸ்.பொன்னம்மாள், தொழிலதிபர் திரு.கருமுத்துக்கண்ணன், தொழிலதிபர் திரு.எஸ்.வி.பாலசுப்பிரமணியம் மற்றும் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய ஆதீனங்களின் பிரதிநிதிகளும், திருவரங்கம் ஆண்டவன் சுவாமிகளின் பிரதிநிதி ஆகியோரும், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான காலியாக உள்ள நிலங்களையும், மனைகளையும் திருக்கோயில்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டும் வகையில் பயன்படுத்துவது குறித்தும், கோயில் நிலங்கள் மற்றும் மனைகள் தொடர்பான வழக்குகளை விரைவுபடுத்துவது குறித்தும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றில் குடியிருப்போர்களுக்கான நியாய வாடகை மற்றும் மூன்று ஆண்டுகளுக்கொருமுறை பொதுவாகச் செய்யப்படும் வாடகை உயர்வு ஆகியவற்றைச் சீரமைப்பது பற்றியும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான வயது முதிர்ந்த மற்றும் உடல் நலம் குன்றிய யானைகளை வனத்துறையிடம் ஒப்படைத்து அரசின் செலவிலேயே பராமரிப்பது பற்றியும், திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளுக்கு வழங்கப்படும் அரசு மானியத் தொகையை 75 இலட்சம் ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கவும் கூட்டத்தில் விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

## தமிழ்நாடு சமூகச் சீர்திருத்தக் குழு அமைப்பு

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை–23.10.2007**



“சமூகச் சீர்திருத்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆலோசனைகளை அரசுக்கு வழங்க உருவாக்கப்பட்ட தமிழ்நாடு சமூகச் சீர்திருத்தக் குழுவில் பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் தலைவராகவும்; உறுப்பினர்களாக தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், அருள்தந்தை வின்செண்ட் சின்னதுரை, வண்ணை தேவகி, திருப்பூர் அல்தாப், திருவாரூர் திருவிடம், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், எஸ்.வெங்கடேசன், பாசறை செல்வராஜ், ஜி.இராமகிருஷ்ணன், பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன், கலி.பூங்குன்றன், சட்டமன்ற உறுப்பினர் டி.ரவிக்குமார், புதுக்கோட்டை விஜயா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்

# 2007-2008ஆம் ஆண்டின் ரூ.1959.63 கோடி கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை



தமிழக சட்டப்பேரவையில் 2007–2008ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவை முன் வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள் 18.10.2007 அன்று பேசியதாவது :

"2007–2008ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1,959.63 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் ரூபாய் 1,253.99 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையை ரூபாய் 705.64 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2007–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 23ஆம் நாளன்று 2007–2008ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று 'புதுப்பணிகள்' குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2007–2008 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ் நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்படும் உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடுசெய்யப்படும்.

**புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்**

ஏழைக் குடும்பங்களுக்கு 2007–2008ஆம் ஆண்டில் கூடுதலாக மூன்று இலட்சம் இலவச எரிவாயு இணைப்புகளுடன் கூடிய இலவச எரி வாயு அடுப்புகள் வழங்குவதற்கான அரசு ரூபாய் 60 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை மானியக் கோரிக்கை எண்.13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூபாய் 140 கோடி பங்கு மூலதன உதவி வழங்குவதற்கு அரசு கருதியுள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 14–எரி சக்தித் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் மகப்பேறு உதவிக்கான கூடுதல் நிதியொதுக்கமாக ரூபாய் 80 கோடி வழங்க அரசு அனுமதித்துள்ளது. மானியக் கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 80 கோடி சேர்க்கப் பட்டுள்ளது.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்தப்படுவதற்காக 2007–2008ஆம் ஆண்டுக்கு அரசு ரூபாய் 109 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன் கீழ் ரூபாய் 109 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

**மீண்டும் நமக்கு நாமே திட்டம்**

நமக்கு நாமே திட்டத்தை 2007–2008 ஆம் ஆண்டில் மீண்டும் நடைமுறைப் படுத்துவதற்காக அரசு ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது. மானியக் கோரிக்கை எண்.42– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்பதன் கீழ் ரூபாய் 50 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் திருமண நிதி உதவிக்கான கூடுதல் ஒதுக்கீடாக மானியக் கோரிக்கை எண்.45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூபாய் 40 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் ஆகியோருக்கு மீதமிருந்த 60 சதவீத ஊதியக்குழுவின் நிலுவைத் தொகைக்கு, பொது வருங்கால வைப்புநிதி கணக்குகளுக்கு வழங்கப்படுவது போல வட்டித் தொகை அளிப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது. அதற்கான 'கடன் செலவுகள்' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 358 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.''

# அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து

### மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மேற்கொண்ட ஒளித்தோற்ற கலந்தாய்வு




**மா**ண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது பேரூராட்சிகளின் வளர்ச்சியினை ஊக்குவிக்க புதியதொரு திட்டமாக அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை அறிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 3.9.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் மாமல்லபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்ற சீரிய திட்டமாகும். இத்திட்டத்தினால் பேரூராட்சிகள் புதுப்பொலிவுப் பெற்று அனைத்து வகையிலும் மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயலாக்கத்தினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர்

அவர்கள் தலைமைச் செயலகத்தில் 27.10.2007 அன்று தேசிய தகவலியல் மையத்தின் ஒளித்தோற்ற அரங்கத்திலிருந்து கோவை, ஈரோடு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

தேசிய தகவலியல் மையத்தில் உள்ள ஒளித்தோற்ற கலந்தாய்வு வசதியினைப் பயன்படுத்தி மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளின் முன்னேற்றத்தினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூர்ந்தாய்வு செய்து அறிவுரைகள் வழங்கியது அமைச்சக அளவில் இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.நீரஜ் மித்தல்,இ.ஆ.ப., ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஷன் சோங்காம் ஜடக் சிரு, இ.ஆ.ப., மற்றும் மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் ஆகியோர்களுடன் இத்திட்டத்தினை செயல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். தஞ்சை மாவட்டத்தின் சார்பில் திட்ட அலுவலர் இராஜாமணி மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளுக்கு பேரூராட்சிகளின் இயக்குநர் நிருவாக அனுமதி அளித்துள்ள நிலையில் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்ட விவரம், பணிகள் தொடங்கப்பட்ட விவரம் மற்றும் பிறதுறை திட்டப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள், பேரூராட்சிகளில் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பேரூராட்சிகளை தூய்மை மற்றும் பசுமைபடுத்தும் வகையிலும், குப்பை கூளங்கள் இல்லாத பேரூராட்சிகளாக மாற்ற நடத்தப்பட்ட முகாம்கள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் முன்னோடி சிறப்புத் திட்டங்கள் பற்றியும் விரிவாக ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 2007–2008ஆம் ஆண்டு 140 பேரூராட்சிகளில் ரூ.70 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைந்து ரூ.85 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் ஈரோடு மாவட்டத்திலுள்ள 14 பேரூராட்சிகளில் 236 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.7.21 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைந்து மொத்தம் ரூ.15.85 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 13 பேரூராட்சிகளில் 112 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.6.27 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.9.46 கோடி மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 6 பேரூராட்சிகளில் 46 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.3.09 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.13.92 கோடி மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 14 பேரூராட்சிகளில் 95 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.6.65 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.12.95 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்டச் செயலாக்கத்தில் சிமெண்ட் பயன்படுத்துவதில் உள்ள களப் பிரச்சினைகளை மற்றும் குளங்கள் பராமரிப்புத் தொடர்பான பணிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். இதுபோன்ற ஒளித்தோற்ற கலந்தாய்வுக் கூட்டங்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் மாதம் இருமுறை தாம் நடத்த திட்டமிட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த கலந்தாய்வின் போது, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு.க.தீனபந்து, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., இணை இயக்குனர் திரு.எம்.மதிவாணன் மற்றும் இயக்கக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்திற்கு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை


தொகுப்பு :
**கி. கண்ணதாசன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாமக்கல் மாவட்டம்


**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தேர்தல் வாக்குறுதியிலும் அதனைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கையிலும் உறுதியளித்தபடி, படிப்பு முடித்து, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் சிரமத்தை போக்கிடும் வகையில், அவர்களில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 150 ரூபாயும், பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 200 ரூபாயும், இளங்கலைப் பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் 300 ரூபாயும், உதவித்தொகை வழங்கும் புதிய திட்டம் தலைவர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, முதற் கட்டமாக 11.11.2006 அன்று திருச்சியிலும், இரண்டாம் கட்டமாக 24.2.2007 அன்று கோவையிலும், மூன்றாம் கட்டமாக 29.7.2007 அன்று சென்னையிலும் தலைவர் கலைஞர் அவர்களால்

தொடங்கி வைக்கப்பட்டு, இதுவரை மொத்தம் 3 இலட்சத்து 38 ஆயிரம் இளைஞர்களுக்கு மொத்தம் ரூபாய் 55 கோடியே 51 இலட்சத்து 87 ஆயிரத்து 700 மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதே தினங்களில் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இன்றைய தினம் நான்காவது கட்டமாக, 3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மொத்தம் ரூபாய் 22 கோடியே 47 இலட்சத்து 82 ஆயிரத்து 860 மதிப்பிலான உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள்.

அதன் தொடர்ச்சியாக, தமிழகம் முழுவதும் இதுபோன்ற விழாக்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகைகளை வழங்குகிறார்கள். நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் முதற்கட்டமாக 11.11.2006 அன்று நாமக்கல்லில் 6,527 நபர்களுக்கும், இரண்டாம் கட்டமாக 28.2.2007 அன்று காளப்பநாய்க்கன்பட்டியில் 8,223 நபர்களுக்கும், மூன்றாம் கட்டமாக 29.7.2007 அன்று ராசிபுரத்தில் 9,444 நபர்களுக்கும் ஆகமொத்தம் இதுவரை 24 ஆயிரத்து 194 படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ரூபாய் 1 கோடியே 49 இலட்சத்து 66 ஆயிரத்து 250 மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் நான்காவது கட்டமாக மொத்தம் 10 ஆயிரத்து 958 படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மொத்தம் ரூபாய் 63 இலட்சத்து 70 ஆயிரத்து 800 மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

அதில் இன்றைய தினம் நடைபெறும் இவ்விழாவில் நான்காவது கட்டமாக படித்து வேலைவாய்ப்பற்ற 1,081 இளைஞர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 24 ஆயிரத்து 300 மதிப்பில் உதவித்தொகையாக இங்கே வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தொழில் துறையும், அதனைச் சார்ந்த பல்வேறு துறைகளும், வேகமான வளர்ச்சியைப் பெற்று வருகின்றன. இதனால் கூடுதல் வேலைவாய்ப்பிற்கான சூழ்நிலை உருவாகி உள்ளது. தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அரசு வழங்கும் நிதியுதவி திட்டத்தின் கீழ், பயன் பெறுவது மட்டுமின்றி வேலைவாய்ப்பும் பெறுவதற்கேற்றவாறு அவர்களது திறமைகளை மேம்படுத்தும் வகையில், பயிற்சிகள் அளிக்கப்படும். இந்தப் பயிற்சிகள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாக மொத்தம் 50 ஆயிரம் இளைஞர்களுக்கு இந்த நிதியாண்டில் அளிக்கப்படும். இதற்காக அரசு 8 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பின் அடிப்படையில் கடந்த 6.7.2007 அன்று ரூபாய் 8 கோடி ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டது. மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 11 தொழில்நுட்ப குறுகிய கால பாடத் திட்டத்தின்படி வேலைவாய்ப்பற்ற அரசின் உதவித்தொகை பெறுகின்ற மற்றும் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள 50 ஆயிரம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க பாடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் சேருவதற்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு தேர்ச்சியாகும். பயிற்சி பெறுபவர்கள் 40 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடியினத்தை பொறுத்தவரை 45 வயதிற்குட்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இந்தப் பயிற்சிகள் 56 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 1 அடிப்படை பயிற்சி மையத்திலும் ஆக 57 மையங்களில் நடத்தப்படும். பயிற்சி நிறைவில் மாநில வாழ்வியல் பயிற்சிக் குழுமத்தின் மூலம் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிக்குத் தேர்வு பெறுகின்ற இளைஞர்கள் விருப்பத்திற்கேற்ப தொழிற்பயிற்சி நிலையத்திலுள்ள கட்டமைப்பு வசதிக்கேற்ப தொழில்நுட்பப் பாடத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

இன்றைய தினம் இந்த விழாவில் மாநில அளவில் செயல்படுத்தப்படவுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான குறுகிய கால பணித்திறன் எய்தும் பயிற்சித் திட்டமானது துவக்கி வைக்கப் பட்டுள்ளது. இவ்விழாவில் 20 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிக்கான ஆணை வழங்கப்பட்டு, இத்திட்டம் துவக்கி வைக்கப்படுகிறது. இன்றைய தினம் இந்த விழாவில், மொத்தம் 8 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கட்டடப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில், ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது தவிர, கொல்லிமலையில், ரூபாய் 25 இலட்சம் மதிப்பில் பொன்விழா கிராம சுய






வேலைவாய்ப்புத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பல்நோக்குப் பயிற்சி மையக் கட்டடமும் மற்றும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் ரூபாய் 48 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், பொதுப்பணித் துறையின் மூலம் நபார்டு நிதி உதவியுடன் திருச்செங்கோடு வட்டத்தில் தண்ணீர்ப் பந்தல் பாளையம் ஊராட்சி, நாமக்கல் வட்டம், செல்லப்பம்பட்டி, கொந்தளம், சிந்தளாந்தூர், குப்பண்டம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கான வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், கழிப்பறை கட்டடங்கள், குடிநீர் வசதி பணிகள் என மொத்தம் 64 வகுப்பறை கட்டடங்கள், 3 அறிவியல் ஆய்வகங்கள், 17 கழிப்பறை கட்டடங்கள், 5 குடிநீர் வசதிக்கான அமைப்புகள் ஆகியவை மொத்தம் ரூபாய் 2 கோடியே 74 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டவை இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், ராசிபுரம் வட்டம், ஆர். புதுப்பட்டி, நாமக்கல் மற்றும் பரமத்தியில் கால்நடை மருந்தகங்களுக்கான சிகிச்சை அரங்கம், அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் மருத்துவமனைக் கட்டடம் ஆகியவற்றிற்கான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன. நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடப்பணி நிறைவுற்று இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இன்றைய தினம் இந்த விழாவிலே நெடுஞ்சாலைத்துறையின் மூலம் முத்துக்காப்பட்டி, கொல்லிமலை அடிவாரம் வரையிலான சாலையில் புதியதாக கட்டப்படவுள்ள ரூபாய் 1 கோடியே 36 இலட்சம் மதிப்பிலான பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இது தவிர, பொதுப்பணித்துறையின் மூலம் திருச்செங்கோட்டில் ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டடம், மாணிக்கம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 55 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள 30 படுக்கைகள் கொண்ட கட்டடம் மற்றும் அறுவை சிகிச்சை அரங்கப் பணி, நாமக்கல் அரசு மருத்துவமனையில் சுமார் ரூபாய் 2 கோடியே 25 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள கட்டடப் பணி, சேந்தமங்கலம் அரசு மருத்துவமனையில் சுமார் ரூபாய் 55 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள புதிய கட்டடப் பணிகள், பழைய கட்டடங்களைப் பழுதுபார்க்கும் பணிகள், ராசிபுரம் அரசு மருத்துவமனையில் ரூபாய் 1 கோடியே 8 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப் படவுள்ள பழைய கட்டடங்களை பழுது பார்க்கும் பணி மற்றும் புதிய கட்டடப் பணிகள், ராசிபுரம், வெண்ணந்தூர் அரசு மருத்துவமனையில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள பழுது நீக்கம் மற்றும் விரிவாக்கப் பணிகள், திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள 200 படுக்கை வசதியுடைய பேறு கால பிரிவு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடப் பணிகள் மற்றும் பழுது நீக்கப்பணிகள், குமாரபாளையம் அரசு மருத்துவமனையில், சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய கட்டுமானப் பணிகள் மற்றும் பழுது நீக்கப் பணிகள், பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் சுமார் 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம், சமையல் கூடப் பணி, பழுது நீக்கம் மற்றும் விரிவாக்கப் பணிகள், மேலும் பள்ளிப்பாளையம் அரசு மருத்துவமனையில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள பழுது நீக்கம் மற்றும் விரிவாக்கப் பணிகள் என மொத்தம்

ரூபாய் 9 கோடியே 60 இலட்சம் மதிப்பிலான 11 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த விழாவில் பல்வேறு அரசு துறைகளின் மூலம் 14 ஆயிரத்து 625 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 6 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

வருவாய்த்துறை மூலம் 2,950 பயனாளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி, 1,800 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, 1,052 பயனாளிகளுக்கு முதியோர் உதவி மற்றும் நலிந்தோர் உதவித் தொகை வழங்கப்படுகின்றன. இவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் ஒரு கோடியே 53 இலட்சமாகும்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் 750 பேருக்கு பொருளாதார நடவடிக்கைகளுக்காக, மானியம் மற்றும் வங்கிக் கடனாக ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் வழங்கப்படுகிறது. மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 25 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 375 உறுப்பினர்களுக்கு சுழல் நிதி மானியம் மற்றும் வங்கிக் கடனாக ரூபாய் 1 கோடி வழங்கப் படுகிறது.

மாவட்ட வேலைவாய்ப்புத் துறையின் மூலம் 1,081 வேலை இல்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகையாக ரூபாய் 6 இலட்சத்து 30 ஆயிரம் வழங்கப்படுகிறது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 20 பயனாளிகளுக்கு சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 500 கர்ப்பிணி தாய்மார்களுக்கு உதவித் தொகை ரூபாய் 30 இலட்சம் வழங்கப்படுகிறது. கல்வி உதவித் தொகையான 1,899 மாணவ, மாணவியர்களுக்கு சுமார் 34 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. வங்கிகள் மூலம் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் 100 பேருக்கு சுமார் 2 கோடி ரூபாய் கடன் உதவியாக வழங்கப்படுகிறது. விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக 3,125 மாணவ மாணவியர்களுக்கு 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் சிறுபான்மையினர் நல பொருளாதார மேம்பாட்டுக் கடனாக 255 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 15 இலட்சம் கடனுதவியாக அளிக்கப்படுகிறது. இவை தவிர தொழிலாளர் நலத்துறை மூலம் 141 நல வாரிய உறுப்பினர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், தாட்கோ மூலம் 225 சுயஉதவி குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 200 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல், ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலம் உபகரணங்கள் வழங்குதல், வனத்துறை மூலம் கறவை மாடுகள் வழங்குதல் என மொத்தம் இந்த விழாவிலேயே 14 ஆயிரத்து 825 பயனாளிகளுக்கு சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் சுமார் ரூபாய் 2,536 கோடி செலவில், ஒரு மாபெரும் திட்டமான அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை 5 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 2,540 கிராம ஊராட்சிகளில் 508 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டிலும் 2,534 கிராம ஊராட்சிகளில் 507 கோடி ரூபாய் செலவில் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 331 கிராம ஊராட்சிகளில் கடந்த நிதியாண்டில் 66 கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்காக ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூபாய் 20 இலட்சம் வீதம் 66 கிராம ஊராட்சிகளுக்கும் மொத்தம் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஊரக வளர்ச்சித் துறையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தியது போன்று பேரூராட்சிகளில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு சிறப்பு திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3.9.2007 அன்று மாமல்லபுரத்தில் துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள 561 பேரூராட்சிகளிலும் சுமார் ரூபாய் 280 கோடி செலவில் இத்திட்டத்தை 4 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி, சாலை மற்றும் பாலங்கள் அமைத்தல் தொகையாக நிலுவையில் உள்ள மொத்தம் ரூ.760 கோடி தள்ளுபடி செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ராசிபுரம் நகராட்சியில்

நிலுவையாக இருந்த ரூபாய் 7 கோடியே 17 இலட்சம் அசல் தொகையும் மற்றும் ரூபாய் 8 கோடியே 42 இலட்சம் வட்டித் தொகையும் சேர்த்து ரூபாய் 15 கோடியே 59 இலட்சம் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. தெரு விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், சுய உதவிக் குழுக்களுக்கு பணிக்கூடம் அமைத்தல், அங்காடி வளாகம், சுகாதார வளாகம் அமைத்தல் மற்றும் உட்கட்டமைப்புப் பணிகள் போன்றவை எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

நாமக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 19 பேரூராட்சிகளிலும் இந்த ஆண்டு ஆர். புதுப்பட்டி, பட்டணம், காளப்பநாய்க்கன்பட்டி, சீராப்பள்ளி ஆகிய 4 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இதற்கான ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தலா ரூபாய் 50 இலட்சம் வீதம் 3 பேரூராட்சி களுக்கும் மொத்தம் 2 கோடி மதிப்பில் பணிகள் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் நாமக்கல் மாவட்டத்திற்கு பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசுகள் பங்காக மொத்தம் ரூபாய் 2 கோடியே 78 இலட்சத்து 37 ஆயிரத்தை ஒதுக்கீடு செய்து அதில் முதல் தவணையாக ரூபாய் 1 கோடியே 39 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் விடுவித்துள்ளது.

மேலும் இம்மாவட்டத்திலுள்ள மொத்தமுள்ள சுய உதவிக் குழுக்களில் இதுவரை 3,039 சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதியும், 1,087 சுய உதவிக் குழுக்க ளுக்கு பொருளாதாரக் கடனும் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்களில் செயல்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் இந்த அரசு குழு உறுப்பினர்களுக்கான பயிற்சித் தொகை ரூபாய் 45 ஆக உயர்த்தி உள்ளது.

சுழல் நிதி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான மானியத்தினை அதிக எண்ணிக்கையிலான குழுக்களுக்கு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. சிறந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் நாமக்கல் மாவட்டத்திலுள்ள ரங்கப்பநாய்க்கன்பாளையம் மகளிர் சுய உதவிக் குழு அதனுடைய சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில் மாநில அளவிலான விருதினைப் பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கு கடந்த 25.9.2007 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் 50 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இதைத் தவிர மாவட்ட அளவில் ஒரு கூட்டமைப்புக்கும் 3 சுயஉதவிக் குழுக்களுக்கும் பரிசுத் தொகை வழங்கிடவும் அரசு உத்தரவிட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களில் சிறந்த செயல்பாட்டினை ஊக்குவித்திட அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு குழு உறுப்பினர்கள் சிறப்பாகச் செயல்பட்டு தங்கள் குடும்ப நிலையினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.'' இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.



அதன் பின்னர், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த கள விளம்பரக் கண்காட்சியை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

---

*நாமக்கலில் 26.10.2007 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் நான்காம் கட்டத் துவக்க விழா, வேலைவாய்ப்பற்ற உதவித் தொகை பெறும் இளைஞர்களுக்கு குறுகிய கால வேலைக்கான திறன் எய்தும் பயிற்சித் திட்டம் துவக்க விழா, தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு உதவித்தொகை வழங்கும் விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.*

# சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம். சொல்லாததையும் செய்து கொண்டிருப்பது தான் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசுகையில், இன்று பொள்ளாச்சி நகரத்தில் ஒரு சிறப்பான விழா நடைபெற்று கொண்டிருக்கிறது. 78 கோடியே 23 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழா, அதேபோல் ரூபாய் 34 கோடியே 87 இலட்சத்து 49 ஆயிரம் மதிப்பீட்டிலே திறப்பு விழா நிகழ்ச்சி, நலத்திட்ட உதவிகளை பொறுத்தவரையிலே 5 கோடியே 99 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே நலத்திட்ட உதவிகள் ஆக இந்த மூன்று விழாக்களுக்கு மொத்தமாக மதிப்பீடு கணக்கு பார்த்தால் 120 கோடியே 80 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே அடிக்கல் நாட்டு வழா, திறப்பு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. இப்படி மூன்று விழாக்களை இணைத்து ஒரு முப்பெரும் விழாவாக மிகுந்த எழுச்சியோடு நாம் எல்லாம் பெருமைப்படத் தக்க வகையில் இந்த விழா நடைபெற்று கொண்டிருக்கிறது. அடிக்கல் நாட்டு விழாவினை பொறுத்தவரையிலே நான் குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்று சொன்னால் இந்த பொள்ளாச்சி நகரத்தில் ஒரு கூடுதல் பேருந்து நிலையம் உருவாக்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்து அந்த வகையிலே இந்த நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருக்க கூடிய இந்த பேருந்து நிலையத்திற்கு எதிர்புறம் இருக்க


தொகுப்பு:

**கி. கண்ணதாசன்**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

கோயம்புத்தூர்


கூடிய காவல்துறை மற்றும் வருவாய் துறைக்கு சொந்தமாக இருக்க கூடிய 1.8 ஏக்கர் நிலத்தில் இந்த புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. அதற்காக 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகளும் தயாரிக்கப்பட்டு, அந்த பணிகள் தொடங்கப்பட்டு அதைத் தொடர்ந்து இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த பேருந்து நிலையத்தை பொறுத்தவரையில் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்படுகிறது என்று சொன்னால் இந்த பணி வேகவேகமாக நடைபெற்று வருகிற 30.9.2008க்குள் இந்த பணியை முழுமையாக முடித்து அதை மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஆக அதற்கு இன்றைக்கு இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்படுகிறது. அதேபோல் குடிநீர் விரிவாக்க திட்டம் பொள்ளாச்சி நகரத்தை ஒட்டியிருக்க கூடிய விரிவாக்க

பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக அதாவது வருகிற 2035ஆம் ஆண்டு நாம் எதிர்பார்க்க கூடிய மக்கள் தொகையை அடிப்படையாக கணக்கெடுத்து அந்த வகையிலே இந்த நான்காவது குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த திட்டத்திற்கு 9 கோடியே 30 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் அந்த திட்டத்திற்காக மதிப்பீடு உருவாக்கப்பட்டு, அந்த பணி தொடங்க அதற்குரிய அடிக்கல் நாட்டு விழா. இந்த திட்டம் முடிவடைகிற நேரத்தில் பொள்ளாச்சி நகரத்தில் இருக்க கூடிய நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கக் கூடிய அந்த வாய்ப்பை நாம் பெற்றிட முடியும். ஆக இந்த திட்டமும் வரக்கூடிய 30.9.2008க்குள் முடிக்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்து இன்றைக்கு அதனுடைய அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றிருக்கிறது. அதேபோல் கூடுதல் பள்ளி கட்டிடம் கோட்டூர் சாலையிலே 10.30 ஏக்கர் பரப்பிலே நகராட்சிக்கு சொந்தமாக இருக்க கூடிய கூடுதல் கட்டிடங்களை அமைத்திட நம்முடைய அரசு முடிவு செய்து 3 கோடியே 62 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்படவிருக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்குரிய அடிக்கல் நாட்டு விழா இன்றைக்கு நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த பணியும் வருகிற 30.8.2008க்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டு அந்த பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அதேபோல் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஆக அதனுடைய அடிக்கல் நாட்டு விழாவும் இன்றைக்கு அந்த விழாவிலே நடைபெற்று கொண்டிருக்கிறது. ரூ.62 கோடியே 9 இலட்சத்து 97 ஆயிரம் மதிப்பீட்டிலே 6 துணை மின் நிலையங்களுக்கு இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்படுகிறது. அதைத் தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலையம் 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட மதுக்கரை ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக அடிக்கல் நாட்டு பணியும் இந்த விழாவிலே நடந்திருக்கிறது. அதேபோல் அங்கன்வாடி கட்டிடம் நம்முடைய ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் சம்பூர்ணா கிராம ரோஜ்கார் யோஜனா என்கிற திட்டத்தின் கீழ் செஞ்சுவாடி பகுதியிலே ரூ.2 இலட்சம் மதிப்பீட்டிலே அமைக்கப்படவிருக்க கூடிய அங்கன்வாடி கட்டிடத்திற்கு இந்த விழாவிலேஅடிக்கல் நாட்டப்படுகிறது. ஆக மொத்தம் 78 கோடியே 23 இலட்சத்து 86 ஆயிரம் மதிப்பீட்டிலே 49 பணிகளுக்கு இந்த விழாவின் மூலமாக அடிக்கல் நாட்டப்படுகிறது.

அதேபோல் திறப்பு விழா நான் விவரித்து கூற விரும்பவில்லை. காரணம் நேரமில்லை. எனவே சிலவற்றை நான் தலைப்புச் செய்திகளாக உங்களிடத்திலே கோடிட்டு காட்ட விரும்புகிறேன். அன்னூர் ஒன்றியத்தில் 25 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், அவிநாசி ஒன்றியத்தில் 31 இலட்சத்து ஓராயிரம் ரூபாய் மதிப்பீட்டில், திருப்பூர் ஒன்றியத்தில் 31 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், பல்லடம் ஒன்றியத்தில் 3 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில், சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கிணத்துக்கடவு பகுதியிலே 1 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், பொள்ளாச்சி(தெற்கு) ஒன்றியத்தில் 2 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், மடத்துக்குளம் ஒன்றியத்திலே 13 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், குடிமங்கலம் ஒன்றியத்தில் 3 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், உடுமலைப்பேட்டை ஒன்றியத்தில் 7 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஆக மொத்தம் 1 கோடியே 26 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டிருக்க கூடிய 35 குடிநர் திட்டப்பணிகள் இன்றைய தினம் மக்களுடைய பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் துணை மின் நிலையங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பிலே 29 கோடியே 64 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே காரணம் பேட்டை, காளிவேலாம்பட்டி, நேதாஜி அப்ரேல், மின்கோயில்பாளையம், கணியூர் அந்த பகுதியிலே அமைக்கப்பட்டுள்ள 5 துணை மின் நிலையங்கள் இன்றைய தினம் மக்களுடைய பயன்பாட்டிற்காக அர்பணிக்கப்படுகிறது. அதேபோல் பல்வேறு துறைகளின் சார்பில் புதிதாக கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறையின் சார்பில் இப்படி பல துறைகளின் சார்பிலே கட்டப்பட்டிருக்க கூடிய கட்டிடங்களுடைய திறப்பு விழா, அதேபோல் பள்ளிக் கட்டிடங்கள் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் சார்பில் ரூ.1 கோடியே 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்பட்டிருக்க கூடிய 20 பள்ளி கட்டிடங்கள் இன்றைக்கு இந்த விழாவிலே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக காரமடை, மதுக்கரை, பெரியநாயக்கன்பாளையம், சர்க்கார் சாமக்குளம், ஆனைமலை, குடிமங்கலம், பொள்ளாச்சி(தெற்கு) மற்றும் வடக்கு, உடுமலைப்பேட்டை, அன்னூர், சூலூர், சுல்தான்பேட்டை, திருப்பூர் ஒன்றியங்களில் 64 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டி முடிக்கப்பட்டிருக்க கூடிய 32 கட்டிடப் பணிகளும், அதேபோல் பேரூராட்சியின் சார்பிலே கட்டப்பட்டிருக்க கூடிய வேட்டைக்காரன்புதுார் பேரூராட்சியிலே அலுவலக

கட்டிடமும், அதேபோல் காளப்பட்டி பேரூராட்சியில் 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சரவணம்பட்டி பேரூராட்சியிலே 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டிருக்க கூடிய பூங்காக்கள், அன்னூர் பேரூராட்சியில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிற நியாய விலைக் கட்டிடங்கள் இப்படி பல கட்டிடங்கள் இந்த விழாவின் மூலமாக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஒன்றரை ஆண்டு காலமாக உங்களுடைய அன்பை பெற்று ஆதரவை பெற்று உங்களுடைய நம்பிக்கைக்கு உரிய வகையில் ஆட்சிப் பொறுப்பேற்ற தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்திருக்க கூடிய திட்டங்கள் தேர்தல் நேரத்தில் எடுத்துச் சொன்ன வாக்குறுதிகள், உறுதிமொழிகள் அவை எல்லாம் இன்றைக்கு எந்த அளவிற்கு காப்பாற்றப்படுகிறது நிறைவேற்றப்படுகிறது என்பதை தயவு செய்து நீங்கள் உணர்ந்திட வேண்டும். இன்றைக்கு கிராம சக்தி மையம் என்கிற பெயரிலே ஒரு சிறப்பான திட்டம் இந்த விழாவிலே குறிப்பாக தமிழ்நாட்டிலேயே இந்த கோவை மாவட்டத்திலே தான் இது முதல் மாவட்டமாக இந்த நிகழ்ச்சியை தொடங்கி இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். அதற்காக எனது பாராட்டுக்களை, வாழ்த்துக்களை நமது ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்பிகிறேன். நான் அவர்களோடு தொடர்பு கொண்டு உங்களுக்கு முன்னால் பேசுகிற நேரத்திலே அங்கிருக்க கூடிய மகளிர் சுய உதவிக் குழுக்களை சார்ந்திருக்க கூடிய சகோதரிகளை நான் கேட்டேன் உங்களுடைய கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எந்த அளவிற்கு நடைபெறுகிறது. அந்த திட்டத்தினுடைய பயனை மக்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்களா? என்று நான் கேட்ட போது மகிழ்ச்சியோடு அவர்கள் சொன்னார்கள். அது தான் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் நிறைவேற்றப்படக் கூடிய அனைத்து கிராம அண்ண மறுமலர்ச்சித் திட்டம் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் இன்றைக்கு 12,618 கிராம ஊராட்சிகள் இருக்கிறது. இந்த 12,618 கிராம ஊராட்சிகளுக்கு அந்த கிராமங்களில் இருக்க கூடிய மக்களுடைய அடிப்படை பிரச்சனைகளை தீர்த்து வைக்க வேண்டும். எனவே தான் 5 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கிராமங்களை தேர்தெடுத்து இந்த திட்டம் ஐந்தே ஆண்டிற்குள்ளாக அனைத்து கிராமங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து எங்களுக்கு ஆணையிட்டு அவருடைய அறிவுரைகளை, ஆலோசனைகளை பெற்று நாம் ஆட்சிக்கு வந்த உடனே அந்த திட்டத்தை நிறைவேற்ற தொடங்கினோம். ஆக அந்த வகையிலே கடந்த 2006–2007ல் கோவை மாவட்டத்தை பொறுத்தவரையில் 389 ஊராட்சிகளில் 82 ஊராட்சிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு அதில் 3367 பணிகளில் 3188 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மிச்சம் இருக்க கூடிய பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விரைவில் முடிக்கப்படும் என்று தனது வரவேற்புரையில் தெரிவித்தார்கள். அதேபோல் 2007–2008ல் 81 கிராமங்களில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு 1121 பணிகளில் 725 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ஆக இந்த பணிகளை குறித்து கூட இங்கே எப்படி இங்கிருந்து மாவட்டத்தில் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுவினருடன் எப்படி உரையாற்றினோமோ அதேபோல் 10,15 நாட்களுக்கு முன்னர் என்னுடைய துறை செயலாளர்களுடன் சென்னையிலிருந்து கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஒளித்தோற்ற கலந்தாய்வு மூலம் துறையின் சார்பிலே அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகள் மற்றும் துறையின் சார்பில் என்னென்ன பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது, அந்த பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். கோவையை பொறுத்தவரையில் 52 பேரூராட்சிகளில் தென்கரை, தளி, செட்டிபாளையம், கணியூர், சமத்தூர், கோட்டூர், தாளியூர், குமரலிங்கம், வேட்டைக்காரன்புதூர், ஒடையகுளம், பூளுவப்பட்டி, சங்கரராமநல்லூர், ஆலாந்துறை ஆகிய 13 பேரூராட்சிகளில் நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது. தேர்தல் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 கிலோ அரிசி ரூ.2க்கு என்று அறிவித்தார்கள். விவசாய கூட்டுறவு கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அதெல்லாம் தற்போது நடைமுறைப் படுதப்பட்டுள்ளது. சத்துணவுடன் வாரம் 3 முட்டை வழங்கப்பட்டு வருகிறது. இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று அறிவித்து யார் யாருக்கு எல்லாம் வண்ணத்தொலைக்காட்சி பெட்டி இல்லையோ அவர்களுக்கு எல்லாம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இப்படி சொல்லும் பொழுது இங்கு இருக்கிற தாய்மார்களுக்கு சந்தேகம் வருகிறது. அறிவிக்கின்ற திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப் படுகிறது. ஆனால் இந்த வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி பொறுத்தவரையிலும் தாதமமாகிறதே. பக்கத்து ஊருக்கு வந்திருச்சு நம்ம ஊருக்கு வரலையே



என்றெல்லாம் நினைப்பார்கள். அதேபோல் இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி ஒரே நேரத்தில் வழங்குவது என்பது முடியாத ஒன்றாகும். நாங்கள் பயணம் செய்கிற போதும், கட்சி பிரமுகர்களை சந்திக்கும் போதும், மக்களை சந்தித்து பேசுகிற போதும் வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி பக்கத்து ஊருக்கு வழங்கிவிட்டார்கள். எங்களுக்கு வழங்கவில்லை என்று தாய்மார்கள் சொல்கிறார்கள். முதல்வர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட உறுதிமொழி நிச்சயமாக நிறைவேற்றப்படும். சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம். சொல்லாததையும் செய்து கொண்டிருப்பது தான் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு. இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி மக்களுக்கு உரிய முறையாக சேர வேண்டும் என்பதற்காக குழு அமைக்கப்பட்டுள்ளது. நகரமாக இருந்தாலும், சிறிய கிராமங்களாக இருந்தாலும் சரி பயனாளிகளை அக்குழுவே தேர்வு செய்து இந்த இலவச டி.வி.யை வழங்குகிறது. இதில் எந்த வித முறைகேடும் தவறுகளும் நடந்துவிட கூடாது என்பதற்காக தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்து சட்டமன்ற கட்சித் தலைவர்களை கொண்ட குழு அமைக்கப் பட்டிருக்கிறது. 3வது முறை டெண்டரில் 32 நிறுவனங்கள் பங்கேற்றனர். அப்படி பங்கேற்ற காரணத்தினால் விலைப்பட்டியல் கூடி குறைந்துள்ளது. ஆக கடந்த முறைக்கும் இந்த முறைக்கும் ஒப்பிட்டு பார்த்தால் ஏறக்குறைய 162 கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு மிச்சப்படுத்தியிருக்கிறோம். ஆகையால் இந்த 162 கோடி ரூபாய்க்கு சேர்த்து இன்னும் 4 இலட்சம் டி.வி.யை சேர்த்து 34 இலட்சம் டி.வி வழங்கலாம் என்று முடிவு செய்துள்ளோம். இப்படி எல்லாம் எந்த வித குறைபாடுகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாக்காமல் அப்பலுக்கற்ற ஆட்சி மக்களுக்காக நடைபெற்று கொண்டிருக்கிறது. ஆகவே தான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்ள விரும்புவது இப்படிப்பட்ட ஆட்சிக்கு என்றைக்கும் உருதுணையாக இருந்திட வேண்டும். திருப்பூர் மாநகராட்சியாக அறிவிக்கப்பட உள்ளது. திருப்பூர் மாநகராட்சியாக ஆக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை இருந்தாலும் தி.மு.க அரசு ஆட்சிக்கு வந்த பிறகு உள்ளாட்சித் துறை அமைச்சர் நான் என்கிற முறையில் நம்முடைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கோவிந்தசாமி அவர்கள் முதல் கோரிக்கையாக திருப்பூரை மாநகராட்சியாக அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாநகராட்சியாக ஆக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். இடையில் தேர்தல் ஆணையம் தொகுதி சீரமைப்பு பணியை மேற்கொண்டிருந்ததால் திருப்பூரை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படவில்லை. தற்பொழுது திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்படும். அதேபோல் ஈரோடு நகராட்சியும் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட உள்ளது. என உரையாற்றினார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட புத்தகம் மற்றும் கிராம சக்தி மையம் கையேடு ஆகியவற்றை வெளியிட அதனை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

* * *



மெக்சிகோவில் நடைபெற்ற உலக சதுரங்க விளையாட்டுப் போட்டியில் இரண்டாவது முறையாக உலக சதுரங்கச் சாம்பியன் பட்டம் வென்று மகத்தான சாதனை படைத்ததற்காக, 24.10.2007 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திரு.விசுவநாதன் ஆனந்த் அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் 25 இலட்ச ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்.

## சென்னை அரசுப் பொது மருத்துவமனை மற்றும் அரசு ஸ்டான்லி மருத்துவமனைகளில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு

**மா**ண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் 25.10.2007 அன்று சென்னை அரசுப் பொது மருத்துவமனை மற்றும் அரசு ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவற்றிற்கு மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் சென்று அவசர சிகிச்சைப் பிரிவு, உள்நோயாளி பிரிவு ஆகியவற்றைப் பார்வையிட்டு மருத்துவமனையைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், நோயாளிகட்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க வேண்டியதின் அவசியம் குறித்தும் வலியுறுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.



மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் உள் நோயாளிகளிடம் சிகிச்சைகள் நல்ல முறையில் அளிக்கப் படுகின்றனவா என்பது குறித்தும் நோயாளிகளிடம் நேரடியாக விசாரித்தறிந்தார். அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் தங்கும் விடுதியையும் பார்வையிட்டு அவற்றை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார். மாணவர்களுக்கு தொற்று நோய்கள் பரவாமல் இருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் மருத்துவர்களிடமும், மாணவர்களிடமும் கலந்து ஆலோசித்தார்.

உ



# நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட ரூ.300 கோடி ஒதுக்கீடு

“நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரவேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அதனடிப்படையில் படிப்படியாக கட்டடங்கள் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

நடப்பு நிதியாண்டில் 19 இடங்களில் ரூ.100 கோடி செலவில் கட்டடம் கட்டித்தரப்படும். மத்திய அரசின் தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் நீதிமன்ற கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.211 கோடியில் திட்டம் தயாரித்து அனுப்பியுள்ளோம்.

மாநில அரசு சார்பிலும் முதலமைச்சர் ரூ.3 கோடி ஒதுக்கியுள்ளார். இந்த நிதி அனைத்தும் கிடைத்ததும் எல்லா நீதிமன்றங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படும்’’. இவ்வாறு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# பணியில் இருக்கும்போது உயிரிழந்த திருக்கோயில் பணியாளர்கள் குடும்பங்களுக்கு நிதிஉதவி

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை நிருவாகத்தின் கீழ் உள்ள 25 திருக்கோயில்களில் பணியிலிருக்கும் போது, இறந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.75,000 வீதம் குடும்பநல நிதியுதவித் தொகை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களால் வழங்கப்பட்டது.



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு கொடுத்த வாக்குறுதிகளைத் தவறாமல் நிறைவேற்றி வருகிறது

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் உரை



கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் 28.9.2007 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சந்தோஷ்பாபு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இவ்விழாவில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதிஇளம்வழுதி அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து விழாப்பேருரையாற்றிப் பேசியதாவது: "தமிழக அரசானது ஆண்டுதோறும் தியாகிகளின் பிறந்த நாளினை நினைவு கூறத்தக்க வகையில் அன்னாரது பிறந்தநாளினை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு அவரது உருவப்படத்தை திறந்து வைத்ததில் மிகவும் பெருமைப்படுகிறேன்.

24 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு தூக்குக் கயிற்றை அவர் முத்தமிட்டார் என்றால் அதற்குக் காரணம் அவரிடம் இருந்த சுதந்திர உணர்வுதான் எனில் மிகையாகாது. மரண தண்டனையை நிறைவேற்றக் குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்னதாகவே பகத்சிங் தூக்கிலிடப்பட்டார். தூக்கு மேடைக்கு அவரை காவலாளிகள் அழைத்தபோது, ஒரு புரட்சியாளனுடன் பேசிக்கொண்டிருக்கும் என்னை தொந்தரவு செய்யாதீர்கள்! என்று கூறியபடி லெனின் எழுதிய புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அத்தகைய தியாகத்தால்தான் அரசு அவரது நூற்றாண்டு பிறந்த நாளினை விழாவாகக் கொண்டாடுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையிலான அரசு கொடுத்த வாக்குறுதிகளை தவறாமல் நிறைவேற்றி வருகிறது. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? எப்படி நிறைவேற்றப் போகிறார்கள்? எனப் பலர் கேட்டனர். சிலர் ஏளனமும் செய்தனர்.

தொகுப்பு: **மு.நா.கிருஷ்ணசாமி**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.



இவர்களெல்லாம் வியக்கும் வண்ணமும், வாயடைக்கும் வண்ணமும் 15 மாதங்களில் சொன்னது, சொல்லாதது எனப் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். இம்மாவட்டத்தில் மட்டும் இதுவரை 4 ஆயிரம் பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். அன்று முதல் இன்று வரை பல திட்டங்களை நிறைவேற்றியதன் மூலம் சிறந்த அரசாக விளங்கி வருகிறது.

இந்தியாவிலேயே தேர்தல் வாக்குறுதிகளை 100 சதவீதம் நிறைவேற்றியது தி.மு.க. அரசு மட்டுமே. சேது சமுத்திரத் திட்டம் கொண்டு வந்தால் பொருளாதார ரீதியாக அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றமும் உருவாகும்.

அரசின் திட்டங்களை நன்கு பயன்படுத்தி அரசுக்கு என்றும் உறுதுணையாய் இருக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்''.

விழாவில் 1,547 பயனாளிகளுக்கு ரூ.1.97 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த புகைப்படக் களவிளம்பரக் கண்காட்சியினை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

* * *



**மா**ண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், 2.11.2007 அன்று சென்னையில், தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்ந்த 1,880 அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு 118 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கணினிகளை வழங்கினார்.

*



# தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஆதிதிராவிடர் நலத்துறை

# ஆதிதிராவிடர் நலத்துறை

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | சிலேட்டுகள் வழங்குதல் | ஒன்றாம் வகுப்பு மட்டும் எல்லா மாணவர்களுக்கும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் நலப்பள்ளிகள் | ஏதுமில்லை. | பள்ளி தலைமை ஆசிரியர்கள் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 2. | பாடப்புத்தகம் | 1 முதல் 12 ம் வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலப்பள்ளிகள் | ஏதுமில்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 3. | நோட்டுப்புத்தகங்கள் | 3 முதல் 10 ம் வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் (ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் நலப்பள்ளிகள்) 4 முதல் 10ம் வகுப்பு வரை பொதுப்பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர்/ மதம் மாறிய கிறித்தவர் / பழங்குடி மாணவர்கள் | சாதிச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 4. | சீருடைகள் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 முதல் 12 ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர் அனைவருக்கும் | ஏதுமில்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 5. | சிறப்பு வழிகாட்டி (வினாவிடை) | 10 ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வு எழுதும் அனைவருக்கும் (ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலப்பள்ளிகள்) | ஏதுமில்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 6. | மிதிவண்டிகள் | 11ம் வகுப்புகளில் படிக்கும் ஆதிதிராவிடர்/ மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்தவர் / பழங்குடியினர் மாணவிகள்/ மாணவர்கள் (அனைத்துப் பள்ளிகள்) | சாதிச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | விடுதி இலவச உணவு உறைவிடம் 12ம் வகுப்பு வரை அனைவருக்கும் | ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குள் இருக்க வேண்டும் பள்ளிக்கும் வீட்டிற்கும் உள்ள தூரம் 5 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். (இது மாணவிகளுக்குப் பொருந்தாது) | வருமானச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிந அலுவலர், விடுதிக் காப்பாளர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 8. | சீருடை | 12ம் வகுப்பு வரை அனைத்து மாணவர்கள் | ஏதுமில்லை. | விடுதிக் காப்பாளர் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 9. | சிறப்பு வழிக்காட்டி | 10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ/ மாணவியர் | ஏதுமில்லை. | விடுதிக் காப்பாளர் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 10. | 12ம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி அதாவது கல்விக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது | ஆதிதிராவிடர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் (வருமான வரம்பு இல்லை.) | சாதிச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 11. | 12ம் வகுப்புக்கு மேற்பட்ட படிப்பினை அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் கல்விக் கட்டணம் செலுத்து வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. | ஆதிதிராவிடர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் (வருமான வரம்பு இல்லை.) | சாதிச் சான்றிதழ் | கல்லூரி முதல்வர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 12. | சிறப்பு கட்டணம் 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை மற்றும் 10 ம் வகுப்பு 12ம் வகுப்பு தேர்வுக் கட்டணம் வழங்குதல் இத்தொகை நேரடியாக தலைமை ஆசிரியருக்கும் அரசுத் தேர்வுத் துறைக்கும் வழங்கப்படும் | எல்லா ஆதிதிராவிடர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் (வருமான வரம்பு இல்லை.) | சாதிச் சான்றிதழ் | சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 13. | தூய்மையற்ற தொழில்புரிவோர் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்குதல். | உலர் கழிப்பிடங்களைச் சுத்தம் செய்வோர், தெருபெருக்கும் தொழில் செய்பவர், தோல் உரிப்போர் மற்றும் தோல் பதனிடுவோர் முதலியவர்களின் குழந்தைகள். சாதி மத பேதம் இல்லை மற்றும் ஆண்டு வருமான வரம்பு இல்லை. | தொழில் சான்றிதழ் | சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | கல்வி நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கி 6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது (மாதம் ரூ.25 முதல் ரூ.35 வரை) | அங்கீகாரம் பெற்ற தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்தும் விடுதி / பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.15,000/–க்குள் இருக்க வேண்டும் | சாதிச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ் | மாவட்ட ஆதிந அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 15. | மைய அரசு கல்வி உதவித்தொகை கல்லூரிக்கு செலுத்த வேண்டிய திருப்பி அளிக்கப்படாத அனைத்து கட்டணம், மற்றும் பராமரிப்புத் தொகை உதவி தொகையாக வழங்கப்படும் | 11 ம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் (இந்து) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் (ஆண்டு வருமான வரம்பு ரூ.10,000/– க்குள் இருக்க வேண்டும்) | சாதிச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்/ கல்லூரி முதல்வர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 16. | மாநில அரசின் சிறப்பு கல்வி உதவித் தொகை பள்ளி மற்றும் கல்லூரிக்கு கட்ட வேண்டிய கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதி மாணவர்களுக்கு வெளி மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகையாக வழங்கப்படும் | மைய அரசு திட்டத்தில் பயன்பெற இயலாதவர்கள், மதம் மாறிய கிறித்தவர் (ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/க்குள் இருக்க வேண்டும்) | சாதிச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்/ கல்லூரி முதல்வர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 17. | இலவச கல்வித் திட்டம் +1 , +2 மற்றும் இளங்கலை/ அறிவியல்/ வணிகவியல் பட்டப்படிப்பு பயிலும் மாணவ/ மாணவியர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவியர்கள் கல்லூரிக்கு செலுத்த வேண்டிய சிறப்பு கட்டணம் தேர்வுக் கட்டணங்கள் வழங்கப்படும் | மேற்குறிப்பிட்ட இரு கல்வி உதவித் தொகை திட்டங்களில் பயன்பெறாதவர்கள்/ பகல் நேரக் கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு இத்திட்டத்தில் வருமான வரம்பு கிடையாது | சாதிச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்/ கல்லூரி முதல்வர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 18. | பட்டப்படிப்பு/ பட்ட மேற்படிப்பு/ தொழில் படிப்பில் சேரும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணம், பதிவுக்கட்டணம், செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்தல் | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள் | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிந அலுவலர்/ ஆதிதிராவிடர் நல இயக்குநர் சென்னை.5 | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 19. | வெளிநாட்டில் படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை/ வெளிநாட்டில் மேல் படிப்பினை தொடரும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்குதல். | ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள், குறைந்தபட்ச தகுதிகள் (அ) ஆராய்ச்சி பட்ட மேற்படிப்பு ( FOR POST DOCTORAL) முதுநிலை பட்ட படிப்பில் முதல் வகுப்பு அல்லது 60% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பழங்குடியினருக்கு குறைந்தபட்சம் 50% தேர்ச்சி மற்றும் இரண்டாம் நிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பிஎச்டி மற்றும் ஆராய்ச்சி/ விரிவுரையாளர்/ தொழில் ஆகியவற்றில் 5 ஆண்டுகள் அனுபவம் சம்பந்தப்பட்ட துறையில் பெற்றிருத்தல் வேண்டும். | வருமானச் சான்றிதழ் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5 | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19. | வெளிநாட்டில் படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை/ வெளிநாட்டில் மேல் படிப்பினை தொடரும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்குதல். | ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள், குறைந்தபட்ச தகுதிகள்<br>(அ) ஆராய்ச்சி பட்ட மேற்படிப்பு ( FOR POST DOCTORAL) முதுநிலை பட்ட படிப்பில் முதல் வகுப்பு அல்லது 60% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பழங்குடியினருக்கு குறைந்தபட்சம் 50% தேர்ச்சி மற்றும் இரண்டாம் நிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பிஎச்டி மற்றும் ஆராய்ச்சி/ விரிவுரையாளர்/ தொழில் ஆகியவற்றில் 5 ஆண்டுகள் அனுபவம் சம்பந்தப்பட்ட துறையில் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(ஆ) ஆராய்ச்சி படிப்பிற்கு சம்மந்தப்பட்ட முதுநிலைப்பட்ட மேற்படிப்பில் முதல் வகுப்பு அல்லது 60% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் பழங்குடியினருக்கு இரண்டாம் நிலை 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். மேலும் கற்பித்தல்/ ஆராய்ச்சி/ தொழில்/ எம்பில் ஆகிய சம்மந்தப்பட்ட பிரிவில் இரண்டாண்டு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். | வருமானச் சான்றிதழ் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5 | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| | | இ) பட்ட மேற்படிப்பு<br>சம்மந்தப்பட்ட பாட பிரிவில் இளநிலை பட்டம் மற்றும் முதல் வகுப்பு அல்லது 60% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் இரண்டாம் நிலை அல்லது 50% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட பிரிவில் தொழில் அனுபவம் இரண்டாண்டு பெற்றிருத்தல் வேண்டும். (மாத வருமானம் ரூ.12,000 க்குள் இருத்தல் வேண்டும். வயது வரம்பு 35 க்குள்) | வருமானச் சான்றிதழ் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5 | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 20. | <u>உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித் தொகை</u><br>2002–03 முதல் கல்வி கடன் வழங்கப்பட்டதை மாற்றி மானியமாக வழங்க ஆணையிடப்பட்டது பட்ட படிப்புக்கு ரூ.6500/– பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் பட்ட படிப்புக்கு ரூ.7000/– மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் 25% கடனாகவும் 75% மானியமாகவும் மற்ற அனைத்து படிப்புகளுக்கும் மானியமாக வழங்கப்படுகிறது. | கல்லூரியுடன் இணைந்த விடுதியில் தங்கி படிக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள் (பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000 க்குள் இருக்க வேண்டும்.) | சாதிச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ் | கல்லூரி முதல்வர் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | **<u>புத்தக வங்கி</u>**<br>பொறியியல் மருத்துவம், கால்நடை மருத்துவம், வேளாண்மை, சட்டம், முதுநிலை வணிக நிருவாகம், பாலிடெக்னிக் போன்ற படிப்புகளுக்கு தேவையான பாடப்புத்தகங்கள் ஒரு செட் இரு மாணவர்களுக்கு என்ற விகிதத்தில் கல்லூரி நூலகத்தில் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் எடுத்துப் படித்து பின்னர் திரும்பிக் கொடுக்க வேண்டும். 2003–2004 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மைய அரசு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பட்ட மேற்படிப்புகள், மருத்துவம், பொறியில், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் இதுபோன்ற பல்கலை கழகங்கள் மேற்படிப்புக்கான கல்வி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் ஒத்த படிப்புகள்<br>1998–99ம் ஆண்டுமுதல் ஒருமாணவருக்கு ஒரு செட் புத்தகம் ரூ. 5,000/–க்கு மிகாமல் புத்த வங்கி திட்டத்தின்கீழ் பின்வரும் பாடங்களுக்கு வழங்கப்படுகிறது.<br>சட்டப்படிப்பு பி.எல், எல்.எல்.பி (3 ஆண்டுகள்) மற்றும் ஐந்து ஆண்டுகள் எல்.எல்.எம், எம்.எல். (2 ஆண்டுகள்)<br>பட்டயக் கணக்காயர் படிப்பு (இடைநிலை, இறுதிப் படிப்பு)<br>எம்.பி.ஏ இரண்டு ஆண்டு மற்றும் ஒத்த படிப்புகள்<br>பயோ சயின்ஸ் படிப்புகள் | பொறியியல், மருத்துவம், வேளாண்மை கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக் படிப்பு படிக்கும் மைய அரசு உதவித் தொகை பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் | சாதிச் சான்றிதழ் | கல்லூரி முதல்வர்கள் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் நல அலுவலர்கள் | இயக்குநர், ஆதிந துறை,<br>தொ:28594780<br>நிகரி:28419612 |
| 22. | **<u>ஊக்கப் பரிசுகள் மாநில அளவில்</u>**<br>அ. +2 தேர்வு ரூ.25,000/– வீதம்<br>ஆ.10ம் வகுப்பு தேர்வு ரூ.10,000 /– வீதம் | முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர்/ ஒரு மாணவி ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய ஆதிதிராவிடர் கிருத்துவர் ஆகிய ஒவ்வொரு இனத்திலும். | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலமாக இயக்குநர் ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை,<br>தொ:28594780<br>நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. | பாடங்கள் ஒவ்வொன்றும் மாநில முதன்மை<br>+2 தேர்வு ரூ.2,000/– வீதம்<br>10 ம் வகுப்பு தேர்வு ரூ.1000/– வீதம் | மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் அதிக மதிப்பெண் பெறும் ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு. | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலமாக இயக்குநர் ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 24. | **ஊக்கப் பரிசுகள் மாவட்ட அளவில்**<br>+2 தேர்வு ஒரு மாணவர் ஒரு மாணவி ரூ.3,000/– வீதம் 10 ம் வகுப்பு முதல் பரிசு ஒரு மாணவர்/ ஒரு மாணவி ரூ.1,000/– வீதம் 10 ம் வகுப்பு 2ம் பரிசு ஒரு மாணவர் ஒரு மாணவி ரூ.500/– வீதம் 10ம் வகுப்பு 3ம் பரிசு ஒரு மாணவர் ஒரு மாணவி ரூ.300/– வீதம் | முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிருத்துவர் ஒருங்கிணைந்த பட்டியல் மூலம். | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 25. | **பரிசுத் தொகை திட்டம்**<br>பட்டப்படிப்பு/ மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன– இத்தேர்வுகளில் உயர் மதிப்பெண் பெற்று தேர்வு பெற்ற முதல் 550 நபர்களுக்கு ரூ.2,000 முதல் ரூ.5,000 வரை பரிசாக வழங்கப்படும். | பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்படிப்பு இறுதித் தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண் பெற்று தேர்வு பெற்றிருக்க வேண்டும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்கள். | சாதிச் சான்றிதழ் | இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26. | **அறிவுக்கூர்மை பரிசுத் தொகை**<br>ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்திலிருந்தும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10ம் வகுப்பு தேர்வில் முதல் இடங்களை பெற்ற இரு மாணவர் மற்றும் இரு மாணவியர்களுக்கு மேற்படிப்பைத் தொடர அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.800/– ம் மற்ற ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.960/– ம் வழங்கப்படும். | மாவட்டத்தில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற 2 மாணவர் மற்றும் 2 மாணவியர்க்கு (ஒவ்வொரு இனத்திலும்) படிப்பைத் தொடர்ந்து படிக்க வேண்டும் வருமான வரம்பு இல்லை. | சாதிச் சான்றிதழ் | இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை,<br>தொ:28594780<br>நிகரி:28419612 |
| 27. | **காந்தி நினைவுப் பரிசு**<br>ஒவ்வொரு மாவட்டத்திலும் +2 தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற இந்து ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த ஒரு மாணவர் ஒரு மாணவிக்கு இப்பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.1,500/– அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.1,000/ வீதம் வழங்கப்படும். | +2 தேர்வில் மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்று படிப்பைத் தொடர வேண்டும். இந்து மதத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர்/ மாணவ/ மாணவி வருமான வரம்பு இல்லை. | சாதிச் சான்றிதழ் | இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை,<br>தொ:28594780<br>நிகரி:28419612 |
| 28. | **தகுதி வழிவகை பரிசு**<br>காந்தி நினைவு பரிசு போன்றே இப்பரிசும் வழங்கப்படும். | பழங்குடியினர் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் | சாதிச் சான்றிதழ் | இயக்குநர், ஆதிதிராவிடர் நலத் துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை,<br>தொ:28594780<br>நிகரி:28419612 |
| 29. | **முதலமைச்சர் தகுதி பரிசுத் தொகை**<br>பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்களில் முதல் 1000 மாணவர்கள் மற்றும் முதல் 1000 மாணவியர்களுக்கு இப்பரிசு வழங்கப்படும். | +2 தேர்வில் முதல் 1000, இடங்களுக்குள் வர வேண்டும். மேல்படிப்பை தொடர வேண்டும். தொடர்ந்து பயின்றால் மட்டும் ஆண்டுக்கு ரூ.1,500/– வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். | சாதிச் சான்றிதழ் | 2002ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை,<br>தொ:28594780<br>நிகரி:28419612 |
| 30. | ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்தி விடாமலிருக்க ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கீழ்கண்ட மாவட்டங்களில் 3 முதல் 5 வரை படிக்கும் 60,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.500/– வழங்கப்படும் | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் பெண் குழந்தைகள் 3 முதல் 5 வகுப்புகளில் படித்துக் கொண்டு இருக்க வேண்டும். | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை,<br>தொ:28594780<br>நிகரி:28419612 |
| 31. | 6ம் வகுப்பு படிக்கும் 30,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ரூ.1,000 மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு வழங்குதல். இத்திட்டம் சென்னை, தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப் படுகிறது. | 6ம் வகுப்பில் படிக்கும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவிகள். | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை,<br>தொ:28594780<br>நிகரி:28419612 |

# தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் செயல்படுத்தும் நலத்திட்டங்கள்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் 1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதில் 38 வகையான கட்டட தொழில்களில் ஈடுபட்டுள்ள 15 முதல் 60 வயது வரை உள்ள தொழிலாளர்கள் உறுப்பினராகச் சேரலாம். இந்த வாரியத்தில் உறுப்பினராக ரூ.25 பதிவுக் கட்டணமாகவும், இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பதிவைப் புதுப்பிக்க ரூ.10 கட்டணமாக இருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றப் பின்பு இந்தக் கட்டணங்களை 1.9.2006 முதல் ரத்து செய்து விட்டது. இந்த வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்ட 8 வகையான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1) விபத்துக் காப்பீடுத் திட்டம் மற்றும் ஈமச்சடங்கு உதவி
2) விபத்து ஊனம்
3) இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவி
4) கல்வி உதவித்தொகை
5) திருமண உதவி
6) மகப்பேறு உதவி
7) கண் கண்ணாடி வாங்கிட உதவி
8) ஓய்வூதியம்

இந்த வாரியத்தில் 1995 முதல் 28.10.2007 வரை 16,02,158 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அதில் 1,39,148 பயனாளிகளுக்கு ரூ.46,65,81,708 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் 68,788 பயனாளிகளுக்கு ரூ.21,73,84,984 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. அதே காலத்தில் 5,13,366 தொழிலாளர்கள் வாரியத்தில் பதிவு செய்துள்ளார்கள். 2,534 தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் நிலுவைத் தொகையாக 28.10.2007 வரை ரூ.1,89,58,037 வழங்கப் பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பிரசவ கால உதவித்தொகையை 1.9.2006–முதல் ரூ.4,000த்திலிருந்து ரூ.6,000 ஆகவும், 1.7.2007 முதல் மாத ஓய்வூதியத்தினை ரூ.300 லிருந்து ரூ.400 ஆகவும் உயர்த்தியுள்ளது.

வாரியத்தில் பதிவு செய்துகொள்ளும் கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், தொழிலாளர்களின் வசதிக்காக 6 பணியாளர்களைக் கொண்ட புதிய 15 மாவட்ட அலுவலகங்கள் அண்மையில் திறக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே இயங்கிவரும் 15 மாவட்ட அலுவலகங்களுக்குக் கூடுதலாக 4 பணியாளர்களை அரசு நியமித்துள்ளது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்டுள்ள பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காகத் தமிழ்நாட்டில் சென்னை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் குழந்தைகள் காப்பகம் திறக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள கொத்தனார் (Mason) , குழாய்ப் பதிப்பவர் (Plumber), வர்ணம் பூசுபவர் (Painter), மின் அமைப்பாளர் (Electrician) மற்றும் தச்சு வேலை செய்பவர் (Carpenter) ஆகிய 5 இனங்களில் பணிபுரியும் 200 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி வழங்க, அரசு ஆணை (டி) 519, நாள் 9.7.2007–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

2007–2008 நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தைக் கணினிமயமாக்க உரிய அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது.

மாவட்ட அளவில் வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளைக் கண்காணிக்க அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் கண்காணிப்புக் குழு 1.6.2007 முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பெறப்படும் கல்வி உதவி, மகப்பேறு உதவி மற்றும் ஈம சடங்கு செலவு உதவி ஆகிய நலத்திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குதல் மற்றும் பட்டுவாடா செய்தல் ஆகிய பணிகளைத் தொழிலாளர் துறையின் மாவட்ட அளவிலான சார்நிலை அலுவலர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கி தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அரசு ஆணை உத்தரவிடப்பட்டுள்ளது.

# வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் படிவங்களை பொதுமக்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பொதுமக்களுக்கு பழகுநர் ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம் தொடர்பான பணிகள், வாகனப் பதிவு மற்றும் பெயர் மாற்றம், போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதி வழங்குதல், தகுதிச்சான்று வழங்குதல் போன்ற பணிகள் செய்து தரப்படுகின்றன.

மேற்படி பணிகளுக்கு மோட்டார் வாகனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களில் மனுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். முன்னதாக இப்படிவங்கள் அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலங்களில் இருப்பில் வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப் பட்டு வந்தது. அதன் பின்னர், இப்படிவங்களை விற்பனை செய்ய, அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் மூலமும் படிவங்கள் விற்பனை செய்யப்பட்டன.

இந்நிலையில், பொதுமக்கள் நேரடியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அணுகி இலவசமாகப் படிவங்கள் வழங்கக் கோரும்போது, படிவங்கள் இருப்பில் இல்லாததால் வழங்க இயலவில்லை என்று தெரிவிக்கப் பட்டதாகப் புகார் எழுந்தது.

எனவே, பொதுமக்களுக்கு படிவங்கள் தங்குதடையின்றி இலவசமாகக் கிடைக்கச் செய்யும் பொருட்டு பின்வரும் பட்டியலில் காணும் 10 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களை உடனடியாக அச்சிட்டு வழங்க எழுதுபொருள் அச்சுத் துறைக்கு அரசு ஆணைப் பிறப்பித்தது.

| | | |
|---|---|---|
| 1. | படிவம் 1–A | மருத்துவச்சான்று |
| 2. | படிவம் 2 | ஓட்டுநர் பழகுநர் உரிமம் மனு |
| 3. | படிவம் 4 | புதிய ஓட்டுநர் உரிமம் கோரும் மனு |
| 4. | படிவம் 9 | ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மனு |
| 5. | படிவம் 29 | வாகன உரிமை மாற்ற அறிவிப்பு |
| 6. | படிவம் 30 | வாகன உரிமை மாற்ற மனு |
| 7. | படிவம் 34 | வாகன தவணைக் கொள்முதல் ஒப்பந்த மனு |
| 8. | படிவம் 35 | வாகன தவணைக் கொள்முதல் ரத்து மனு |
| 9. | படிவம் CFA | வாகன தகுதிச்சான்று புதுப்பித்தல் மனு |
| 10. | படிவம் LTVA | போக்குவரத்து வாகனம் ஓட்ட மேற்குறிப்பு பெற மனு (பேட்ஜ்) |

இதனடிப்படையில், பழகுநர் உரிமம், புதிய ஓட்டுநர் உரிமம், தகுதிச்சான்று பெறுதல், தவணைக் கொள்முதல் ரத்து, தவணைக் கொள்முதல் ஒப்பந்தம், வாகன உரிமை மாற்றம் ஆகிய பணிகளுக்கான விண்ணப்ப படிவங்களைத் தேவையான அளவு அச்சிட்டு அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மேற்படி படிவங்களை இலவசமாகப் பெற்றுப் பயனடையலாம் என்றும், http: tn.gov.in/sta என்ற இணையதளம் மூலமும் மேற்படிப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது.

# மைய அரசின் 2008 ஆம் ஆண்டு கலைத்திறன் உதவித்தொகைத்திட்டம்

மைய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மையம் பாரம்பரிய இசை, ஓவியம், சிற்பம், கைவினை மற்றும் நாட்டுப்புற கலைகளில் ஈடுபடும் 10 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட இளஞ்சிறார்களின் திறமையை வளர்ப்பதற்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை 7,582 இளங்கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் 5 பேர் வீதமும், துணை மாநிலங் களுக்கு 3 பேரும், ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு 10 பேரும் ஆக மொத்தம் 400 பேருக்கு உதவித்தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகை ஆசான்/நிறுவனத்திற்கு அளிக்கப்படும் கட்டணத்துடன் ஆண்டுக்கு ரூ.3,600 வீதம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறும் கலைஞரின் திறன் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு முதற்கட்டமாக இரண்டாண்டுகளுக்கும், பின்னர் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் வகையில் பல்கலைக்கழக பட்டப்படிப்பு நிலை வரையிலும் அல்லது 20 வயது வரை உதவித்தொகை வழங்கப்படும்.

இம்மையம் 2008 – 2009 ஆம் ஆண்டிற்கான உதவித்தொகை வழங்குவதற்காக 1.7.1994 முதல் 30.6.1998 வரையிலான காலத்தில் பிறந்த தகுதிவாய்ந்த சிறார்களிடமிருந்து விண்ணப்பங் களை வரவேற்கிறது. ஏதாவது ஒரு ஆசான் அல்லது நிறுவனத்தின் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் கலைப் பயிற்சி பெறுவது விண்ணப்பிக்க அவசியமானதாகும். விண்ணப்ப படிவத்தைப் பின்வரும் முகவரிகளில் நேரிலோ/அஞ்சல் மூலமாகவோ இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

1) பண்பாட்டு ஆதாரங்கள்
மற்றும் பயிற்சி மையம்,
பிளாட்டு எண் 15 ஏ, செக்டார் – 7,
துவாரகா, புதுடெல்லி – 110075.

2) பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும்
பயிற்சி மைய வட்டார மையம்,
முதல்மாடி, பட்டுவளர்ப்புத் துறை கட்டடம்,
ஜிபிலி மலை, ஹைதராபாத்,
ஆந்திரப்பிரதேசம் – 500 033.

3) பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும்
பயிற்சி மைய வட்டார மையம்,
33 ஏ, புதிய பதேபுரா, உதய்பூர்,
இராஜஸ்தான் – 313001.

விண்ணப்பப்படிவம் இம்மையத்தின் இணையத் தளம் www.ccrtindia.gov.in ல் பெற்றுக் கொள்ளலாம்.

புதுடெல்லி பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் 31.12.2007.

இவ்வுதவியைப் பெற்று வளரும் கலைஞர்கள் வளம் பெறக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# சொன்னதைச் செய்தார் கலைஞர்

## -தேர்வான கிராம நிருவாக அலுவலர்கள் நெகிழ்ச்சி

**திரு. டி.எஸ்.சுப்பிரமணியம்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல்.

''சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

என்ற அய்யன் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க ஐந்தாம் முறையாக தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், தேர்தல் நேரத்திலே கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி, ஏழை எளிய மக்கள் வாழ்வில் வழிகாட்டும் கலங்கரைவிளக்காகத் திகழ்கின்றார் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பதவியேற்ற மேடையிலேயே 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி, சத்துணவுடன் வாரம் 2 முறை முட்டை வழங்குதல் என ஆணையிட்டுச் செயல்படுத்தினார். பின்னர் சத்துணவுடன் வாரம் 3 முறை முட்டை வழங்கவும் ஆணையிட்டார்.

அதுமட்டுமல்ல, எது சாத்தியமில்லை என்று கூறினார்களோ அதையெல்லாம் நிறைவேற்றும் வகையில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்குதல், ஏழை எளிய குடும்பப் பெண்களுக்கு இலவசமாக எரிவாயு இணைப்புடன் அடுப்பு என பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு இருக்கின்றார். இளைஞர்கள், எதிர்கால இந்திய நாட்டின் வழிகாட்டிகள். அவர்களின் அமைதியின்மையைத் தீர்க்க, படித்துவிட்டு வேலைவாய்ப்பற்று வீட்டில் முடங்கிக் கிடக்கும் இளைஞர்களின் எதிர்காலம் சிறப்புற, அன்றாடச் செலவிற்குக் கூட பெற்றவர்களை எதிர்பார்த்து அல்லல்பட்டு, அவமானப்பட்டு கிடக்கும் அவர்களின் பிரச்சினையை முதலில் தீர்க்க வேண்டும் என எண்ணி வேலை நியமனத் தடைச் சட்டத்தை ரத்து செய்தார். படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தினார்.



தமிழ்நாடு எங்கும் காலியாக இருந்த 2,500 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வுகள் நடத்த ஆணையிட்டு அதன் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். 2,500 பணியிடங்களுக்கு 6.25 இலட்சம் பேர் தேர்வு எழுதினார்கள். அவர்களுக்கான தேர்வு முடிவுகள் வெளியாயின.

திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி அருகே உள்ள பழைய ஆயர்குடி கிராமத்தைச் சேர்ந்த 17 பேர் தேர்வு எழுதி அனைவரும் வெற்றி பெற்றனர். அவர்களில் சிலரை நேரில் சந்தித்தோம். தங்கக்கொடி (வயது 32) என்பவர் கூறுகையில், ''நான் எம்.ஏ. (டி.கோப்), படித்துள்ளேன். என்னுடைய பெற்றோர் சாதாரண விவசாயக் கூலித் தொழிலாளிகள். சிரமப்பட்டு என்னை படிக்க வச்சாங்க. நானும் எனது நண்பர்களும் படித்து விட்டு வேலை கிடைக்காமல் வேலை நியமனத்தடைச் சட்டத்தால் ரொம்பவும் மனம் நொந்து கிடந்தோம். வேலை கிடைத்தவுடன்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற உறுதியுடன் இருந்தேன். கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்து, வேலை நியமனத் தடைச் சட்டத்தை ரத்து செய்தவுடன் எங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று நம்பிக்கை மனதில் இருந்தது. பல்வேறு துறைகளிலும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தாலே போதும், மூப்பு அடிப்படையில் பணி நியமனம்

என்ற உடன் ரொம்ப சந்தோசமாக இருந்தது. அந்த நேரத்தில் தான் கிராம நிருவாக அலுவலர்கள் பணிக்காக தேர்வுகள் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டவுடன் நாங்கள் மகிழ்ந்தோம். ஆனால், 2,500 இடத்திற்கு 6.25 இலட்சம் பேர் தேர்வு எழுதுகிறார்கள் என்ற போது சற்று கலக்கமாக இருந்தது. இருந்தாலும் எங்கள் கிராமத்தில் உள்ள பட்டதாரிகள் சிலர் இணைந்து ஒற்றுமையாக விடா முயற்சியாக நன்கு படித்தோம்; தேர்வு எழுதினோம். தகுதி வாய்ந்தவர்களுக்கு நிச்சயம் வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். கலைஞர் அரசின் மீது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. நாங்கள் எதிர்பார்த்தது நடந்தது. எங்களுடைய படிப்புக்கு வேலை கிடைத்துள்ளது. நாங்கள் இந்தப் பதவியோடு இருக்கப் போவதில்லை, இன்னும் குரூப்–1, குரூப்–2 தேர்வுகள் எழுதுவோம். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆவோம் என்ற உறுதியோடு நம்பிக்கையும் எங்களுக்கு வந்துவிட்டது. இதற்குக் காரணமான தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்'' என்றார்.

திலகமணி (வயது 30) என்பவர் கூறுகையில், "நான் எம்.ஏ. (வரலாறு) படித்துள்ளேன். கடந்த 5 வருடமாக வேலை இல்லாமல் கஷ்டப்பட்டேன். எனது பெற்றோர்களும் கஷ்டப்பட்டார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அவருடைய நேர்மையான நடவடிக்கை களினால் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த எங்களுக்கு அரசு வேலை கிடைத்துள்ளது'' என்றார்.

ஜெயபிரஷ்னேவ் (வயது 32) – கலைவாணி (வயது 30) இருவரும் கணவன் மனைவி ஆவர். இருவரும் கிராம நிருவாக அலுவலருக்குத் தேர்வு பெற்றுள்ளார்கள். இவர்கள் கூறுகையில், "கடந்த 5 வருடம் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டோம். விவசாய பூமியும் வானம் பார்த்த பூமியாகும். வயது வேறு அதிகமாக அதிகமாக, எங்களுக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. அச்சூழலில் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பணி நியமனத் தடைச் சட்டத்தை ரத்து செய்து, வேலைவாய்ப்பிற்கான வயது வரம்பை 5 வருடம் தளர்த்தி மூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்ய உத்திரவிட்டது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. கலைஞர் தந்த "வேலைவாய்ப்பற்ற இளைஞர் நிதியுதவித் திட்டம்'' எங்களுக்கு மிகுந்த உதவியாக இருந்தது. ஒரு தேர்வுக்கு விண்ணப்பப் படிவம் வாங்க ரூ.200, ரூ.250 செலவாகும். தேர்வில் வெற்றி பெற நன்றாகப் படித்தோம். கிராம நிருவாக அலுவலர் தேர்வுக்குப் புத்தகம் வாங்க இந்த உதவித் தொகையைப் பயன்படுத்தினோம். முறையாகத் தேர்வு நடத்தி வசதியற்ற எங்களுக்கு வேலைவாய்ப்பு அளித்த முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று அத் தம்பதிகள் கூறினார்கள்.

இவர்கள் மட்டுமல்ல. இந்தக் கிராமத்தில் தேர்வு பெற்ற அனைத்து இளைஞர்களின் குரலும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு கடமைப்பட்டுள்ளோம் என்ற ஒருமித்த குரலாகவே இருந்தது. இவர்களின் பெற்றோர்களை கேட்டபோது, "கால் ரூபாய் வாங்கினாலும் கவர்மெண்ட்ல சம்பளம் வாங்கணும், ஆடு மேய்ச்சா கூட கவர்மெண்ட் ஆடா பார்த்து மேய்க்கனும்னு அந்த காலத்துல பெரியவங்க பழமொழி சொல்லுவாங்க. ஆனால் இந்த காலத்தில அரசாங்க வேலையை நினைச்சு பார்க்க முடியுமா? கடந்த 5 வருடம் எங்க பிள்ளைங்க பட்ட கஷ்டம் சொல்ல முடியாதுங்க. படிச்சு வேலைக்குப் போய் சோறு போடுவாங்கன்னு பார்த்தா நாங்க அவங்களுக்கு பணம் கொடுக்கும் நிலைமை இருந்தது. ஆனால் தேர்தல் நேரத்தில் கலைஞர் சொன்ன வாக்குறுதி வீணாப் போகல்ல. சொன்னதைச் செய்தார் கலைஞர். இப்ப கோயில்ல நாங்க கடவுளைப் பார்க்கலை;



கலைஞரைத்தான் கடவுளாக நினைக்கிறோம். தேர்வு முடிவு வந்த நாளிலிருந்து எங்கள் குடும்பங்களில், கிராமத்தில் ஒரே சந்தோசம். இனி என் பொண்ணுக்கும் கல்யாணம் நடக்கும்'' என்று கண்ணீர் ததும்ப அவர்கள் சொன்னபோது மனம் நெகிழ்ந்தது.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு''

– குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும் என்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களை அகிலமே வாழ்த்திக் கொண்டிருக்கிறது.

# 100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

TNSC BANK

## TNSC வங்கி

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீடு ஆணை எண் 1564/ ... 2007, நாள் : 11.10.2007

இணையதளம் www.tnscbank.com


## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி அமைச்சர்களின் பொறுப்புகள் மாற்றம்

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களது ஆலோசனைப்படி அமைச்சர்களின் துறைகள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

| அமைச்சர்களின் பெயர் | துறைகள் விவரம் |
|---|---|
| 1. **திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்** | மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு, மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலம்) |
| 2. **திரு.என்.சுரேஷ்ராஜன்** | சுற்றுலா மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் (சுற்றுலா, பத்திரப்பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்) |
| 3. **திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** | பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர்) |



# கோ-ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை

**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**



கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

செ.மி.தொ.இ / 602 / வரைகலை / 2007

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08




தமிழரசு